AR
50

சித்தலிங்கமடம்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2016 - திருவள்ளுவர் ஆண்டு 2047

சித்தலிங்கமடம்

சித்தலிங்கமடம்

பொதுப் பதிப்பாசிரியர்
முனைவர் தா. கார்த்திகேயன்
ஆணையர்

ஆசிரியர்
திருமதி. இரா. பிரசன்னா

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை-600 008
2016 - திருவள்ளுவர் ஆண்டு 2047

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**Siddalingamadam**
Genaral Editor	:	**Dr. D. Karthikeyan, I.A.S.,**
Editor	:	**R. Prasanna**
Copy Right	:	Tamilnadu State Department of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	282
Year	:	2016
Type Point	:	13
No. of Pages	:	176
No. of Copies	:	1000
Paper Used	:	80Gsm Maplitho
Printer	:	Tharamani Womens Co-operative Society, 46, Peters Road, Royapettah, Chennai-600 014
Publisher	:	State Dept. Of Archaeology, Tamil Valarchi Valagam, Thamizh Salai, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 60/-

உள்ளடக்கம்

பதிப்புரை

1. சித்தலிங்கமடம் 1
2. வரலாற்றில் மிலாடு 7
3. திருப்புலிபகவர் கோயில் 24
4. கட்டடக்கலை 42
5. இவ்வூரிலுள்ள பிறகோயில்கள் 53
6. செப்புத்திருமேனிகளும் மரச்சிற்பங்களும் 60
6. வழிபாடுகளும் திருவிழாக்களும் 68
7. கல்வெட்டுச் செய்திகள் 73
8. சமுதாய அமைப்பு 120
9. அட்டவணை 130
10. நன்றியுரை 147
11. துணைநின்ற நூல்கள் 149
12. நிழற்படங்கள் 151

அட்டைப்பட விளக்கம்

முன் அட்டை :

வியாக்கரபாதீஸ்வரர் கோயில் - விமானம் மற்றும் விநாயகர்

பின் அட்டை :

வியாக்கரபாதீஸ்வரர் கோயில் - முதல் திருச்சுற்று மண்டபம்

முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப.,
ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ்வளர்ச்சி வளாகம்,
தமிழ்ச்சாலை, எழும்பூர்,
சென்னை - 600 008.

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், தொல்லியல், அகழாய்வு, தமிழகக் கோயில்களின் கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத்திருமேனி ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்கவேண்டி 1973-74-ஆம் ஆண்டு 'கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம்' ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப்பட்டம் பெற்ற மாணவர்களுக்கு 'கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்' என்னும் முதுநிலைப் பட்டயம் ஒன்றினை வழங்குகிறது. தமிழக அரசு இம்மாணவர்களுக்கு மாதம் ரூ.2000/- பயிலுதவித் தொகை வழங்குகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 219 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்களது பயிற்சிக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்வு செய்து அவ்வூர் மற்றும் அவ்வூர் கோயில்களைப் பற்றி விரிவாக ஆய்வு செய்து ஆய்வேடு ஒன்றினைச் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேடுகளில் இதுவரை 36 ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 1995-1996-ஆம் ஆண்டு பயின்ற திருமதி. இரா. பிரசன்னா அவர்கள் எழுதிய 'சித்தலிங்கமடம்' என்னும்

ஆய்வேடு தற்போது 37-ஆவது நூலாக வெளிவருகிறது. இந்நூல் வியாக்கரபாதீஸ்வரர் கோயிலின் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவை பற்றி இக்கோயில் கல்வெட்டுகள் விவரிக்கின்றன. முற்காலச் சோழர், பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர், விசயநகர அரசு, சம்புவராயர் மற்றும் காடவராயர் ஆகியோர்களின் அரசியல் வரலாறு, அக்கால சமுதாய மற்றும் பொருளாதாரச் செய்திகள், பண்பாடு மற்றும் சமயம் முதலான செய்திகள் இக்கோயில் கல்வெட்டுகளை ஆய்வு செய்து விரிவாக இந்நூலில் கூறப்படுகிறது.

'சித்தலிங்கமடம்' நூலினைப் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட இத்துறை உதவி கண்காணிப்புக் கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம் மற்றும் காப்பாட்சியர் திரு. ஜெ. ரஞ்சித் ஆகியோருக்கு எனது உளம் கனிந்த பாராட்டுகள்.

இந்நூலினை நல்ல முறையில் கணினியில் தட்டச்சு (DTP) செய்து அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி தே.சத்தியவதி மற்றும் அச்சுப்பிழைத்திருத்திய திருமதி ச.சரஸ்வதி ஆகியோருக்கும் எனது பாராட்டுகள்.

இந்நூலினை வெளிக்கொணர 2015-2016-ஆம் ஆண்டு தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் (TANNI) கீழ் நிதியுதவி நல்கிய தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வரலாற்று மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் பயனுடையதாக அமையும்.

ஆணையர்

சித்தலிங்கமடம்

அமைவிடம்

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தில் திருக்கோவிலூரிலிருந்து கிழக்கே 8 கி.மீ. தொலைவில் 'சித்தலிங்கமடம்' என்னும் சிற்றூர் அமைந்துள்ளது.

தென் ஆற்க்காடு மாவட்டம்

ஆற்க்காடு என்னும் நகரம் வேலூர் மாவட்டத்தில் உள்ளது. அத்தி மரங்கள் நிறைந்த பகுதி என்பதால் ஆற்க்காடு என்று பெயர் பெற்றது. இந்நகரம் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய வரலாற்றில் தனிச்சிறப்பிடம் பெற்று விளங்கியது. ஆற்க்காட்டைத் தலைநகராகக் கொண்டு நவாப்புகள் ஆட்சி செய்தனர். நவாபுகளின் உதவியால் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டது. வடஆற்க்காடுக்கு வேலூர் தலைநகராகவும், தென்னாற்க்காடு மாவட்டத்திற்கு கடலூர் தலைநகராகவும் விளங்கின.

விழுப்புரம் மாவட்டம்

தென்ஆற்க்காடு மாவட்டம் 30.9.93 அன்று இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை தென் ஆற்க்காடு வள்ளலார் மாவட்டம் என்றும், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் என்றும் பிரிந்தன. விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்டு பிரிக்கப்பட்டது. தற்போது விழுப்புரம் மாவட்டம் என்றே அழைக்கப்படுகிறது. ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சித்தலிங்கமடம் என்னும் இவ்வூர் இம்மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

திருக்கோவிலூர்

சங்க காலத்தில் திருக்கோவிலூர் பகுதி 'மலைநாடு' என்றும் 'மலாடு' என்றும் பெயர் பெற்றிருந்தது. திருக்கோவிலூருக்கு மேற்கே அமைந்திருந்த பகுதி 'மகத நாடு' என்றும், கிழக்குப் பகுதி 'திருமுனைப்பாடி நாடு' என்றும் பெயர் பெற்றிருந்தது. 584 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட திருக்கோவிலூர் வட்டத்தில் திருக்கோவிலூர், திருநாவலூர், திருவெண்ணைநல்லூர், முகையூர் ஆகிய ஒன்றியங்கள் உள்ளன. தேவாரம் பாடிய அப்பரும், சுந்தரரும் திருமுனைப்பாடி நாட்டில் தோன்றியவர்கள். தேவார மூவர் முதலிகளால் பாடப்பெற்ற ஏழு சிவத்தலங்கள் இவ்வட்டத்தில் உள்ளன.

திருவெண்ணெய் நல்லூர்

கவிச்சக்கரவர்த்தி கம்பனை ஆதரித்த சடையப்ப வள்ளல் வாழ்ந்த ஊர் திருவெண்ணைநல்லூர் ஆகும். இவ்வூரில் வழக்கு வென்ற அம்பலம் என்ற மண்டபம் ஒன்று இருக்கிறது. சுந்தரமூர்த்தி நாயனார் மீது இறைவன் வழக்குத் தொடுத்து வழக்கை வென்றதை நினைவூட்டுவதற்காக இம்மண்டபத்தினை அமைத்துள்ளனர்.

சித்தலிங்கமடம்

திருக்கோவிலூரிலிருந்து கிழக்கே 8 கி.மீ. தொலைவில் விழுப்புரம்-கடலூர் நெடுஞ்சாலையில் சித்தலிங்கமடம் என்னும் இவ்வூர் அமைந்துள்ளது. திருக்கோவிலூரிலிருந்து 22 கி.மீ. தொலைவிலுள்ள திருவெண்ணைய் நல்லூருக்கு இடையே உள்ள ஊர்களில் சித்தலிங்கமடம் எனும் இவ்வூரே முக்கியத்துவம் வாய்ந்த ஊராகத் திகழ்கிறது. இவ்வூர் (1800 ஏக்கர்) ஏறத்தாழ 7,848 ச.மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

எல்லைகள்

சித்தலிங்கமடம் எனும் இவ்வூருக்கு கிழக்கே மருதூரும், தெற்கே மெய்யூர், வீரசோழபுரம் ஆகிய ஊர்களும், மேற்கே எடையாறு, புதுப்பாளையம் ஆகிய ஊர்களும், வடக்கே குன்னத்தூர், எடப்பாளையம் ஆகிய ஊர்களும் அமைந்துள்ளன. மேலும் இவ்வூரைச் சுற்றி ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோவிலூர் இவ்வூருக்கு மேற்கிலும், சடையப்ப வள்ளல் தோன்றிய ஊரும், தேவாரம் பாடிய சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட ஊருமான திருவெண்ணெய்நல்லூர் மற்றும் திருநாவலூர் ஆகியவை சித்தலிங்கமடத்தைச் சுற்றியுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்களாகும். சங்ககாலத்தில் மலையமான் திருமுடிக்காரி, ஏனாதி ஆகிய சிற்றரசர்களால் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்யப்பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர் திருக்கோயிலூர் ஆகும்.

இயற்கை வளம்

சித்தலிங்கமடம் தென்பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்த செழிப்பான ஊராகும். இவ்வூரின் வடபகுதியில் பெண்ணையாறும் அதற்கு அருகில் மலட்டாறும் ஓடுகின்றன. திருக்கோவிலூர் அணைக்கட்டிலிருந்து தென்பெண்ணை யாற்றின் குறுக்கே அமைந்துள்ள மலட்டாற்றிலிருந்து சித்தலிங்கமடம் ஏரிக்கு பாசனக் கால்வாய் நேரிடையாக இணைக்கப்பட்டுள்ளது. இக்கால்வாய் வழியாக ஏரிப் பாசனத்துக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கிறது. தென் பெண்ணை ஆற்றின் இருமருங்கிலும் நிலத்தடி நீர் மிகுதியாக உள்ளதால் ஆற்றை ஒட்டியுள்ள இவ்வூர் நீர் வளம் குன்றாத ஒரு கிராமமாகத் திகழ்கிறது. இவ்வூரில் மிகப்பெரிய ஏரியான சித்தேரியும், சிறிய ஏரி ஒன்றும் உள்ளன.

சித்தேரி

சித்தலிங்கமடத்தில் காணப்படும் மிகப் பெரிய ஏரியாகும். இவ்வேரி 237 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இவ்வூர் கோயிலிலுள்ள முதலாம் இராசராச சோழனின் 28-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் (கி.பி. 1012-13) 'ஸ்ரீராஜராஜப்பேரேரி' என்று குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வேரிதான் இப்போது 'சித்தேரி' என்றழைக்கப்படும் ஏரியாக இருத்தல் வேண்டும். திருக்கோவிலூர் அணைக்கட்டிலிருந்து இரண்டு வாய்க்கால்கள் இவ்வேரியுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளன. இவ்வேரியின் வாய்க்கால்கள் தான் அக்காலத்தில் 'மதுராந்தகன் வாய்க்கால்' எனப் பெயர் பெற்றிருந்தது. இவ்விரு வாய்க்கால்கள் மூலம் ஏரிப்பாசனம் செய்யப்படுகிறது. இங்கு நெல், கரும்பு, வாழை, நிலக்கடலை முதலான பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இவ்வேரிப்பாசனமே இவ்வூரை வளமடையச் செய்கின்றது. இவ்வூரின் தெற்கு பக்கம் நன்செய் நிலங்களும் மற்ற மூன்று திசைகளில் புன்செய் நிலங்களும் உள்ளன.

ஊரின் வடக்கு பகுதியில் 'இராகவன் வாய்க்கால்' என்றும் 'நானா வாய்க்கால்' என்றும் இரண்டு பெரிய வாய்க்கால்கள் செல்கின்றன. திருக்கோவிலூர் அணைக்கட்டிலிருந்துதான் இதற்கும் தண்ணீர் பெறப்படுகிறது. முதலாம் இராசராசனின் 28-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1012-13) கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ள 'அருண்மொழித்தேவன் வாய்க்கால்', 'கள்வன் வாய்க்கால்' இவைகளாகத்தான் இருக்கவேண்டும். மழைக்காலங்களில் இவ்வூரின் கிழக்குப் பகுதியில் உள்ள பல கிராமங்களுக்கு இராகவன் வாய்க்கால் மூலம் நீர் பாய்கிறது.

சமுதாய அமைப்பு

சித்தலிங்கமடத்தில் இந்துக்களே பெரும்பான்மையினர் களாக உள்ளனர். இவ்வூர் உடையார், வன்னியர், பட்டியல்

இனத்தவர், வேளாளர், குயவர், நாவிதன், வண்ணார், இருளர், ஒட்டர், யாதவர் ஆகியோர் சேர்ந்து வாழும் சமுதாய அமைப்பைப் பெற்றுத் திகழ்கிறது. பெரும்பாலானவர்கள் உடையார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நிலச்சுவான்தார்களாக உள்ளனர். இவர்கள் கோயில் நிர்வாகங்களை மேற்கொள்வதில் முக்கியத்துவம் பெறுகின்றனர். இவர்கள் ஊரின் பிரதான பகுதிகளில் வசித்து வருகின்றனர். இவ்வூர் மக்கள் விவசாயத்தையே முக்கியத் தொழிலாக மேற்கொண்டுள்ளனர். நன்செய், புன்செய் நிலங்களில் நன்செய் நிலங்களே மிகுதியாக உள்ளன.

ஊரும் பேரும்

தற்பொழுது வழக்கிலிருக்கும் சித்தலிங்கமடத்தின் பழமையான பெயர் "சிற்றிங்கூர்" என்பதாகும். இச்செய்தியினை இங்குள்ள கல்வெட்டுகளின் வாயிலாக அறிகிறோம். திருப்புலிபகவர் கோயிலில் உள்ள மிகப்பழமையான கல்வெட்டான முதலாம் பராந்தகன் காலம் முதல் அனைத்து கல்வெட்டுகளிலும் இவ்வூர் "சிற்றிங்கூர்" என்றே குறிப்பிடப் பெற்றுள்ளது. இவ்வூருக்கு வடகிழக்கில் பேரங்கியூர், மாரங்கியூர் என்ற ஊர்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வூர்கள் கல்வெட்டுகளில் பேரிங்கூர், மாரீங்கூர் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. சித்தலிங்கமடத்தில் உள்ள கல்வெட்டுகளில் பேரிங்கூர்ப் பெயரனேன், பேரிங்கூர் நாட்டுப் பேரிங்கூர் வடகரையுடையான் என்ற ஆட்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. பெரிய, சிறிய என்றளவில் பேரிங்கூர், சிற்றிங்கூர் என்று குறிப்பிடப்படுவது ஒப்புநோக்கத்தக்கதாகும்.

சிற்றிங்கூரிலிருந்து வடகிழக்கே 30 கி.மீ. தொலைவில் 'பேரிங்கூர்' உள்ளது. சிற்றிங்கூர் என்பது கல்வெட்டுகளில் 'பிரம்மதேயமான சிற்றிங்கூர்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சிற்றிங்கூர் பிராமணர்களுக்குத் தானமாகக் வழங்கப்பட்ட ஊர்

என்பதை அறியலாம். முதலாம் குலோத்துங்கன் காலத்திய வடமொழி சாசனங்கள் இரண்டிலும் *ஸிஜ்ஞிஂமயாஃ* (சித்தலிங்கயாம் நஹ) என்று வருகிறது. அந்தணர்கள் வாழ்ந்த இந்த பகுதி இம்மன்னன் காலத்தில் ‘சித்தலிங்கா’ என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

விசயநகர மன்னர் சதாசிவ தேவராயர் காலத்தில் இவ்வூர் ‘திருப்புலிபகவ நல்லூர்’ என்று அழைக்கப்பட்டுள்ளது. பிராமணர் தெருத் திண்ணை ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள பிற்காலக் கல்வெட்டில் ‘சிற்றிங்கமடம்’ என்று இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து சிற்றிங்கமடம் என்ற பெயர் பின்னாளில் ‘சித்தலிங்கமடம்’ என்று மருவியுள்ளது எனத் தெரிகிறது. இவ்வூரில் தவத்திரு ஞானானந்த சுவாமிகள் மடம் ஒன்றும் இருந்துள்ளது. இம்மடம் இன்றும் பிராமணர் தெருவில் கோயிலுக்குச் செல்லும் வழியில் உள்ளது. இவ்வூரில் சித்தர்கள் பலர் வசித்து வந்ததாலும், சைவ மடம் ஒன்று இங்கு இருந்ததாலும் இவ்வூருக்கு சித்தலிங்கமடம் என்ற பெயர் ஏற்பட்டதாக ஊரார் கூறுகின்றனர்.

வரலாற்றில் மிலாடு (அ) மலாடு

சங்ககாலத்தில் மலையமான்களின் நாடாக விளங்கிய திருக்கோவிலூர் பகுதி இடைக்காலக் கல்வெட்டுகளில் மிலாடு (அ) மலாடு என்று அழைக்கப்பட்டது. இப்பகுதியை ஆண்ட சிற்றரசர்கள் சங்ககாலத்தில் மலையமான்கள் என்றும், இடைக் காலத்தில் மிலாடுடையார் (அ) மலாடுடையார் என்றும் அழைக்கப் பட்டுள்ளனர். சோழ நாடு, பாண்டிய நாடு ஆகியவை எப்படி சோணாடு, பாண்டி நாடு என்று மருவி அழைக்கப்பட்டனவோ அதுபோல மலையமான் நாடும் ‘மலாடு’ என்று அழைக்கப்பட்டு ‘மிலாடு’ என்று மருவியுள்ளது.

தென்பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்த கோவலூரைத் தலைமையிடமாகக் கொண்டு திருமுடிக்காரி, சோழிய ஏனாதி, திருக்கண்ணன் போன்ற சிற்றரசர்கள் அரசாட்சி செய்தனர். “துஞ்சா முழவின் கோவற் கோமான்”; “நெடுந்தேர்க் காரி” என்று சங்க இலக்கியம் திருமுடிக்காரியை ‘கோவற்கோமான்’ என்றழைக்கின்றது.

‘‘பறையிசை யருவிமுள்ளூர்ப் பொருந’’ என்று புறப்பாடலில் (புறம். 126) அருவிகள் நிறைந்த முள்ளூரின் பொருநனாகவும் “முரண்கொள் துப்பிற் செவ்வேல் மலையன் முள்ளூர்க் கானம்” என்று முள்ளூர்க் கானத்துச் செவ்வேல் மலையனாகவும் காட்டப்படுகின்றான். இவன் முள்ளூர்ப் போரில் ஆரியரை தோற்றோடச் செய்த செய்தியும் கீழ்வரும் நற்றிணைப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நற்றிணை.170)

“ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது
ஒரு வேற்கு ஓடியாங்கு”

இவன் முடியுடைய மூவேந்தருக்குத் துணையாக இருந்தான் என்பதையும் அறிகின்றோம். கொல்லி மலைப்பகுதியை ஆண்ட ஓரியுடன் இவன் போரிட்டிருக்கின்றான். காரி தம் வாழ்நாளில் பெரும்பகுதியைப் போரிடுவதிலேயே செலவிட்டான். இறுதியில் இவன் நாடும் தலைநகரும் அதியன் என்பவனால் தாக்கப்பட்டன என்ற செய்தியை

"முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரணகு திகரி யேந்திய தோளே" (புறம். 99)

என்ற புறப்பாடலில் அதியனை ஔவையார் புகழ்வதன் மூலம் அறியமுடிகிறது. இப்போரில் திருமுடிக்காரி இறந்திருக்கவும் கூடும். பிறகு அதியனை சேர மன்னன் வெற்றிகொண்டனர் என்பர்.

சோழிய ஏனாதி திருக்கண்ணன் என்ற மற்றொரு மலையமானை மாறோக்கத்து நப்பசலையார் புறம் 174-ஆவது பாடலில் குறிப்பிடுவதிலிருந்து மலையமான் திருமுடிக்காரிக்கு பின் இவன்தான் திருக்கோவிலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான் என்று தெரிகிறது. சோழனிடம் நட்பு பூண்டு அவனுக்குத் துணையாக இருந்ததனால் 'சோழிய ஏனாதி' என்னும் பட்டமும் பெற்றான் என்று புறப்பாடலால் அறிகின்றோம்.

இந்த மலையமான்கள் வாழ்ந்த பகுதி மலைகள் நிறைந்தது ஆதலால் மலையமான்கள் என்றும், சேரர் வழிக்குடியினர் இப்பகுதிக்கு இடம்பெயர்ந்ததால் அப்பெயர் பெற்றனர் என்றும் கூறுவர். நச்சினார்க்கினியர் குடிப்பெயருக்கு எடுத்துக்காட்டாகச் சேரமான், மலையமான் ஆகியோரைக் குறிப்பிடுவது இங்கு கருதத்தக்கது. ஆனால் சேரர் வழிக்குடியினர் இடம்பெயர்ந்ததால் அப்பெயர் பெற்றனர் என்பதற்கு இதுவரை வலுவான சான்றுகள் இல்லை.

பல்லவர் காலம்

கி.பி. 550 முதல் 903 வரை பல்லவர்களின் ஆட்சி தொண்டை மண்டலத்தில் நிலவியிருந்த காலத்தில் மலையமான்கள் சிலர் இவர்களின்கீழ் அரசாட்சி செய்தனர். பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 630-668) குறுநில மன்னன் "பொன் மாந்தனார்" என்பவன் செங்கம் வட்டத்திலுள்ள மேற்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தினான் என்றும், இவனுடைய ஆட்சிப்பரப்பு தர்மபுரி மாவட்டத்தில் உள்ள குளத்தூர் வரை பரவியிருந்தது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

செங்கம் பகுதியில் கிடைக்கும் நடுகற்களில் இம்மன்னனைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இந்த காலகட்டத்தில் பொன்மாந்தனாரின் நாட்டுக்குக் கிழக்கே மலையமான் நாடு அமைந்திருந்தது. மலையமான்கள் கீழ்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த காலத்தில் பொன் மாந்தனார் மேற்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்திருக்க வேண்டும்.

இரண்டாம் நந்திவர்மன் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 730-795) வாணகோவரையன் சித்தவடத்து அடிகள் என்பான் மலைய நாட்டை ஆட்சி செய்தான். மணலூர்பேட்டையின் வடக்குப் பகுதி 'சித்தப்பட்டினம்' என்னும் ஊர் உள்ளது. இவனது பெயரால் இப்பெயர் பெற்றது என்பர். சித்தவடம் என்பது இவ்வூரின் பழைய பெயர் ஆகும்.

முற்கால சோழர் காலம்

கி.பி. 846 - 1070 வரை ஆட்சி செய்த சோழர்களை 'முற்காலச் சோழர்' என்று வரலாற்று ஆசிரியர்கள் அடையாளம் காட்டுவர். அதாவது விசயாலயன் முதல் அதிராசேந்திரன் வரையிலான சோழ மன்னர்களை முற்காலச் சோழர் என்பர்.

இவர்கள் காலத்து மலைய மன்னர்களைப் பற்றிக் குறிப்புகள் கிடைக்கின்றன. இம்மலைய மன்னர்கள் பெரும்பாலும் 'சித்தவடவர்' என்றும் 'மிலாடுடையார்' என்றும் அழைக்கப்பட்டனர்.

முதலாம் பராந்தக சோழனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி.907-953) இராட்டிரகூட மன்னன் கன்னர தேவன் என்னும் மூன்றாம் கிருஷ்ணன் என்பவன் சோழ நாட்டின்மீது படையெடுத்து வந்தான். கி.பி. 949-இல் நடைபெற்ற தக்கோலப் போரில் சோழர் தோற்கடிக்கப்பட்டதனால் மலைய மன்னர்கள் இராட்டிரகூடரின் கீழ் சிற்றரசர்களாக மாறினர் என்ற செய்தி திருநாமநல்லூர் கல்வெட்டின் வாயிலாக அறிகிறோம்.

சத்திநாதன் என்னும் முதலாம் சித்தவடவன் என்பவன் மூன்றாம் கிருஷ்ணனின் 28, 30-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றான். அதாவது இந்த சித்தவடவன் இராட்டிரகூடரை தனக்கு மேற்பட்ட பெரும் மன்னனாக ஏற்றுக் கொண்டுள்ளான், பின் சுந்தரசோழனின் ஆட்சியின்போது மீண்டும் சோழர்களின்கீழ் வந்ததாகத் தெரிகிறது. முதலாம் பராந்தகன் காலத்தில் வாழ்ந்த மலைய மன்னன் கிளியூர் பெருமானார் என்பவன் மிலாடுடையார் கயிலூர்ப் பெருமானார் என்று அழைக்கப்பெற்றுள்ளான். முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில் வீரசோழ மிலாடுடையான் என்னும் சிறுமன்னன் ஒருவனும் மலையநாட்டை ஆண்டுள்ளான்.

சத்திநாதன் என்பவனுக்கு சித்தவடவன் மிலாடுடையார், சித்தவடத்து அடிகள், சாமுண்ட தேவன் ஆகிய பெயர்கள் இருந்தன.

மலாடு என்கிற ஜனநாத வளநாடு

மலையமான் நாட்டுக்கு 'ஜனநாத வளநாடு' என்று பெயர் இருந்தமை கல்வெட்டுகளால் அறியக் கிடைக்கின்றது.

'ஜனநாதன்' என்பது இராசராசனுடைய விருதுப் பெயர்களில் ஒன்றாகும். இம்மன்னனின் காலத்தில் சோழ மண்டலம் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டன. அவ்வகையில் மலாட்டினை மையமாகக் கொண்டு 'ஜனநாத வளநாடு' தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஆத்தூர் வட்டத்திலுள்ள ஆறகளூர் ஊர் கல்வெட்டுகள் மலாடான ஜனநாத வளநாடு ஆற்றூர் கூற்றத்தில் ஆறகளூர் இருப்பதாக தெரிவிக்கின்றன. சித்தலிங்கமடம் ஊர்க் கல்வெட்டுகளிலும் இவ்வூர் மலாடாகிய ஜனநாதவள நாட்டு குறுக்கை கூற்றத்தில் 'சிற்றிங்கூர்' இருந்துள்ளதை குறிக்கப்பட்டுள்ளது. இடைக்காலத்தில் சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தின் ஒரு பகுதியும் திருவண்ணாமலை வட்டத்தின் ஒரு பகுதியும் மலாடு நாட்டுடன் இருந்துள்ளன என்றறியலாம்.

முதலாம் இராசராசன் காலத்தில் (985-1014) விக்கிரம சோழ மிலாடுடையார் அம்மன்னனின் கீழ் அதிகாரியாக பணிபுரிந்துள்ளான். இவன் பார்கவ கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்று சாசனம் குறிப்பிடுகிறது. இவனுக்கு இராமன் சித்தவடவன், இராமதேவன், சித்தவடவன், மிலாடுடையார் இராமன் நாட்டடிகள் முதலான பெயர்களும் உண்டு. இக்காலத்தில் இராட்டிரகூடரிட மிருந்து இப்பகுதி சோழர்களிடம் முழுவதுமாக வந்துவிட்டது. மலையமான்களும் சோழர்களின் சிற்றரசர்களாக ஆயினர். இவன் முதலாம் இராசராச சோழனின் அம்மானாக இருத்தல் வேண்டும் என்று கருதப்படுகிறான். முதலாம் இராசராசனின் பட்டத்தரசி வானவன் மாதேவி இவ்விக்கிரம சோழ மிலாடுடையாரின் மகளாக இருக்க வேண்டும் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் யூகிக்கின்றனர்.

விக்கிரம சோழ மிலாடுடையார் காலத்தில் வெண்மானுடைய நீலன் மாதேவனான மலையர் பீம மிலாடப் பேரரையன் என்பவன்

அரசு அதிகாரியாக இருந்துள்ளான். இவன் சிறந்த படைத்தளபதி. உத்தம சோழ மிலாடுடையார்க்குப் பின் மிகவும் வலிமை வாய்ந்தவராக இவரே விளங்கினார். பார்கவ கோத்திரத்து பராந்தக யாதவ பீமனான உத்தம சோழ மிலாடுடையாரின் கொடை பற்றிக் கூறும் கல்வெட்டின் முதற்பகுதி எலவானாசூர் சிவன் கோயிலின் வடக்குச் சுவரில் உள்ளது.

பிற்காலச் சோழர்

முதலாம் குலோத்துங்க சோழன் காலம் தொடங்கி மூன்றாம் இராசேந்திரன் காலம் வரையிலான (கி.பி. 1170-1279) மன்னர்கள் 'பிற்காலச் சோழர்' என்று வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இம்மன்னர்கள் காலத்தில் மிலாடு பகுதியில் சிற்றரசர்களாக விளங்கியவர்கள் கோவலராயர், சேதிராயர், மலைய குலராயர் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

தென்பெண்ணையாற்றின் வடபகுதியில் ஆட்சி உரிமை பெற்றவர்கள் 'வாணகோவரையர்' என்னும் பட்டம் பெற்றிருந்தனர். சோழ மன்னர்கள் பாண்டிய நாட்டில் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டு 'சோழ பாண்டியர்' என்று பட்டம் புனைந்து அரசப்பிரதிநிதியாக இருப்பது போல் மலையமான்களில் சிலரும் 'வாணகோவரையர்' என்னும் பட்டம் புனைந்து வாணகப்பாடி நாட்டுக்குத் தலைவர்களாக விளங்கினர் என்பது தெரிகிறது.

எடுத்துக்காட்டாக இராசேந்திர சோழ சேதிராயனின் மகன் சோழ மகதை நாடாழ்வான் என்றும், குலோத்துங்கச் சேதிராயனின் மகன் எதிரிலி சோழ வாணகோவரையன் என்றும், பொன் பரப்பின வாணகோவரையனின் மகன் இராசராச சேதிராயன் என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றனர்.

சேதி மண்டலம்

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் மலையமான்கள் தம்மை சேதிராயர் என்று கூறிக்கொள்கின்றனர். மலையமான்களும்

சேதிராயரும் ஒருவரே ஆவர். ஒரே அரசன் மலையமான் என்றும் சேதிராயன் என்றும் கூறப்பெறுவதை பல கல்வெட்டுகளில் காண்கிறோம்.

"சேதிநன்னாட்டு நீடு திருக்கோவலூரில் மன்னி" என்று மலைய நாட்டைச் சேதிநாடு என்கிறார் சேக்கிழாரடிகள். சேதிநாடு சேதிராயர் என்பது இவர்களின் வடநாட்டுப் பற்றை உணர்த்துவதாக உள்ளது. வடக்கே இருந்த சேதிநாட்டோடு இவர்களுக்கு இருந்த பற்று அல்லது தொடர்புக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை.

திருவண்ணாமலை வட்டத்திலுள்ள ஆவூர் என்னும் சிற்றூர், சேதி மண்டலத்தில் இருந்ததாக இங்குள்ள கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

மலையமான் நாட்டை ஆண்ட குறுநில மன்னர்களில் சேதிராயரும் ஒருவர். இவர் இயற்றிய பாடல்கள் சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் 9-ஆம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

ஏயு மாறெழிற் சேதிபர்கோன் தில்லை
நாயனாரை நயந்துரை செய்தன
தூயவாறுரைப் பார்துறக் கத்திடை
ஆய இன்பம் எய்தியிருப்பரே

இப்பாடலில் தம்மை 'சேதிபர்கோன்' என்று கூறிக் கொள்வதினின்றும் இச்சேதிராயர் சேதி நாட்டு மன்னர் என்பது எளிதில் விளங்கும். இவர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார்.

டாக்டர் இராசமாணிக்கனார் அவர்கள் இச்சேதிராயர் முதலாம் குலோத்துங்கனுக்குப் பிற்பட்டவராகக் குறிப்பிடுகின்றார். குலோத்துங்கனுக்கு முற்பட்டவர் ஆவார் என்றும் சில வரலாற்றாசிரியர்கள் கூறுவர்.

இக்காலத்தில் பெரும்பான்மையான மிலாடுடையார்கள் சேதிராயர் என்னும் அடைமொழியைப் பூண்டுள்ளனர் என்பது தெரிகிறது.

கோப்பெருஞ்சிங்கன் காலத்திய மலையமான்கள்

சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமான இவன் விழுப்புரம் மாவட்டம் சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன். பிற்கால பல்லவர்களின் குலத் தோன்றல் ஆவான். இக்காலகட்டத்தில் வாழ்ந்த மலையர்களைத் தன்பக்கம் ஈர்த்து சோழர்களுக்கு எதிராக களம் சேர்த்தான். இதனால் சோழப் பேரரசு வலிமை குன்றியது என்பர்.

மலைய குல-கோவலராயர்கள், பொன் பரப்பினான், கூத்தாடுவான் போன்றோர் கோப்பெருஞ்சிங்கனுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்தனர். பிற்பாண்டியரின் ஆட்சிக்காலத்தில் இவர்களின் நிலை மிகவும் தாழ்ந்திருந்தது. பாண்டியர்களைத் தொடர்ந்து விசயநகரப் பேரரசு நிலவியபோது இம்மலையர் குல மன்னர்களின் குடி மெல்லமெல்ல மறையத் தொடங்கியது. கி.பி. 1360 முதல் மலையமான் நாடு விசயநகர அரசின்கீழ் வந்துவிட்டது. திருக்கோவிலூர், நெற்குன்றம் ஆகிய ஊர்களில் கம்பண உடையார், அரிகரர் ஆகியோரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அக்காலத்தில் நாயக்கர்கள் உயர் அலுவலர்கள் பொறுப்பில் இருந்ததால் மலைய மன்னர்களுக்கு ஆட்சிப் பொறுப்பில் பங்கில்லாமல் போய்விட்டது. இப்படிச் சங்ககாலத்தில் மலையமான்களாக இருந்து இடைக்காலத்தில் மிலாடுடையார், மலாடுடையார், சேதிராயர் என்று விளங்கிய இச்சிற்றரசர்களின் வரலாறு கி.பி. முதல் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியில் விளங்கியமை மேற்சொன்ன வரலாற்றுச் செய்திகளால் உறுதி செய்கிறோம்.

மிலாட்டின் பரப்பு

தென்பாண்டி குட்டம் குடம்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன் வடக்கு – நன்றாய
சீத மலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிரு நாட் டெண்

என்னும் பழம்பாடலால் மலாடு கொடுந்தமிழ் நாடுகள் பன்னிரண்டில் ஒன்று என்று அறிகிறோம். இந்நாட்டின் தலைநகர் திருக்கோவிலூராகும்.

மலாடு – பரப்பளவு

திருக்கோயிலூர் வட்டத்தின் மேற்குப் பகுதியும், கள்ளக்குறிச்சி வட்டமும், சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தின் ஒரு பகுதியும் (கிழக்கு பகுதி), திருவண்ணாமலை வட்டத்தின் ஒரு பகுதியும் மலைய நாடாகவே இருந்துள்ளதை ஆத்தூர் காயநிர்மலேஸ்வரர்க் கோயிற் கல்வெட்டு ஒன்றின் மூலமாக அறிகிறோம். மலாடு இரண்டாயிரம் பூமி பரப்பளவு கொண்டதென்று திருக்கோவிலூர் கல்வெட்டு கூறுகிறது.

மிலாட்டில் அடங்கிய கூற்றங்களும் நாடுகளும்

மலையமான் நாடு பல கூற்றங்களை உள்ளடக்கியதாக இருந்தது. அவை ஆறாற்றூர்க்கூற்றம், ஆற்றூர்க்கூற்றம், குறுக்கை கூற்றம், நரையூர்க்கூற்றம், பரனூர்க்கூற்றம், திம்மிச்சூர் நாடு வேம்பார்க் கூற்றம் ஆகியவையாகும். கல்வெட்டுகளில் மலாடாகிய ஜனநாத வளநாடு என்றழைக்கப்படுகிறது. ஆறாற்றூர்க்கூற்றம் என்பது சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. ஆறாற்றூர்க் கூற்றம் என்பது கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இதில் மேல் ஆறாற்றூர்க் கூற்றம், கீழ் ஆறாற்றூர் என இரண்டு பிரிவுகளாக இருந்தன.

குறுக்கை கூற்றம் திருக்கோவிலூர் வட்டத்திலுள்ள பகுதியாகும். சித்தலிங்கமடம், பெரியகுறுக்கை, திம்மிச்சூர்,

திருக்கோவிலூர், நெய்வனை முதலான ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் இதனைக் குறிப்பிடுகின்றன. விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்தின் ஒரு பகுதி நரையூர்க்கூற்றமாக இருந்தது. இதனை ஆலம்பலம், கூகையூர், நரையூர்க் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

பரனூர்க் கூற்றமும் திம்மிச்சூர் நாடும் திருக்கோவிலூர் வட்டத்தில் வெவ்வேறு பகுதிகளாக இருந்தன என்பதை எலவானாசூர், பரவந்தூர், திம்மிச்சூர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தின் ஒரு சிறு பகுதி வேம்பார்க் கூற்றமாக விளங்கியது. இதனை அரும்பாவூர், வெண்பாவூர்க் கல்வெட்டுகளால் அறியலாம். இக்கூற்றங்களில் ஆடையூர் நாடாழ்வார், இறையூர்ச் சேதிராயரும், கிளியூர் மலையமான் ஆகியோர் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைத் தனியாக ஆளத் தொடங்கினர்.

மிலாட்டின் இயற்கை வளம்

மிலாடெனும் இப்பகுதி இன்று குறுங்காடுகளும், சிறுசிறு குன்றுகளும் நிறைந்ததாகக் காணப்படுகிறது. நன்செய் நிலங்கள் குறைவாகவும், புன்செய் நிலங்கள் மிகுதியாகவும், பெரும்பாலும் கிணற்றுப் பாசனத்தைப் பயன்படுத்துவனவாகவும் உள்ளது. தென்பெண்ணை ஆறு, கெடிலம் ஆறு ஆகிய இரு ஆறுகள் இப்பகுதிகளை வளங்கொழிக்கச் செய்கின்றன. எனவே மிலாடு வேளாண் தொடர்பான ஊர்களாக அமைந்துள்ளன. தற்போது திருக்கோவிலூர், ஆத்தூர், கள்ளக்குறிச்சி, மணலூர்பேட்டை ஆகியவை பெரிய ஊர்களாக உள்ளன.

சித்தலிங்கமடம் கல்வெட்டில் மிலாடுடையார்கள்

சோழர் ஆட்சிக்காலத்தில் முதலாம் பராந்தகன் காலம் முதல் சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலுக்கு

மிலாடுடையார்கள் தானங்கள் பல அளித்துள்ளனர் என்பது கல்வெட்டுகளின் வாயிலாக அறியமுடிகிறது.

மிலாடுடையான் நாட்டான் சித்தவடவன்

இவன் முதலாம் பராந்தகனின் 7-ஆவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 913-914) திருப்புலிபகவர்க்கு இரண்டு நந்தா விளக்குக்கு 10 கழஞ்சு பொன் கொடுத்துள்ளான். இவன் திருநாமநல்லூர்க் கல்வெட்டில் குறிக்கப்படும் முதலாம் நரசிம்மவர்மன் என்பவனாகக் கருதப்படுகிறான். ஏனெனில் இவனுக்கு சத்திநாதன், சித்தவடவன் மிலாடுடையார், சித்தவடத்து அடிகள், சாமுண்டதேவன் முதலான பெயர்களும் உள்ளன. நரசிம்மவர்மன் என்பது இவனது பட்டப்பெயராகும். 'கோவல் ஆள்வோன் மலைய குலோத்பவன்' என்று புகழப்படுபவனும் 'பார்கவ கோத்திரத்தான்' என்று குறிப்பிடும் முதல் மன்னனும் இவனே ஆவான்.

மிலாடுடையார்

முதலாம் இராசராசனின் 4-ஆவது ஆட்சி ஆண்டு (கி.பி. 988-89) கல்வெட்டில் மிலாடுடையார் என்பவர் திருப்புலிபகவர் ஆழ்வார்க்கு இரவு நேரத்தில் 12 சந்தி விளக்கெரிக்க 10 கழஞ்சு பொன் கொடுத்துள்ளான். இக்கல்வெட்டில் இவன் பெயர் சிதைவடைந்து காணப்படுவதால் முழுப்பெயர் அறிய இயலவில்லை. ஆனாலும் முதலாம் இராசராசன் ஆட்சிக்காலத்தில் விக்கிரமசோழ மிலாடுடையார் என்பவர் இருந்தார், இவருக்கு இராமன் சித்தவடவன், இராமதேவன் சித்தவடவன், மிலாடுடையார் இராமன் நாட்டடிகள் முதலான வேறு பெயர்களும் உண்டு என்று ஏற்கனவே பார்த்தோம். எனவே இக்கல்வெட்டில் குறிக்கப்படும் மிலாடுடையார் விக்கிரமசோழ மிலாடுடையார் ஆக இருக்கலாம்.

மேலும் இங்கு உள்ள இராஜகேசரி என்று குறிக்கப்படும் கல்வெட்டில் மிலாடுடையார் நாட்டான் சித்தவடவன் என்பவன் ஒரு

நந்தா விளக்கெரிக்க ஆடு கொடுத்த செய்தியைக் கூறுகிறது. இவனும் இக்காலகட்டத்தைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டும். ஏனெனில் சித்தவடவர் என்று அழைக்கப்பட்ட மிலாடுடையார்கள் சோழ மன்னர்களான விசயாலயன் முதல் அதிராஜேந்திரன் வரையில் உள்ளவர்கள் மட்டுமே இவ்வாறு அழைக்கப்பட்டனர்.

மிலாடுடையான் வடவன் ராஜேந்திரன்

முதலாம் இராஜேந்திர சோழனின் வடநாட்டுப் படையெடுப்பின்போது, அம்மன்னனுக்கு அடங்கிய குறுநில மன்னர்களில் சிலர் படைத்தலைவர்களாகச் சென்றனர். அவ்வாறு சென்றவர்களில் கங்கைகொண்ட சோழ மிலாடுடையாரும் ஒருவர். வடநாட்டுப் படையெடுப்பில் வெற்றிபெற்றதன் காரணமாக மிலாடுடையான் வடவன் ராசேந்திரன் என்ற பெயரை பெற்றிருக்க வேண்டும். கங்கை வெற்றிக்குப் பின்னர் முதலாம் இராசேந்திர சோழன் 'கங்கைகொண்ட சோழன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு உத்திர, தட்சிண அயனங்களின்போது பூசை மற்றும் இதர செலவுகளுக்காக 16 கழஞ்சு பொன் மற்றும் அதிலிருந்து கிடைக்கும் வட்டியும், நிலமும் கோயிலுடையார் வசம் கொடுத்துள்ளான். கோப்பரகேசரி 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வடவன் ராசேந்திரன் குறிப்பிடப்பட்டுள்ளார். எனவே, இக்கல்வெட்டு கி.பி. 1024-ஆம் ஆண்டைச் சேர்ந்த முதலாம் இராசேந்திரனுடையதாகக் கொள்ளலாம்.

திருமுனைப்பாடி கிளியூர் மலையமான் சதிரன் மலையனான ராஜேந்திர சோழ மலையமான்

இவன் முதலாம் குலோத்துங்க சோழனின் 10-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1079-80) சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலுக்கு நந்தா விளக்கு எரிக்க 64 பசுக்களைத் தானமாக அளித்துள்ளான். இவன் முதலாம் குலோத்துங்க சோழன், விக்கிரமசோழன் ஆகியோரது ஆட்சிக்காலங்களில் வாழ்ந்தவன், கிளியூர் மலையமான் மல்லன், கிளியூர் மலையமான் சதிரன் மலையன் முதலான வேறு பெயர்களும் இவனுக்கு உண்டு. மலைய குலராயர் என்னும் பட்டமுடைய சில தலைவர்கள் இவனுக்கு கீழ்படிந்த அதிகாரிகளாக இருந்தனர். இவர்கள் அனைவரும் குலோத்துங்கனின் 10-ஆவது ஆட்சி ஆண்டில் தன் தலைவனான ராஜேந்திர சோழ மலையமானை சார்த்தி சிவன் கோயில்களுக்கும், திருமால் கோயில்களுக்கும் நிவந்தங்கள் அளித்துள்ளனர்.

மலையமான் ராஜேந்திர சோழ வாணகுலராஜன்

இவனும் முதலாம் குலோத்துங்கனின் 31-ஆவது (கி.பி.1100-01) ஆட்சி ஆண்டைச் சேர்ந்தவன். இவன் இரண்டாம் இராசேந்திரசோழனின் கீழ்ப்படிந்த அதிகாரிகளுள் ஒருவராக இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. ஏனெனில் இவனுக்குக்கீழ் இருந்தவர்கள் மலையகுலராஜன் என்ற பட்டமுடையவர்களாக இருந்தனர். திருப்பள்ளியெழுச்சிக்காக 1250 குழி நிலமும், கோயிலில் இறைவன் முன்வைத்து படைப்பதற்கான பாத்திரம் (பரிகலன்) ஒன்றும் இவனால் கொடுக்கப்பட்டுள்ளன.

பூவன் மருதனான ஆழ்வான் அங்ககார மலையமான்

முதலாம் குலோத்துங்க சோழனின் 49-ஆவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1118 – 1119) இவன் சித்தலிங்கமடம் கோயிலுக்கு 14 அடி கோலால் அளக்கப்பட்ட 1650 குழி நிலத்தினை 8 சந்திவிளக்குகள் எரிக்கவும், அமுது படைக்கவும் தானமாகக் கொடுத்துள்ளான். இராசேந்திர சோழ சேதிராயன் காலத்தில் வேறு சில மலைய மன்னர்கள் மலைய நாட்டின் சிறுசிறு பகுதிகளை ஆட்சி செய்துள்ளனர். கிளியூர் பூவன் மருதன் என்கிற ஆழ்வான்

அங்ககார மலையமான் என்பவன் சித்தலிங்கமடம் பகுதியில் ஆட்சி செய்துள்ளான் என்பது கல்வெட்டுச் செய்தியால் தெரிகிறது.

மலையமான் அத்திமல்லன் சொக்கப்பெருமாள்

இவன் இரண்டாம் இராசராசனின் 19-ஆவது ஆட்சி யாண்டில் (கி.பி.1164-65) சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு அமுது செய்வதற்காக நான்கு வேலி நிலம் கொடுத்துள்ளான். இரண்டாம் இராசராசன், மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆகிய சோழ மன்னர்களின் ஆட்சிக்காலங்களில் இம்மன்னர்களுக்கு அடங்கிய மலைய மன்னர்களில் இவனும் ஒருவன். முதலாம் இராஜகம்பீர சேதிராயன் என்பது இவனது இயற்பெயராகும். கி.பி. 1165 முதல் 1184 வரை இவனைப் பற்றியச் செய்திகள் கிடைக்கின்றன. இராச கம்பீரன் என்னும் மூன்றாம் குலோத்துங்க சோழனின் பெயரைத் தனக்குரிய பெயராகக் கொண்டவன். சொக்கப் பெருமாள் பொன்பரப்பினான் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இராசராசச் சேதிராயன், இராசராச மலைய குலராயன் ஆகியோரைப் போலவே இவனுக்கும் வேளைக்காரப் படையினர் உண்டு. இம்மன்னன் சித்தலிங்கமடம், அரையணி நல்லூர் ஆகிய பகுதிகளில் ஆட்சி செய்ததாகத் தெரிகிறது. குடிமக்கள் தனக்குச் செலுத்த வேண்டிய வரிகளைப் புதுப்பேரூர் உத்தரீசுவரமுடைய நாயனார்க்கும், அரையணி நல்லூர் அண்ணலுக்கும் நல்கினான் என்று அவ்வூர்க் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

கூத்தன் பனையனான பொன்பரப்பின மலையமான்

மூன்றாம் குலோத்துங்கசோழ தேவனின் 6-ஆவது ஆட்சி ஆண்டில் (1183-84) சித்தலிங்கமடம் புலிப்பகவர்க்கு ராஜகம்பீர சேதிராயனின் நலன் வேண்டி நந்தா விளக்கெரிக்க நிலக்கொடை வழங்கியுள்ளான். இவ்வாண்டுக்குப் பின்னர் இவனைப் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் காணப்பெறவில்லை.

கண்ணன் சூரனான ஆகாரசூர மலையமான்

இவன் இராசாதிராச தேவரின் 14-ஆவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1177) சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு அமுது செய்தருள உலோகப் பானை ஒன்று வழங்கியுள்ளான். கண்ணன் சூரன் என்பது இவனுடைய இயற்பெயராகும். கண்ணன் சூரனான ஆகாரசூர மலையமான் என்பது இவனது முழுப்பெயராகும். ஆகாரசூரன் என்பதன் பெயர் விளக்கம் பற்றி அறிந்துகொள்ளக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கவில்லை. இவன் சித்தலிங்கமடம் பகுதியில் அதிகாரியாக விளங்கினான் எனக் கூறலாம்.

திருமுனைப்பாடி நாட்டு கிளியூர் மலையமான் சூரிய நீரேற்றான் எதிரிகள் நாயனான ராஜராஜ மலையகுலராஜன்

இவன் மூன்றாம் குலோத்துங்கனின் 9-ஆவது ஆட்சி யாண்டில் (கி.பி.1186) சித்தலிங்கமடம் கோயிலுக்கு நிலக்கொடை அளித்துள்ளான். எனவே, இவன் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்ததாகத் தெரிகிறது. இவனைப் பற்றியக் கல்வெட்டுகள் கி.பி. 1184 முதல் 1191 முடிய கிடைக்கின்றன. இவனுக்குச் சூரியதேவன், சூரிய நீரேற்றான், சூரியன் நீரேற்ற பெருமாள், எதிரிகள் நாயகன், சோழங்க தேவன் முதலான சிறப்புப் பெயர்களும் கல்வெட்டுகளில் காணப்பெறுகின்றன. மலையமான் நாட்டின் ஒரு பகுதியில் ஆட்சி செலுத்தும் உரிமை இவன் முன்னோரால் இவனுக்கு நீர்வார்த்து (தாரை வார்த்து) வழங்கப்பெற்றமையால் 'நீர் ஏற்றான்' என்ற சிறப்புப் பெயர் இவனுக்கு வழங்கியதாகத் தெரிகிறது. நீறு ஏற்றான் என்ற பெயர் கொண்டு சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தான் எனக் கொள்ளலாம். ஆனால் கல்வெட்டுகளில் நீர் ஏற்றான் என்று கூறுவதால் முன்னர் கூறியதே பொருள் எனக் கொள்ளலாம். இவன் திருப்பாலைபந்தல் திருநாகேஸ்வரமுடையார்க்கும் நிலக்கொடை வழங்கிய செய்தியும் அங்குள்ள கல்வெட்டு மூலம்

அறிகிறோம். மேலும், திருக்கோவிலூர் வீரட்டானமுடையார்க்கும், திருவெண்ணை நல்லூர் ஆட்கொண்டருளிய தேவர்க்கும், கொடைகள் அளித்த செய்திகள் கிடைக்கின்றன.

மிலாடுடையார் குடும்பத்தினர் (பெண்கள்)

சூர்யதேவி

முதலாம் குலோத்துங்கனின் ஆட்சிக்காலத்தில் ராஜேந்திர சோழ சேதிராயனின் மனைவி சூர்யதேவி என்பவள் சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலுக்கு நிலம் தானமாக வழங்கியுள்ளாள். பரிவார தேவர்க்கு நாள்தோறும் அமுது உள்ளிட்ட மற்ற தேவைகளுக்காகவும் இந்நிலதானம் வழங்கப்பட்டுள்ளது.

ஆளவந்தாள்

இவளது கணவன் மலையமான் இராமன் சூரியனான இராசேந்திரசோழ மலையகுலராயன் ஆவான். தந்தை இராசேந்திரசோழ சேதிராயனாவான். இவளது கணவன் மலையர் குலத்து மன்னன் அல்லன். மலைய நாட்டு அரசு அதிகாரியாகவே இருத்தல் வேண்டும் என்று தெரிகிறது. இவள் சித்தலிங்கமடம் கோயிலுக்குத் தன் தாய் சூரியதேவியின் நன்மை கருதி பள்ளியறை நாச்சியார் அம்மனுக்கு கோயில் எழுப்பி, கொடையும் அளித்துள்ளாள். விக்கிரமசோழனின் 15-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1132-33) இக்கொடை அளிக்கப்பட்டுள்ளது.

நீலிசெங்கி

இவள் மலையமான் திருக்கலை மருந்தன் ஆழ்வானங்கார மலையமான் என்ற அதிகாரியின் மனைவி ஆவாள். இவள் கணவன் இராசேந்திரசோழ சேதிராயனின் கீழ் அதிகாரியாக இருந்துள்ளான் எனத் தெரிகிறது. இவள் விக்கிரமசோழனின் 2-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1119-20) சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு சில நிலங்களை விலைக்கு வாங்கி தானமாகக் கொடுத்துள்ளாள்.

சதிரி

இவள் தில்லைநாயகன் தேவர்கண்டன் அகமுடையான் மலையனான இராசேந்திரசோழ சேதிராயன் என்பவனின் மகளாவாள். இவன் பேரிங்கூர்ப் பகுதியைச் சேர்ந்தவன். சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு விளக்கெரிக்கக் காசுகளை தானமாகக் கொடுத்துள்ளாள். இக்கொடை விக்கிரமசோழனின் 3-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி.1120-21) கொடுக்கப்பட்டுள்ளது.

திருப்புலிபகவர் கோயில்

சித்தலிங்கமடத்தில் விநாயகர் கோயில், அங்காளம்மன் கோயில், மாரியம்மன் கோயில், அய்யனார், பாவாடைராயன் முதலான கோயில்கள் உள்ளன. இவ்வூரில் திருப்புலிபகவர் கோயில் முதன்மைக் கோயிலாகவும், சோழர் காலத்தைச் சார்ந்த மிகவும் பழமை வாய்ந்த கோயிலாகவும் திகழ்கிறது.

திருப்புலிபகவர் கோயில் ஊரின் மேற்குப் புறத்தின் (வியாக்கரபாதீஸ்வரர்) மையப் பகுதியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலில் நீலவிசாலாட்சி அம்மனுக்கென்று தனிச்சன்னதி ஒன்றும் மூலவரின் வடக்குப் பக்கத்தில் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது.

வியாக்கரபாதர்

சித்தலிங்கமடத்திலுள்ள சிவனை ஒரு முனிவர் பூஜித்து வந்துள்ளார். தினமும் இறைவனுக்கு மலர்மாலை தொடுக்க மலர்களைப் பறிக்கும்பொழுது மரங்களில் வழுக்காமல் இருக்கவும், முட்களிலிருந்து பாதுகாப்பு பெறவும் தனக்கு புலிக்கால், கைகளையும் தருமாறு இறைவனிடம் வேண்டி புலிக்கால், கைகளை பெற்றதாகவும் அதனால் 'புலிக்கால் முனி' என்று பெயர் பெற்றார். புலிக்கால் முனிவர் என்பதின் வடமொழியாக்கமே 'வியாக்ரபாதர்' ஆகும். இவர் சிதம்பரத்தில் ஆதிசேஸன் அவதாரமாகிய பதஞ்சலியுடன் சேர்ந்து சிதம்பரம் திருமூலநாதரை வழிபட்டு அவரது நடனக் காட்சியையும் கண்டுகளித்து, தம்மை சரணடைந்த சிங்கவர்மன் என்ற அரச குமாரனுக்கு பெருநோயை நீக்கி அருள்பெறச் செய்ததாகத் தெரிகிறது. இத்தகைய பேறுபெற்ற வியாக்கரபாதருக்கு சித்தலிங்கமடத்து இறைவன் புலிக்கால், கைகளையும் வழங்கியதால் **திருப்புலிபகவர்** என்று இறைவன் அழைக்கப்படுகிறார் என்பது புராண செய்தியாகும்.

காலம்

சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலில் முதலாம் பராந்தகன் காலத்தைச் (கி.பி. 907-953) சேர்ந்த கல்வெட்டுகளே மிகப்பழமை வாய்ந்ததாகும். முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இம்மன்னனின் அமைச்சராக இருந்த தொண்டை மண்டலத்திலுள்ள மணவில் பகுதியினைச் சார்ந்த நரலோக வீரன் என்பவன் 'சித்தலிங்க' என்னும் இவ்வூரில் சிவனுக்காக கற்கோயில் எடுத்த செய்தியைக் சமஸ்கிருதக் கல்வெட்டொன்று பகர்கிறது (இ.க.ஆ. 367/1909). இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டில் 'சித்தலிங்க' என்னும் அகரத்தில் ஆற்றங்கரையை ஒட்டிய பகுதியில் வியாக்ரபாதர் வழிபட்ட சிவனுக்கு விமானம், பாக்கு மரங்கள் சூழப்பட்ட திருச்சுற்றினையும் இவன் கட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவனது சிறப்புப் பெயர்களான சபாநர்த்தகன், காலிங்கராயன், மானாவதாரன் முதலானவை இக்கல்வெட்டில் காணப்படுகின்றன. எனவே தற்போதுள்ள இக்கோயில், முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070-1120) காலத்தில் எடுக்கப்பட்டது என்பது உறுதியாகிறது. ஆனால் இக்கோயிலில் காணப்படும் மிகப்பழமையான கல்வெட்டுகள் முதலாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்தது என்றாலும், இவனது கல்வெட்டுகள், இராட்டிரகூட மன்னன் கன்னரதேவன், முதலாம் இராசராசன், வீரராசேந்திரன் ஆகியோரது கல்வெட்டுகள் முதலாம் குலோத்துங்கனது காலத்திற்கு முந்தையவை ஆகும். ஆனால் இக்கல்வெட்டுகளின் எழுத்தமைதி முதலாம் குலோத்துங்கன் காலத்திய எழுத்தமைதியோடு காணப்படுகின்றன. ஆதலால் முதலாம் குலோத்துங்கனின் காலத்தில் இம்மன்னனின்

காலத்திற்கு முந்தைய மன்னர்களின் கல்வெட்டுகள் மீண்டும் வெட்டப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது. இக்கோயில் முதலாம் குலோத்துங்கன் காலத்திற்கு முன்னர் முதலாம் பராந்தகன் காலத்திலும் இக்கோயில் கற்றளியாக இருந்துள்ளது. மிகவும் சிதிலமடைந்திருந்ததால் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் மீண்டும் கற்றளியாக எடுக்கப்பட்டுள்ளது சிறப்பாகும்.

இக்கோயிலில் முதலாம் பராந்தகனின் 7, 22, 25-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் 7-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 913-914) கல்வெட்டே மிகப்பழமையானக் கல்வெட்டாகும். அதில் திருப்புலிபகவர்க்கு இரண்டு நுந்தா விளக்கெரிக்கப் பொன் கொடுத்தச் செய்தியைக் கூறுகிறது. மேலும், இவனது 22, 25-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகள் அர்த்த மண்டபத் தென்புறச் சுவரில் காணப்படுகின்றன. முதலாம் பராந்தகனின் சம காலத்தவனான இராட்டிரகூட மன்னன் கன்னரதேவனின் கல்வெட்டுகள் மூன்று உள்ளன. கன்னரதேவனின் 5-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு மகாமண்டபத்தின் அதிட்டானப் பகுதியில் உள்ளன. முதலாம் பராந்தகன் மற்றும் கன்னரதேவன் ஆகியோரது கல்வெட்டுகள் அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன.

மேற்கண்டச் செய்திகளைக் கொண்டு நோக்கும்போது கி.பி. 9-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இக்கோயில் (மூலக்கோயில்) மண் தளியாக இருந்ததை முதலாம் பராந்தகன் காலத்தில் கற்றளியாகக் கட்டப்பட்ட இக்கோயில், பின்னர் சிதிலமடைந்து இருந்ததால் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1070-1120) நரலோக வீரன் என்பவனால் இக்கோயில் மீண்டும் கற்றளியாகப் புதுப்பிக்கப்பட்டது என்று கூறலாம்.

கோயில் அமைப்பு

இக்கோயில் மூன்று திருச்சுற்றுகளுடன் கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், மகாமண்டபம், வாகன மண்டபம், பலிபீடம், கொடிமரம், நந்திமண்டபம், திருக்குளம், மடப்பள்ளி, கிணறு, நந்தவனம், நீலவிசாலாட்சி சன்னதி ஆகிய அமைப்புடன் அமைந்துள்ளது. இவையனைத்தும் பல்வேறு காலகட்டங்களில் அமைக்கப்பட்டனவாகும். இக்கோயிலில் வாயிற்கோபுரம் இல்லை, கோயில் நுழைவாயில் கோபுர வாசற்படி என்று அழைக்கப்படுகிறது. (தற்போது இராஜகோபுரம் கட்டப்பட்டுள்ளது.) கோயிலுக்கு வெளியில் கல்யாண மண்டபம் என்றழைக்கப்படும் அலங்கார மண்டபமும் உள்ளது. ஸ்ரீஞானானந்த சுவாமிகள் திருமடமும் இங்குள்ளது. இக்கோயிலின் மொத்த பரப்பளவு 150 சென்ட் ஆகும்.

கருவறை

கருவறையானது சம சதுர வடிவில் அளவு 145 செ.மீ. நீளம், அகலம் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் இருக்கும் சுயம்பு லிங்கம் சமசதுர அமைப்புடைய ஆவுடையாருடன் கூடிய லிங்கமாகக் காணப்படுகிறது. லிங்கத்தின் முகப்பில் வெட்டுப்பட்டு காணப்படுகிறது. அங்கு சந்தனம் பூசப்பட்டு தற்போது சிதைவு மறைக்கப்பட்டுள்ளது. வேடன் ஒருவன் ஈச்ச மரக்காடுகளை அழித்துக் கொண்டிருக்கும்போது லிங்கத்தின் மீது கோடாரிப்பட்டு வெட்டுப்பட்டதாகவும், அதன் பிறகு கோயில் உருவானதாகவும் செவிவழிச் செய்தியாக ஊரார் கூறுகின்றனர். கருவறை வாயில் உயரம் 6.5 அடியும், அகலம் 3.7 அடியும் கொண்டுள்ளது. கருவறை வாயிலின் இருபக்கங்களில் அரைத்தூண்களுடன் வாயிற் கதவு அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் தரைப்பகுதி அர்த்தமண்டபம் மற்றும் மகாமண்டபத் தரைப்பகுதியைவிட தாழ்வாக உள்ளது.

அர்த்தமண்டபம்

கருவறைக்கு அடுத்துள்ள அர்த்தமண்டபம் நீள் சதுர அமைப்புடையதாகும். அர்த்தமண்டபத்தின் வாயிலின் இருபுறமும் துவாரபாலகர்கள் உள்ளனர். இவை கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கலைப்பாணியில் உள்ளன.

துவாரபாலகர்கள்

வடக்குப்புறம் உள்ள துவாரபாலகர் நான்கு கைகளுடன், வலதுக்காலை மடக்கி ஊன்றி, இடதுக்காலை கதாயுதத்தின் பிடியில் வைத்து கம்பீரமாக நிற்கிறார். இடக்கரம் கதாயுதத்தின் மேல் ஊன்றி, வலப்புறம் உள்ள கரங்கள் மடக்கிய வண்ணம் உள்ளது. தலையில் ஜடாபாரமும், காதுகளில் பெரிதான பத்ர குண்டலங்களும் அலங்கரிக்கின்றன. கழுத்தில் பட்டையான அமைப்புடைய கழுத்தணி கழுத்தை ஒட்டியவாறு அமைந்துள்ளது. உதடுகள் தடித்து இருபுறமும் கோரைப் பற்கள் தெரியும் வண்ணம் உருண்டை முகத்துடன் உள்ளது. மார்பில் புரிநூல் தடித்து இடப்புறமிருந்து வலப்புறமாகத் திரும்புகிறது.

தென்புறமுள்ள துவாரபாலகர் இடதுக்காலை ஊன்றி, வலதுக்கால் முட்டிப்பகுதியில் கதாயுதத்தினை ஊன்றி உள்ளார். அர்த்த மண்டபத்தை அடுத்து சிறிய கட்டு போன்ற அமைப்பு உள்ளது. இங்கு நந்தி, பலிபீடம் ஆகியன சிறிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன. நந்தி கருவறையை நோக்கிய வண்ணம் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. அர்த்தமண்டப வாயில் 7.8 அடி உயரம், 4.6 அடி அகலம் கொண்டுள்ளது.

மகாமண்டபம்

இம்மண்டபம் நான்கு அரைத்தூண்களுடனும், நான்கு முழுத் தூண்களுடனும், உருளை வடிவப் போதிகையுடன் அமைந்துள்ளது. மண்டபத்தின் வடக்குப்புறச் சுவரை ஒட்டியவாறு மேடை கட்டப்பட்டுள்ளது. இது உற்சவ மூர்த்திகள் வரிசையாக வைப்பதற்கு அமைக்கப்பட்ட மேடையாகும். இம்மண்டபத்தின் வாயிலில் பெரிய மரக்கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் தென்புறச் சுவரில் இரண்டு சமஸ்கிருதக் கல்வெட்டுகள் உள்ளன. இம்மண்டபத்தின் தென்புறம் சோமாஸ்கந்தர் சன்னதி என்று அழைக்கப்படுகிற பகுதியில் சிறு அறையாக தடுக்கப்பட்டு செப்புத்திருமேனிகள் யாவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இவை பிற்காலத்தில் ஏற்பட்டவையாகும்.

முன்மண்டபம்

மகாமண்டபத்தை அடுத்து முன்மண்டபம் காணப்படு கின்றன. இம்மண்டபத்தை 14 முழுத் தூண்களும், இரண்டு அரைத்தூண்களும் அலங்கரிக்கின்றன. இம்மண்டபத்தின் வழியாகத்தான் முதல் திருச்சுற்று செல்கிறது. இம்மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் நடராசர் சன்னதி உள்ளது. இச்சன்னதி மண்டபத்தின் தரையிலிருந்து சுமார் 2½ அடி உயரத்தில் அமைந்த கல் கட்டடத்தில் அமைந்துள்ளது. இம்மேடையின் மீது ஏறுவதற்கு 3 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. நடராசர் சன்னதிக்கு இரு மருங்கிலும் கிழக்குப் பக்கமாக சுரங்கப்பாதையும் மேற்குப் பக்கமாக சந்திரசேகர் சன்னதியும் காணப்படுகின்றன. சுரங்கப்பாதை அமைப்பு சதுர அமைப்புடையதாக வடகிழக்கு மூலையில் உள்ளது. இப்பாதை நடராஜர் சன்னதி வரை செல்கிறது. சுரங்கப்பாதையினுள் தற்போது ஒன்றும் இல்லை. நடராசர் சன்னதியில் சதுரமான அமைப்புடைய கருவறையில் நடராசர் சிவகாமியுடன் காட்சியளிக்கிறார். நடராசர் திருமேனி சோழர் காலத்தைச் சேர்ந்ததாகும். முதலாம் இராசராசனின் ஆட்சியின்போது (985-1014) நடராசர் திருமேனி செய்து கொடுக்கப்பட்டதை இங்குள்ள கல்வெட்டின் வாயிலாக அறியப்படுகிறது. நடராசர் சன்னதிக்கு மேல் விமான அமைப்பு மூன்று கலசங்களுடன் காட்சியளிக்கிறது. இவை கோயில் மதில்

சுவரை ஒட்டி அமைந்துள்ளது. நடராசர் வலது காலை முயலகன் மீது வைத்து இடது காலைத் தூக்கி ஆடும் காட்சியில் இடப்புறம் சிவகாமி அம்மையும் வலப்புறம் நாரதர், தும்புருவருடன் உள்ளனர். நடராசர் சன்னதியின் கிழக்குப் புறத்தில் மேற்குப் பார்த்தவாறு சனீஸ்வரர், பைரவர், சூரியன், லிங்கம் ஆகிய இறை உருவங்கள் உள்ளன.

சனீஸ்வரர்

சனீஸ்வரர் பத்ம பீடத்தின் மீது காக்கை வாகனத்துடன் நின்றநிலையில் வலக்கையில் சூலமும் இடக்கையைத் தொங்கவிட்ட நிலையிலும் ஜடாமகுடத்துடன் காட்சியளிக்கிறார்.

பைரவர்

பைரவர் நின்ற கோலத்தில் நான்கு கைகளுடன் காணப்படுகிறார். அருகில் வாகனமான நாய் அமைக்கப் பட்டுள்ளது. ஆடை அணியா அழகராக பட்டையான முகத்துடனும், ஜுவால மகுடத்துடனும் பைரவர் காட்சியளிக்கிறார். பைரவர் சிற்பம் பிற்காலத்தைச் சேர்ந்ததாகும் (கி.பி. 19-ஆம் நூற்றாண்டு). க்ஷேத்திரபால பிள்ளையார் (பைரவர்) இரண்டாம் இராசராசனின் 8-ஆவது (கி.பி. 1154) ஆட்சியாண்டில் எழுந்தருளச் செய்யப்பட்டதாக இங்குள்ள கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. சோழர் காலத்தில் பைரவர் சிற்பம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அச்சிற்பம் தற்போது இல்லை. ஆனால் தற்போதுள்ள பைரவர் சிற்பம் பிற்காலத்தைச் சேர்ந்ததாகும்.

சூரியன்

சூரியன் நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடன் மேலிரு கரங்களில் தாமரை மலர்களுடனும், தொடை வரை ஆடை அணிந்தும், இடுப்பில் கச்சையுடனும் காட்சியளிக்கிறார். தலைக்குப் பின்னால் ஒளி வட்டம் காணப்படுகிறது. புரிநூல் மார்பு பகுதியிலிருந்து இடுப்பு வரை வந்து வலப்புறம் திரும்புகிறது.

இச்சிற்பம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம். சூரியன் சிற்பத்திற்கு அருகில் சுடுமண் பொம்மைகளும், லிங்கம் ஒன்றும் உள்ளது. லிங்கம் 8 பட்டை அமைப்புடனும், கீழ்ப்பகுதியான பிரம்ம பாகம் சதுர அமைப்புடனும் மேல் பகுதியான ருத்ர பாகம் நீண்டும் காணப்படுகிறது. மண்டபத்தின் தென்புறத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரது சிற்பங்களும் உள்ளன.

திருஞானசம்பந்தர்

கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சம்பந்தர் சிற்பம். வடக்குப் பார்த்தவாறு முதல் திருச்சுற்றின் தென்புறத்தில் உள்ளது. பிரபையினுள் நடனமாடும் நிலையில், ஆடையில்லாமல் இடக்கையை நீட்டியவாறு வலக்கை மீது வைத்துள்ளார். வலக்கை சிம்ம முத்திரையுடன், இடுப்பில் அரைஞாண் கயிறும், முப்புரிநூலும், கேயூரம், வளையல் மற்றும் கால்களில் தண்டை அணிந்தும் காணப்படுகிறார்.

திருநாவுக்கரசர்

கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச்சிற்பம் நின்ற நிலையில் வட்டமான பீடத்தின் மீது வணங்கியவாறு கையில் உழவார படையுடன், கழுத்தில் ருத்ராட்ச மாலை, கால் முட்டி வரை ஆடை அணிந்து, மழுங்கிய தலையுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

முதல் திருச்சுற்று

முதல் திருச்சுற்றில் பரிவார தெய்வங்களான சப்தமாதர்கள், செல்வ விநாயகர், முருகர் மற்றும் சண்டிகேஸ்வரர் சன்னதிகள் உள்ளன. கருவறையின் தேவகோட்டங்களில் தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா மற்றும் அர்த்தமண்டப தேவகோட்டங்களில் நர்த்தன விநாயகர், துர்கை ஆகிய இறை உருவங்கள் காணப்படுகின்றன.

இக்கோயிலின் முதல் திருச்சுற்று மாளிகை வில்லவரான மகுடத்தியாகி என்பவரால் அமைக்கப்பட்டது என்பதை இங்குள்ள கல்வெட்டுச் சாசனம் எடுத்துரைக்கிறது. அவ்வாசகம் கீழ்வருமாறு:

1. ஸ்வஸ்திஸ்ரீ॥ இம்மண்)
2. டபமுழுதும் -வி
3. ல்லவரானம
4. குடத்தியாகி

இச்சாசனம் திருச்சுற்று வடபுறச் சுவரில் வெட்டப்பட்டுள்ளது. இத்திருச்சுற்று முழுவதும் சுமார் 3 அடி உயரமுள்ள மேடை போன்ற வராந்தாப் பகுதி சுற்றுச்சுவரை ஒட்டியவாறு அமைக்கப்பட்டுள்ளது. இம்மேடை 63 நாயன்மார்களுக்காக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தேவகோட்ட சிற்பங்கள்

தட்சிணாமூர்த்தி

தென்முகக் கடவுளான தட்சிணாமூர்த்தி அமர்ந்த நிலையில் கருவறைத் தேவகோட்டத்தில் இடம்பெற்றுள்ளது. இதற்குமுன்பு ஒரு சிறு மண்டபம் உள்ளது. தேவகோட்டத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி தேவகோட்ட அமைப்பைவிட உயரம் குறைவாக உள்ளது. இச்சிற்பம் பிற்காலத்தில் வைக்கப்பட்டதாகும். இத்தேவகோட்டத்தின் முன்னுள்ள சிறுமண்டபமும் பிற்காலத்தில் எழுப்பப்பட்டதாகும். இம்மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளத் தூண்களில் வாழைப்பூவை ஒத்ததாக போதிகை அமைப்பு உள்ளது. ஆலமர்ச்செல்வரான தட்சிணாமூர்த்தி நான்கு கரங்களுடன், வலது காலை முயலகன் மீது வைத்து, இடது காலை மடக்கி உத்குடி ஆசனத்தில் அமர்ந்துள்ளார். நான்கு கைகளில் முன்னிரு கைகள் புஸ்தக ஹஸ்தத்திலும், சின் முத்திரையிலும் உள்ளன.

பின்னிரு கைகளில் வலது கையில் பாம்பும், இடது கையில் அக்னி ஏந்தியும் காணப்படுகின்றன. கழுத்தில் ருத்ராட்ச மாலையும், தலைக்குப் பின்னால் வட்டமான பிரபை போன்ற அமைப்பும் அலங்கரிக்கிறது. கைகளில் தோள் வளை, கேயூரமும் கால்களில் பாதசரங்களும் உள்ளன. மார்பில் முப்புரிநூல் இடப்புறமிருந்து இடுப்பு வரை வந்து வலப்புறம் திரும்புகிறது. தட்சணாமூர்த்தி இறை உருவத்தின் கீழ் நான்கு முனிகள் அமர்ந்துள்ளனர்.

அவர்களில் இடப்பக்கம் இருப்பவர்கள் சனந்தரர், சனக்குமாரர், வலப்பக்கம் இருப்பவர்கள் சனகர், சனார்த்தனர் ஆவர். தேவகோட்டத்தின் மேல் உள்ள மகரதோரணத்தின் மத்தியில் வியாக்கரபாதர் சிவலிங்கத்தை வணங்குவது போன்றும், அவருக்கு இடப்புறம் யானை, குரங்குக் குட்டியை வைத்திருப்பது போன்றும், அதற்கு எதிரில் ஒரு குரங்கு அமர்ந்திருக்கிறவாறும் வடிவமைக்கப்பட்டுள்ளது. தேவ கோட்டத்தின் உயரம் 3 அடி 6 அங்குலம் அளவு கொண்டதாகும்.

லிங்கோத்பவர்

லிங்கத்திலிருந்து காட்சியளிக்கும் அடிமுடி காணா அண்ணலான சிவபெருமானுக்குக்கீழ் வலப்புறம் பன்றி உருவில் விஷ்ணுவும், மேலே அன்னப்பட்சி உருவில் பிரம்மன் பறந்து செல்வது போன்றும், லிங்கோத்பவரைச் சுற்றி 28 சூலங்களைக் கொண்ட ஒளி வட்டத்துடன், நான்கு கரங்களுடன், வலது கீழ்க்கரம் முறையே அபய முத்திரையிலும், இடது கீழ்க்கரம் தொடைமீது வைத்து கடி ஹஸ்தத்துடனும், இடது மேற்கரத்தில் மானும், வலது மேற்கரத்தில் மழுவும் ஏந்தியுள்ளார். காதுகளில் இடது காது பத்ரகுண்டலத்துடனும் வலது காது தொள்ளைக் காதாகவும் உள்ளன. இடுப்பில் கீர்த்தி முகத்துடன் கூடிய கச்சையும், மார்பில் முப்புரிநூல் இடப்பக்கமிருந்து வலப்புறமாக இடுப்புக்கு மேலே செல்கிறது. தலையில் ஜடா மகுடத்துடன் காட்சியளிக்கிறார்.

அவருக்கு இரு மருங்கில் விஷ்ணுவும், பிரம்மாவும் நின்றநிலையில் காட்சியளிக்கின்றனர். இச்சிற்பம் கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

விஷ்ணு

லிங்கோத்பவரின் இடப்பக்கம் விஷ்ணு நின்றகோலத்தில் நான்கு கைகளுடன் காணப்படுகிறார். முன்னிரு கைகள் லிங்கத்தை வணங்குவது போன்றும், பின்னிரு கைகளில் சங்கு, சக்கரத்துடனும், முழங்கால்வரை ஆடை அலங்காரம் தரித்து, கிரீட மகுடத்துடன் காட்சியளிக்கிறார்.

பிரம்மா

லிங்கோத்பவரின் வலப்பக்கம் நான்முகன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். நான்கு கரங்களில் வலது இடது மேற்கரங்களில் இடது கரத்தில் கமண்டலம், வலது கரத்தில் ருத்ராட்ச மாலையும் இடம்பெற்றுள்ளது. வலது இடது கீழ்க்கரங்கள் வணங்கிய நிலையில் காட்சியளிக்கிறார்.

பிரம்மன்

கருவறை வடக்குப்புறத் தேவகோட்டத்தில் வட்டமான பீடத்தின் மீது பிரம்மா நின்றநிலையில் காணப்படுகிறார். நான்கு கரங்களில், முன்னிரு கரங்களில் வலக்கரம் அபய ஹஸ்தத்திலும், இடக்கரம் தொடைமீது வைத்து கடி ஹஸ்தத்திலும் உள்ளது. பின்னிரு கரங்களில் இடக்கையில் கமண்டலமும், வலக்கையில் ருத்ராட்ச மாலையும் உள்ளன. தலையில் ஜடாமகுடமும், பாதம் வரை ஆடை அணிந்தும், தோள்பட்டையில் கேயூரம், காப்பும் அணி செய்கின்றன. முப்புரி நூல் நான்கு பிரிவாக பிரிந்து ஒன்று இடப்பக்கம் செல்கிறது. மூன்று பிரிவு வயிற்றுக்குக் கீழ் சென்று வலப்பக்கம் திரும்புகிறது. தேவகோட்டத்தை இரு அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. இதன் உருவ அமைதியைக் கொண்டு கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

துர்கை

வடக்குப்புறம் அர்த்தமண்டபத் தேவகோட்டத்தில் துர்கை சிற்பம் அலங்கரிக்கிறது. துர்கை திரிபங்க நிலையில் நான்கு கைகளுடன், கரண்ட மகுடத்துடன் சிம்மத் தலையின் மீது நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். முன் இரு கைகளில் வலக்கை அபயம், இடக்கை கடி ஹஸ்தத்திலும், பின் இரு கைகளில் வலக்கையில் சக்கரமும், இடக்கையில் சங்கினை ஆள்காட்டி மற்றும் நடுவிரல்களுக்கு இடையில் பிடித்துள்ளாள். காதுகளில் கம்மல், கழுத்தில் முத்துப் போன்ற சங்கிலியும், அட்டிகையும், அதற்கு மேல் மூன்று பிரிவுகளைக் கொண்ட மெல்லியதான சங்கிலியும் அணி செய்கின்றன. தோள்பட்டையில் வங்கி, தோள் வளையும் அலங்கரிக்கின்றன. கீர்த்திமுகத்துடன் கூடிய மார்புக் கச்சை மற்றும் பாதம் வரை ஆடை அணிந்து காணப்படுகிறாள். இடுப்புப் பகுதியில் குரங்கு செறி அலங்கரிக்கிறது. இந்த உருவ அமைதியை வைத்து இதன் காலம் கிபி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

சண்டிகேஸ்வரர்

வடக்குப்புறத்தில் துர்க்கைக்கு எதிரில் சண்டிகேசுவரர் சன்னதி அமைந்துள்ளது. இச்சன்னதி செங்கல் கொண்டு சதுர அமைப்புடன் கட்டப்பட்டு அதன்மீது விமானமும் அமைக்கப் பட்டுள்ளது. இக்கட்டடமைப்பு பிற்காலத்தைச் சேர்ந்ததாகும். சதுர அமைப்புடைய பீடத்தின் மீது சண்டிகேசுவரர் இடக்காலை மடக்கியும், வலக்காலைத் தொங்கவிட்டும் அமர்ந்த நிலையில் உள்ளார். வலக்கையில் மழுவும், இடக்கையை மடக்கிய காலின் மீது வைத்தும் உள்ளார். தலை ஜடாமகுடத்துடன், காதுகளில் குண்டலம், தோளில் தோள் வளையம், முழங்கை முட்டி பகுதியில் காப்பு போன்று மூன்று வரிகள் கொண்ட அணிகலன் அணி செய்கிறது. கால்களில் தண்டை, பாத சரம் அணிசெய்கின்றன. புரிநூல் தோள்

பகுதியிலிருந்து வந்து நான்கு பிரிவாகப் பிரிந்து இரண்டு பிரிவு இருபக்கமும் வளைந்து செல்கிறது. இச்சிற்பம் கி.பி. 16- 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த உருவ அமைதியைக் கொண்டுள்ளது. இச்சன்னதியின் விமான அமைப்பு வேசர சிகரத்துடன் 4 பக்கமும் இரட்டை நந்திகளும், கிரீவப் பகுதியில் கர்ணக்கூடுகளும் உள்ளன. ஒரு கலசமும் உள்ளது.

தூண்கள்

வியாக்கரபாதர் கருவறையைச் சுற்றியுள்ள சுவரில் பதினேழு முழுத்தூண்களும், ஆறு அரைத்தூண்களும் உள்ளன. அர்த்தமண்டப சுவரில் பதினெட்டு தூண்கள் வடிக்கப்பட்டுள்ளன. முதல் திருச்சுற்றில் அமைந்த (பரிவார தெய்வங்கள் உள்ள) வராந்தாப் பகுதி முழுவதும் இருபத்தாறு உருளை வடிவிலான தூண்கள் வரிசையாக அமைந்துள்ளன. மேலும் சதுரம் (நான்கு பட்டை) மற்றும் பதினாறு பட்டை அமைப்புடைய தூண்களும் முதல் திருச்சுற்றில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் இரண்டு தூண்கள் தேவரடியார்களாலும், ஒரு தூண் எண்ணை வணிகப் பெண்ணாலும் செய்து கொடுக்கப்பட்டதை இங்குள்ள கல்வெட்டுகளின் வாயிலாக அறிகிறோம். இக்கல்வெட்டுகளைத் திருச்சுற்றின் தென்பகுதியில் வலதுபுறம் திரும்பும்போது உள்ள தூண்களில் காணலாம். இவற்றில் மூன்று தூண்கள் தற்போது மகாமண்டபத்திலிருந்து தடுக்கப்பட்ட அறையினால் மறைக்கப் பட்டுள்ளது. தென்புறம் மகாமண்டப சுவரின் எதிரில் அமைந்துள்ள தூணிலும், தடுக்கப்பட்ட அறையின் நடுவில் உள்ள தூணிலும் எழுத்துகள் தெளிவாக உள்ளன. இவைகள் அனைத்தும் நான்கு பட்டை அமைப்பு அதன் மேல் பதினாறு பட்டை அமைப்பும், அதன் மேல் (சதுர அமைப்பு) நான்கு பட்டையும் பதினாறு பட்டையும் கொண்டுள்ளது. நடுவில் உள்ள நான்கு பட்டை அமைப்பில் சிற்பங்கள் உள்ளன. மேலிலுள்ள

நான்கு பட்டை அமைப்பில் எழுத்துகள் உள்ளன. இவற்றில் தனியாக உள்ள தூணில் ஒரு புறம் புல்லாங்குழல் வாசிப்பது போன்ற சிற்பமும், மறுபுறம் பூப்போன்ற அமைப்பும் உள்ளது. தடுக்கப்பட்ட அறையில் மறைக்கப்பட்ட ஒரு தூணில் ஒரு பெண்ணின் நடனக்காட்சி சிற்பமும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

அடுத்துள்ள தூணில் வெளிப்புறம் பூவேலைப்பாடும் சதுர அமைப்பில் சிற்பமும் உள்ளன. ஒருவன் கையில் தடி ஒன்று வைத்து வலக்கையில் தொங்கவிட்டு பிடித்திருப்பது போன்று உள்ளது. இருபுறமும் வணங்கிய இரண்டு குரங்குகள் உள்ளன. இவன் மழுங்கிய தலையுடன் காதுகளில் குண்டலங்களுடன் காட்சியளிக்கிறான்.

இதே போன்ற சிற்பம் உள்ள தூண் ஒன்று வடகிழக்கு மூலையில் மகாமண்டப சுவரின் எதிரில் உள்ளது.

பரிவாரக் கோயில் தெய்வங்கள்

இக்கோயிலின் முதல் திருச்சுற்றுத் திருமாளிகை மண்டபப் பகுதியில் யோக தட்சிணாமூர்த்தி, அய்யனார், சப்தமாதர்கள், செல்வவிநாயகர், பர்வதவர்தனி, லிங்கம், முருகன், ஸ்ரீவத்ஸம், தண்டாயுதபாணி, கண்ணன் கெஜலெஷ்மி ஆகிய சிற்பங்கள் உள்ளன. பரிவார தெய்வங்கள் யாவும் சோழர் காலத்திலேயே அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாக முதலாம் குலோத்துங்கனின் 31-ஆவது ஆட்சியாண்டில் முதலாம் இராசேந்திரசோழ சேதிராயனின் மனைவி பரிவார தெய்வங்களின் வழிபாட்டுக்காக நிலக்கொடை அளித்துள்ளதை இங்குள்ள கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

யோக தட்சிணாமூர்த்தி

இச்சிற்பம் கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம். இச்சிற்பம் வடக்குப் பார்த்து நின்றநிலையில்

தென்புறம் பார்த்தவாறு ஜடாபாரத்துடன், ஆலமரத்தடியில் இடக்காலை மடக்கி வலக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் முன் இருகைகளில் இடக்கையில் சுவடியும், வலக்கையில் சின் முத்திரையும் பின் இருகைகளில் இடக்கையில் அனலும், வலக்கையில் பாம்புடனும், புரிநூல் இடதுப் பக்கமிருந்து வயிறு வரை வந்து வலக்கை மீது சுற்றியவாறு கீர்த்தி முகத்துடன் கூடிய இடைக்கச்சை அணிந்து காட்சியளிக்கிறார்.

அய்யனார்

யோக தட்சிணாமூர்த்திக்கு அருகில் அய்யனார் சிற்பம் உள்ளது. மனைவியர் பூரணி, புஷ்கலா ஆகிய இருவருடன் அமர்ந்த நிலையில் உள்ளார். அய்யனார் இடக்காலை மடக்கி, வலக்காலைத் தொங்கவிட்டுள்ளார். வலக்கையில் சாட்டையைப் பிடித்துக் கொண்டு, இடக்கையைத் தொங்கவிட்ட நிலையில் அய்யனார் விரிசடையுடன் உள்ளார். பூரணியின் வலக்கையில் தாமரையும், இடக்கையை மடித்த கால்மீது வைத்தும், புஷ்கரணியின் வலக்கையில் அல்லிமலரும், இடக்கையை மடக்கிய தொடைமீது வைத்தும் காட்சியளிக்கின்றனர். இச்சிற்பத்தின் காலம் கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

சப்தமாதர்கள்

முதல் திருச்சுற்றில் கருவறையின் தெற்கில் திருச்சுற்று மாளிகையில் சப்தமாதர் உருவங்களில் ஆறு உருவங்கள்தான் உள்ளன. பிராமி, இந்திராணி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி மற்றும் சாமுண்டி என்று வரிசையாக அனைவரும் இடக்காலை மடக்கி, வலக்காலைத் தொங்கவிட்ட நிலையில் அமர்ந்துள்ளனர். இச்சிற்பத்தொகுதியில் மகேஸ்வரியின் சிற்பம் இல்லை. அனைவரும் முன்னிரு கைகளில் வலக்கையை அபய முத்திரையிலும், இடக்கையை தொடை மீது வைத்தும்

(சாமுண்டாவை தவிர) காணப்படுகின்றனர். பின்னிரு கரங்களில் அவரவர்க்குரிய ஆயுதங்களான பிராமிக்கு கெண்டியும், அக்கமாலையும், இந்திராணிக்கு வஜ்ரமும், சக்தியும், கௌமாரிக்கு சக்தியும், வஜ்ரமும், வைஷ்ணவிக்கு சங்கு, சக்கரமும், வராகிக்கு சங்கு, சக்கரமும், சாமுண்டாவுக்கு சூலம், அனல் ஆகியன இடம்பெற்றுள்ளன. பிராமிக்கு மூன்று முகங்களும், சாமுண்டாவிற்கு விரிந்த சடையும், கோரைப் பற்களும் கொண்டு காட்சியளிக்கின்றனர். இச்சிற்பங்கள் அனைத்தும் கி.பி. 16-17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

விநாயகர் சிற்பத்தை அடுத்து பெரியதும், சிறியதுமான இராமநாதர், விஸ்வநாதர் என்று அழைக்கப்படும் இரண்டு லிங்கங்கள் ஆவுடையாருடன் உள்ளன.

பர்வதவர்தனி

இரண்டு கைகளுடன் நின்றநிலையில் இடக்கையை தொடை மீது வைத்தும், வலக்கையில் நீலோற்ப மலர் பிடித்தும் உள்ளாள். இச்சிற்பம் கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கூறலாம்.

ஆறுமுகர்

ஆறுமுகத்துடன் முருகன் மயில் வாகனத்தின்மீது அமர்ந்த நிலையில் இடக்காலைத் தொங்கவிட்டு வள்ளி தெய்வயானையுடன் காட்சியளிக்கிறார். பன்னிரண்டு கைகளில் முன்னிரு கைகள் இடக்கை வரதம், வலக்கை அபயம் முத்திரைகளிலும் மற்ற கரங்களில் சக்திப்படை, வஜ்ரம், ஈட்டி, சக்தி, வில் போன்ற ஆயுதங்களைத் தாங்கியுள்ளார். நெற்றியில் கன்னிமாலை உள்ளது. மார்பில் வீரசங்கிலி, முப்புரிநூல், தோளில் தோள்வளை வங்கி ஆகியவையும் அலங்கரிக்கின்றன. வாகனமான மயில் அழகுடன் வடிக்கப்பட்டுள்ளது. மயிலின்

வாயில் பாம்பு சுற்றி உள்ளது. கால்களில் காப்பு, தண்டை, பாதசரம் ஆகியனவும் அலங்கரிக்கின்றன. தொடை வரை ஆடை அணிந்துள்ளார். முருகன் பூப்போன்ற அலங்காரம் செய்யப்பட்ட பிரபையினுள் காட்சியளிக்கிறார். முருகருக்குக் கீழ் ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கம் உள்ளது.

வள்ளி

முருகனின் வலப்பக்கம் உள்ள வள்ளியின் இரண்டு கைகளில் இடக்கையில் தாமரை மலரும், வலக்கை தொங்கவிட்டு டோல ஹஸ்தத்தடன் திரிபங்கமாக நின்றநிலையில் உள்ளார். தலையினைக் கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது.

தெய்வயானை

முருகருக்கு இடப்பக்கம் தெய்வயானை இரண்டு கைகளுடன் வலக்கையில் அல்லி மலரும், இடக்கையைத் தொங்கவிட்டும் பத்மபீடத்தின் மீது நின்றநிலையில் காட்சியளிக்கிறாள். கழுத்தில் நான்கு விதமான சங்கிலிகளும், கைகளில் இரண்டு வளையல்களும் அணி செய்கின்றன. இச்சிற்பம் 18-19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

தண்டாயுதபாணி

தண்டாயுதபாணி சிற்பம் முருகன் சன்னதிக்கு அடுத்துள்ளது. இவர் மழுங்கிய தலையுடன் திரிபங்க நிலையில் நின்றவாறு கழுத்தில் மணி, ருத்ராட்ச மாலை தரித்து இடக்கையைத் தொடைமீது வைத்தும் வலக்கையில் தண்டம் பிடித்து தரையில் ஊன்றி நிற்கிறார். இந்த சிற்பம் மிக சிறியதாக உள்ளது. இவை கி.பி. 18,19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

ஸ்ரீவத்ஸம்

நீள்வட்டமான கல்லில், கால்களை மடக்கி விரிந்த தாமரை மீது அமர்ந்த நிலையில் உருவம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. தலையில் ஜடாமுடியுடன் காதுகளில் பெரிய குண்டலமும், காதுகளுக்குப் பின்னால் விரிந்த அமைப்பும் உள்ளது. இரண்டு கைகளையும் சின் முத்திரையில் வைத்துக் கொண்டு கண்களை மூடி தியான நிலையில் காட்சியளிக்கிறார். இச்சிற்பம் கி.பி.14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

வேணுகோபால்

வேணுகோபால் சிற்பம் ராதையுடன் உள்ளது. நான்கு கைகளில் பின்னிரு கைகள் சங்கு சக்கரத்துடன் கத்தரி முத்திரையில் உள்ளது. முன்னிரு கைகள் புல்லாங்குழல் வாசித்த நிலையில் உள்ளது. இடக்காலை ஊன்றி வலக்காலை இடப்பக்கமாகக் கொண்டுவந்து சிறிது ஊன்றி நடன சிற்பமாக காட்சியளிக்கிறது. இடப்புறம் தாமரை மலருடன் ராதை திரிபங்க நிலையில் நிற்கிறாள்.

விநாயகர்

விநாயகர் சிற்பம் ஒன்று சிறிய அளவில் உள்ளது. இவர் இடம்புரி விநாயகராக அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார்.

கெஜலட்சுமி

வடமேற்கு மூலையில் கெஜலட்சுமி சிற்பம் கிழக்கு நோக்கி உள்ளது. லட்சுமி பத்மாசன நிலையில் முன்னிரு கைகள் அபயம், வரதமும் பின்னிரு கைகளில் தாமரை மலரையும் ஏந்தி உள்ளாள். இருபுறமும் யானை பின் கால்களை ஊன்றி முன் கால்களைத் தூக்கி நின்று தும்பிக்கையில் லட்சுமியின் கையில் உள்ள மலர் கலசத்துடன் உள்ளது. பின்புறம் பிரபை அமைப்பில் உள்ளது. லட்சுமிக்கு மேல் நரசிம்ம முகம் உள்ளது. இச்சிற்பம் கி.பி.13-14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.

கட்டடக்கலை

சதுரமான கருவறையும் நீள் சதுர அர்த்த மண்டபத்தையும் அதற்கடுத்து சிறிய கட்டு போன்ற அமைப்பும், மகாமண்டபமும் (நான்கு தூண்களைக் கொண்ட) முன் மண்டபமும் அமைந்து காணப்படுகிறது. கருவறை தரை மட்டம் அர்த்தமண்டபம் மற்றும் மகாமண்டபத் தரையைவிட சிறிது தாழ்வாக உள்ளது. அர்த்தமண்டப வாயிலில் சோழர்கால துவாரபாலகர்கள் நேர்த்தியானவையாக உள்ளன. இக்கோயில் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் (கி.பி. 907-953) கட்டப்பட்டது என்பதை முன்னரே அறிந்தோம். அதன் பிறகு முதலாம் குலோத்துங்கன் காலத்தில் அவனது படைத்தலைவன் நரலோக வீரனால் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டது என்று இங்குள்ள சமஸ்கிருதக் கல்வெட்டுகள் மூலமாக அறிகிறோம். புதுப்பிக்கப்படும்போது முதல் பராந்தகன் மற்றும் இராட்டிரகூட மன்னன் கன்னரதேவன் கல்வெட்டுகள் மீண்டும் கோயில் சுவர்களில் பதிப்பிக்கப்பட்டு உள்ளன. ஆனால் அவைகள் குலோத்துங்கன் காலத்து எழுத்துகளிலிருந்து வித்தியாசப்படுகின்றன. அவை பெரியதாகவும் அழகாகவும் எழுத்துக்கள் அமைந்துள்ளன. ஆகவே இக்கட்டட அமைப்புகள் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டு, அதன் பிறகு கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் மீண்டும் அவைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

கருவறையிலிருந்து வரும் அபிசேகத் தண்ணீர் திருச்சுற்றில் வடக்குப் புறத்தில் வெளியில் வருவதற்கு சிம்ம முகத்துடன் கூடிய கோமுக அமைப்பில் சிறு தொட்டி அமைந்துள்ளது. அவற்றை ஒட்டினாற் போல் கருவறை அர்த்தமண்டப சுவர்களைச் சுற்றிலும் சுமார் 1 அடி உயரத்தில் நீராழிபத்தி காணப்படுகிறது. அபிசேகத் தண்ணீர் வெளியில் செல்வதற்கு நீராழிபத்தி அமைக்கப்பட்டுள்ளது. அபிசேக நீர் யாவும் இரண்டாம் திருச்சுற்றில் பெரிய தொட்டியில் விழுகிறது. தளவரிசையிலிருந்து கருவறை மட்டத்திற்கு 5 அடி ஆழம் பள்ளமாக உள்ளது. வடக்குப்புறத்தில் துர்கைக்கு எதிரில் உள்ள கிணற்றில் இருந்து பூசைக்கு தண்ணீர் பெறப்படுகிறது. இக்கிணறு எப்பொழுதும் நீர் வற்றாமல் காணப்படுகிறது. இக்கிணறு சோழர் காலத்திலேயே எடுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

விமானம்

கருவறை மேல் எழுப்படும் கட்டடத்திற்கு விமானம் என்று பெயர். இவ்விமானமானது அதிட்டானம், பாதம், சுவர், கபோதகம், கண்டம், சிகரம், கலசம் என கோயில் முழு அங்கங்களுடன் கட்டப்பட்டுள்ளது. கருவறையின் பிரதான திசையில் தேவகோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விமானத்தின் முதற்கட்டடப் பகுதியாக அதிட்டானம் வர்க்க அலங்காரத்துடன் கீழ் இருந்து மேலாக உபானம், ஜகதி, குமுதம், கண்டம், பட்டிகை ஆகிய அங்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

அதிட்டானப் பகுதி சிறிது பூமிக்குள் புதைந்துள்ளது. அடுத்துள்ள சுவர்ப்பகுதி பல கால் வரிகளையும் தேவகோட்டங்களையும் பெற்றுத் திகழ்கிறது. சுவர்ப்பகுதியில் உள்ள அரைத்தூண்களில் தூண்களின் அலங்கார அணிகலன்கள் மேல் இருந்து கீழாக போதிகை, வீரகண்டம், பலகை, கண்டம், ஆஸ்யம், பத்மம், விருத்தம், கலசம், இடைகட்டு, கட்டுமாலை என கால் அணிகலன்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கருவறை தேவகோட்டங்களில் இரு பக்கம் அரைத்தூணுடன் தெற்கே தட்சிணாமூர்த்தியும், மேற்கே லிங்கோத்பவரும், வடக்கே பிரம்மாவும் உள்ளனர். தேவகோட்டத்தின் உயரம் 3 அடி 2 அங்குலம் உயரம் கொண்டு அமைந்துள்ளது. தேவகோட்டம் பத்ர தோரணத்துடன் நடுவில் வட்டமாகவும் உள்ளன.

பிரஸ்தரத்தின் கீழ் பூதவரியும் அதன் மேல் உத்திரம் பகுதியில் சிம்ம கூடுகளின் வரிகளும் உள்ளன. சிம்ம தலையுடன் கூடிய வட்டமான கூடுகளுக்குள் மனிதனின் உருவ அமைப்பும் பூப்போன்ற அமைப்பும் சித்தரிக்கப்பட்டுள்ளன. அதன் வெளியில் கொடி இதழ்கள் அலங்கரிக்கின்றன. அதன் மேல் கூடுகளும், சாலைகளும் இரு நிலைகளில் உள்ளன. கூடுகளும் சாலை அமைப்புகளும் கலசங்களைக் கொண்டுள்ளன. கூடுகள் ஒரு கலசத்தையும், சாலைகள் மூன்று கலசங்களையும் கொண்டுள்ளன. விமானம் சுதையினால் கட்டப்பட்டனவாகும். மேலும் கூடுகளுக்கும் சாலைகளுக்கும் நடுவே மூன்று நிலைகளிலும் தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கே தேவியருடன் நரசிங்கபெருமாள் வடக்கே பிரம்மன் ஆகியன அமைக்கப்பட்டு உள்ளன. தட்சிணாமூர்த்தி சிற்பம் யோக தட்சிணாமூர்த்தியாகவும், அருகில் சனகர், சனக்குமாரர், சனந்தரர், சனார்த்தனர் ஆகிய நான்கு முனிவர்களின் சிற்பங்கள் உள்ளன. தட்சிணாமூர்த்தி இடக்காலை நீட்டி வலக்காலை மடக்கி முயலகன் மீது கால் வைத்து அமர்ந்துள்ளார். மேற்கே நரசிங்க பெருமாள் சிற்பம் அமர்ந்த நிலையில் இடக்காலை மடக்கி, வலக்கால் தொங்குகிறது. அருகில் ஸ்ரீதேவி, பூதேவி சிற்பங்களும் உள்ளன. வடக்குபுறம் பிரம்மன் இடக்காலை மடக்கி வலக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளார். இருநிலைகளில் நான்கு பக்கமும் மனித உருவங்கள் தொப்பி அணிந்து (விமான தேவதைகள்) விமானத்தைத் தாங்குகின்றன. அதற்கடுத்துள்ள கிரீவப் பகுதிக்குக் கீழ் வரிசையில் கூடுகள் உள்ளன. கிரீவம் வட்டமான அமைப்புடனும், சிகரம் வேசர சிகரத்துடனும் ஒரு கலசத்தையும் பெற்று காட்சியளிக்கின்றன. இவற்றை நோக்கும்போது இந்த விமானம் விஜயநகர மன்னர்கள் காலத்திலும் கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளிலும் புதுப்பிக்கப்பட்டனவாகத் தோன்றுகிறது. விமானத்தின் உயரம் அதிட்டான அமைப்பிலிருந்து ஸ்தூபி வரை மொத்தம் 24 அடி 10

அங்குலம் உயரம் கொண்டதாக உள்ளது. அதிட்டானப் பகுதி ஜகதியிலிருந்து சுவர் வரை 13.6 அடி உயரமும் சுவரிலிருந்து ஜகதி கிரீவப் பகுதிவரை 18 அடி 1 அங்குலமும், வேசர சிகரம் 4 அடி 3 அங்குலமும், கலசம் 2 அடி 6 அங்குலம் உயரம் கொண்டதாக உள்ளது.

இரண்டாம் திருச்சுற்று

முதல் திருச்சுற்றுக்கு அடுத்து இரண்டாம் திருச்சுற்று செல்கிறது. இரண்டாம் திருச்சுற்றுக்குச் செல்வதற்கு நான்கு படிகள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 5 அடி உயரமுடையதாக இரண்டாம் திருச்சுற்று தளவரிசை அமைந்துள்ளது. எனவே கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முன் மண்டபம் ஆகியன தாழ்வாக அமைந்துள்ளன. முதல் திருச்சுற்று முடிந்து வெளியில்வரும் முன் மண்டப வாயிலில் பெரியதான மரக்கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. வாயிலின் முன் பகுதி வெட்டுப்பட்ட நிலையில் உள்ளன. அதற்கடுத்து ஒரு சிறுமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. நடுவில் படி அமைப்புகள் உள்ளன. இருபுறமும் இரண்டு இரண்டு முழு தூண்களைக் கொண்ட திண்ணை போன்று மேடை அமைக்கப்பட்டுள்ளது. சுவரின் மேல் பகுதியில் ரிசபாந்திகர், விநாயகர், பூதகணங்கள், வள்ளி, தெய்வயானையுடன் முருகர், சுந்தரர் ஆகியோரது சிற்பங்கள் இரண்டாம் திருச்சுற்று முன் அலங்கரிக்கின்றன. மேலும் திருச்சுற்று மதில் மீது நந்திகள் காணப்படுகின்றன. அவை வடக்குப் பார்த்த வண்ணம் ஆறு நந்திகளும். கிழக்குப்புற மதில் சுவர் மீது நான்கு நந்திகளும், தெற்குப்புறம் ஆறு நந்திகளும், மேற்குப்புறம் நான்கு நந்திகளும் ஆக மொத்தம் இருபது நந்திகள் உள்ளன.

இரண்டாம் திருச்சுற்றில் நீலவிசாலாட்சி அம்மன் கோயில், வாகன மண்டபம், சனீஸ்வரர் கோயில், யாகசாலை,

நந்திமண்டபம், கொடி மரம், பலிபீடம், விநாயகர், விஷ்ணு போன்றனவும் திருக்குளம், சரக்கொன்றை மரம், மடப்பள்ளி ஆகியனவும் உள்ளன.

நீல விசாலாட்சி அம்மன் கோயில்

சிவன் கோயிலின் வடக்குப் புறத்தில் கிழக்கு நோக்கி அம்மன் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலும் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியவைகளைப் பெற்றுத் திகழ்கிறது. இக்கோயில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் முதல் குலோத்துங்கன் காலம் முதல் அம்மனுக்கு தனியாக சன்னதி அமைக்கும் முறை வழக்கத்திற்கு வந்தது. இங்குள்ள கல்வெட்டுச் சான்றினைக் கொண்டு சோழர் காலத்தில் அம்மனுக்குத் தனிச் சன்னதி எடுக்கப்பட்டுள்ளதை உறுதி செய்யமுடிகிறது. தற்போதுள்ள இக்கோயில் கட்டட அமைப்பு நான்கு பிரிவாக உள்ளது. பழைய கற்களைக் கொண்டு புதிதாக அமைக்கப் பெற்றதாகத் தோன்றுகிறது என்று பாகூர் சு. குப்புசாமி அவர்கள் 1977-இல் வெளியான தினமணிச்சுடர் நாளிதழ் செய்தியில் குறித்துள்ளார். ஏனெனில் பழைய கற்றளியில் இருந்த கல்வெட்டுகள் சிதைந்த நிலையில் முறைமாறி வைத்து கட்டப்பட்டுள்ளதைக் கொண்டு இதை நிறுவுகிறார். எனவே இச்சன்னதி பிற்காலத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை நன்கு உணரமுடிகிறது.

அம்மன் கோயில் கருவறை

சதுரமான கருவறையின் நடுவில் அம்மன் காட்சியளிக்கிறாள். கருவறை தரைப்பகுதியானது அர்த்தமண்டப பகுதியைவிட சற்று உயரமாக உள்ளது. கருவறை வாயிலின் உயரம் 160 செ.மீ. அளவுடையதாக உள்ளது. அதற்கடுத்து அர்த்தமண்டபம் அமைந்துள்ளது.

அடுத்துள்ள மகாமண்டபத்தில் நான்கு முழுத் தூண்கள் உள்ளன. அவை கீழ்ப்பகுதி நான்கு பட்டையுடனும் நடுவில் 16 பட்டை அமைப்புடனும் மேல் பகுதி நான்கு பட்டை அமைப்புடனும் காணப்படுகின்றன. இம்மண்டபத்தின் வடக்குப்புறம் சுவரை ஒட்டியவாறு திண்ணை போன்ற அமைப்பு சுமார் மூன்று அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவை உற்சவ அம்மனுக்காக அமைக்கப்பட்ட இடமாகும்.

மேலும், இம்மண்டபத்தில் மணி ஒன்றும், பித்தளை கெண்டி ஒன்றும் உள்ளது.

மகாமண்டபத்தை முன் மண்டபத்தில் இரண்டு வரிசையில் ஐந்து ஐந்தாக பத்து முழுத் தூண்களும், அரைத்தூண்களும் உள்ளன. இம்மண்டப விமானத்தில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு மீனை மற்றொரு மீன் விழுங்குவது போன்றும் உள்ளது. இதுபோன்று மண்டபத்தின் வெளிப்புறச் சுவரிலும் மீன் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இங்கு மூன்றாம் இராஜராஜ சோழனின் 15-ஆவது ஆட்சி ஆண்டுக் (கி.பி.1237) கல்வெட்டும் இங்குள்ளது. இம்மண்டபம் பாண்டியர், விஜயநகரர் காலங்களில் செப்பனிடப்பட்டிருக்க வேண்டும்.

விமானம்

அதிட்டானப் பகுதி சாதாரண அமைப்புடையதாக உள்ளது. சுவர்ப்பகுதியில் உள்ள தேவகோட்டங்களில் சிற்பங்கள் ஏதும் இல்லை. பிரஸ்தரப் பகுதியில் (நாசி கூடுகளில்,) சிற்பங்கள் உள்ளன. சிவலிங்கத்திற்கு பசு பாலைப் பொழிவது போன்ற சிற்பம் குறிப்பிடத்தக்கதாகும். இது போன்ற சிற்பம் வாகன மண்டபத்தின் தென்புறமும் உள்ளது. விமானம் சுதையினால் ஆனது. வேசர சிகர அமைப்பும், கலசமும் கொண்டு விமானம் திகழ்கிறது. நான்கு புறமும் அம்மன் சிற்பங்கள் உள்ளன. நடுவில் விமான தேவதைகள் சிற்பங்களும் உள்ளன. அம்மன்

கோயிலுக்கு முன் மண்டபத்தின் மேல் மணிமண்டபம் ஒன்று உள்ளது. இங்கு பெரிய அளவிலான பித்தளை மணி கட்டப்பட்டுள்ளது. அம்மன் கோயிலுக்கு வடக்குப்புறம் சண்டிகேஸ்வரி சன்னதி அமைக்கப்பட்டுள்ளது.

சனீஸ்வரர் கோயில்

வடகிழக்கு மூலையில் மேற்குப் பார்த்தவண்ணம் அமைந்துள்ளது. சனீஸ்வரர், சூரியன், சந்திரன் உள்பட 9 நவகிரகங்களும் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கடுத்து யாக சாலை என்ற ஒரு அறையும் உள்ளது. இங்குதான் யாகங்கள் வளர்க்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இவைகள் பிற்காலத்தில் அமைக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.

வாகன மண்டபம்

செவ்வக அமைப்புடைய அறையில் வாகனங்கள் வைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபம் உற்சவ மண்டபம் என்றழைக்கப்படுகிறது. 20 முழுத் தூண்களைக் கொண்டு இம்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இவை தெற்கு நோக்கியவண்ணம் சிவன் கோயிலுக்கு எதிரில் உள்ளது. வாகனங்கள் வைக்கப்பட்டுள்ள அறையின் வாயிலை இரு அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. இவை சதுர அமைப்பு ஓரத்தில் சிறிதளவு நாகபந்தம், பின்னர் 16 பட்டை அமைப்பும் சதுர அமைப்பும் கொண்டனவாக உள்ளது. போதிகை நீண்டு வாழை மொக்கு தொங்குவது போல் உள்ளது. இவை பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டவையாகக் கொள்ளலாம். இங்கு சுந்தர பாண்டியன் கல்வெட்டொன்றும் பொறிக்கப்பட்டு உள்ளது.

நந்தி மண்டபம்

வேசர சிகரத்துடன் நந்தி மண்டபம் நான்கு தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. தூண்கள் நான்கு பட்டை, எட்டு

பட்டை, நான்கு பட்டை அமைப்பு கொண்டனவாக உள்ளது. போதிகை அமைப்பு வெட்டுப்பட்டனவாக உள்ளது. பிரஸ்தரப் பகுதியில் நான்கு பக்கமும் பார்க்கும் மாதிரி நான்கு மூலைகளிலும் நந்திகள் உள்ளன. நடுவில் முருகர் வள்ளி தெய்வயானையுடன் உள்ள சிற்பங்களும், கிழக்குப்புறம் ரிசபாந்திகர் சிற்பமும், தெற்குப்புறம் விநாயகர் சிற்பமும் அழகு செய்கின்றன. மண்டபத்தின் நடுவில் நந்தி கருவறையை நோக்கிய வண்ணம் படுத்துள்ளவாறு எடுக்கப்பட்டுள்ளது. நந்தி சிற்பம் மிக அழகாக கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டு சோழர் கால அமைதியில் உள்ளது.

அதற்கடுத்துள்ள பலிபீடம், உபானம், ஜகதி, விருத்த குமுதம் கால் அதன் மேல் நான்கு புறமும் சிம்மகூடுகளும், பூப்போன்ற அமைப்பும் அலங்கரிக்கின்றன.

பலிபீடத்தை அடுத்து கோயிலுக்கு முன்னுள்ள விநாயகர் இடம்புரி விநாயகராக கரண்ட மகுடத்துடன் அமர்ந்த நிலையில் உள்ளார். சுற்றிலும் மாடம் போன்ற அமைப்பு கட்டப்பட்டுள்ளது. இது பிற்காலத்தைச் சேர்ந்த சிற்பமாகும்.

சண்டிகேஸ்வரர் சிற்பம்

வாகன மண்டபத்தை ஒட்டியவாறு கிழக்குப் பார்த்த வண்ணம் சண்டிகேஸ்வரர் போன்ற சிற்பம் பலகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. வலக்காலை மடக்கி இடது காலை வலது கால் மீது தொட்டு கீழே வைத்திருப்பது போல் உள்ளது. இடக்கையை தொடை மீது வைத்தும் வலது கை மழுவைப் போல் ஒன்றைத் தாங்கியவாறு உள்ளது. இவற்றில் பாம்பு சுற்றியுள்ளது. கழுத்தில் பட்டையான மணி உள்ளது. இச்சிற்பம் மிகப்பழமையான ஒன்றாகும். இச்சிற்பம் கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

திருக்குளம்

வடகிழக்கு மூலையில் சதுர வடிவில் திருக்குளம் அமைந்துள்ளது. படிக்கட்டு வசதிகள் அமைக்கப்பட்டு சுற்றிலும் சுற்று மதில் அமைக்கப்பட்டும், மழைக்காலங்களில் இக்குளம் தண்ணீர் நிரம்பிக் காணப்படுகிறது. சுற்றியுள்ள வாய்க்கால்கள், ஆறுகள் இவற்றில் தண்ணீர் நிறையும்போது இக்குளமும் நிரம்பிவிடும். திருவிழாக்காலங்களில் கோயிலுக்குத் தேவையான தண்ணீர் இதிலிருந்து பெறப்படுகிறது. குளக்கரையில் சிறு தடுப்பு போன்ற ஒரு அறையும் உள்ளது. நந்தவனம் இதன் அருகில் அமைந்துள்ளது. சித்திரைத் திருவிழாவின்போது குளக்கரையில் வைத்துதான் காப்பு கட்டுதல், காப்பு அவிழ்த்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இக்குளம் விசயநகர காலத்தைச் சேர்ந்ததாகும்.

மடப்பள்ளி

தென்கிழக்கு மூலையில் காணப்படுகின்ற மடப்பள்ளியானது இரண்டு அறைகளாகத் தடுக்கப்பட்டுள்ளது. சுவாமிக்குத் தேவையான அமுது இங்குதான் செய்யப்படுகிறது. மற்றொரு அறை சமையலுக்குத் தேவையான பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்குக் கட்டப்பட்டதாகும். இம்மடப்பள்ளி சோழர் காலத்தைச் சார்ந்தவை என்பது இங்குள்ள கல்வெட்டுச் செய்தியின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

சரக்கொன்றை மரம்

வியாக்கரபாதீஸ்வரர் கோயில் கருவறைக்குப் பின்புறம் தலவிருட்சமாக சரக்கொன்றை மரம் உள்ளது. இவை இரண்டாம் திருச்சுற்றில் அமைந்துள்ளது. மேலும் இங்கு விநாயகர் சிற்பம் தென்கிழக்கு மூலையிலும், விஷ்ணுவின் சிற்பம் வடகிழக்கு மூலையிலும் கிழக்குப் பார்த்தவண்ணம் வைத்துள்ளனர்.

மூன்றாம் திருச்சுற்று

இரண்டாம் திருச்சுற்றை அடுத்து சுமார் ஐந்து அடி உயரம் கொண்ட மதில் சுவர் கட்டப்பட்டுள்ளது. அதற்கடுத்துள்ள சுமார் 15 அடி அகலம் கொண்ட பரப்புடன் நந்தவனம் சுற்றுச்சுவருடன் அமைந்துள்ளது. இங்கு நந்தியாவட்டம் பூச்செடி மற்றும் செடி, கொடிகளும் அமைந்துள்ளன. மா, பலா, தென்னை, கொய்யா முதலான மரங்களும் இந்நந்தவனத்தினை அழகு செய்கின்றன. தினந்தோறும் இங்கிருந்துதான் பூக்களைப் பறித்து சுவாமிக்கு மலர் மாலை சாத்துவதாக இக்கோயில் குருக்கள் கூறுகின்றனர். இரண்டாம் இராசராச சோழன் காலத்தில் (கி.பி.1153) மணலூரைச் சேர்ந்த ஒருவன் (திருவகத்தி பழிப்பிலியன்) சித்தலிங்கமடத்து இறைவனுக்கு பூந்தோட்டம் அமைக்க நிலதானம் செய்தான் என்பதும் இங்குள்ள கல்வெட்டின் வாயிலாக அறியப்படுகிறது. மணலூர் என்பது தற்போது மணலூர்பேட்டை என்ற பெயருடன் சித்தலிங்கமடத்துக்கு மேற்கே திருக்கோவிலூரிலிருந்து 14 கி.மீ. தொலைவில் உள்ளது.

கோபுர வாசற்படி

கோயில் நுழைவாயில் கோபுரவாசற்படி என்று அழைக்கப்படுகிறது. (ஏனெனில் இங்கு கோபுரம் இல்லை). தற்போது வாயிற்கோபுரம் முனைவர் தா. கார்த்திகேயன் இஆப., அவர்களின் முயற்சியால் 2009-ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. கோபுர வாயிற்படிக்கு மேல் மீனாட்சி சுந்தரேசர் கல்யாணம், பிருங்கிரிஷி, பிரம்மா, நந்தி தும்புருவர், நாரதர், விஷ்ணு, லஷ்மி, சரஸ்வதி, பதஞ்சலி முனிவர் போன்றோர் சிற்பங்கள் வரிசையாக உள்ளன. வாயிற் கோபுரத்திற்கு மேல் செலவிற்கு படிக்கட்டு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இங்குள்ள சுவர்களில் 1956-ல் கும்பாபிடேகத்தின்போது வரையப்பட்ட ஓவியங்கள் உள்ளன. அர்ச்சுன தவசு சிவனை

வேண்டி ஊசிமேல் தவசு செய்த காட்சியும், விநாயகர் சுந்தரரை வழிமறித்து தனக்கு பாடல் பாடவேண்டும் என்று வாதாடும் காட்சியும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன.

கல்யாண மண்டபம்

கோயிலுக்கு வெளியில் மண்டபம் ஒன்று உள்ளது. இதனைக் கல்யாண மண்டபம் என்று அழைக்கின்றனர். இம்மண்டபம் 46 தூண்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. தூண்கள் யாவும் நான்கு பட்டை அமைப்பு அதன்மேல் 16 பட்டை என்று தூண்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தூண்களிலும் நாகபந்தம் காணப்படுகிறது. எனவே இம்மண்டபம் பிற்காலத்தில் கட்டப்பட்டவை எனக் கருதலாம்.

நவகண்டம்

திருப்புலிபகவர் கோயிலுக்கு முன் நவகண்டச் சிற்பங்கள் உள்ளன. பலகைக் கல்லில் எழுத்துக்களும், அதற்கு அருகில் தலையில்லாமல் சிற்பங்களும் காட்சியளிக்கின்றன. முழு உருவத்துடன் கூடிய சிற்பம் ஒன்று கையில் கத்தியுடன் காட்சியளிக்கிறது. இவ்வெழுத்துக்களை நோக்கும்போது பிற்காலத்தைச் சேர்ந்தவையாகக் கருதமுடிகிறது. இக்கல்வெட்டு தெளிவாக படிக்க முடியாமல் சிதைந்துள்ளது. இக்கல்வெட்டில் (சிற்றிங்கூர்) என்பது "சிற்றிங்கமடம் அறமாக" என்ற ஒரு வாசகம் காணப்படுகிறது.

இவ்வூரிலுள்ள பிற கோயில்கள்

சித்தலிங்கமடத்தில் திருப்புலிபகவர் கோயில் அல்லாமல் இன்னும் பிற கோயில்களும் உள்ளன. விநாயகர் கோயில், கெங்கையம்மன் கோயில் முதலானவை ஊரின் பிரதானப் பகுதியிலும் மாரியம்மன் கோயில், பாவாடைராயன், அங்காளம்மன் கோயில் ஆகியன ஊரின் தென்பகுதி எல்லையிலும் காணப்படுகின்றன. காளியம்மன் கோயில் ஊரின் தெற்கே 2 கி.மீ. தொலைவில் எல்லை தெய்வமாக உள்ளது.

விநாயகர் கோயில்

இக்கோயில் 'வாதாடி விநாயகர்' என்று தற்போது அழைக்கப்படுகிறது. சைவ சமய குரவர்கள் நால்வருள் ஒருவரான சுந்தரரை வழிமறித்து தனக்குப் பாடல் பாடவேண்டும் என்று வாதாடியதாகவும், வியாக்கரபாதீஸ்வரர் புலி உருவில் இருந்ததால் பாட மறுத்ததாகவும் புராணச் செய்தியாக மக்களால் கூறப்படுகிறது.

இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், பலிபீடம் ஆகிய அமைப்புகளைப் பெற்றுத் திகழ்கிறது. முன்மண்டபத்தில் இரண்டு விநாயகர் சிற்பங்கள் உள்ளன. கருவறையில் உள்ள விநாயகர் இடம்புரி விநாயகராக அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். கருவறை விமானம் நாகர சிகரத்துடன் ஒருநிலைக் கொண்டதாக உள்ளது. முகப்பில் அமர்ந்த நிலையில் விநாயகர் இரு கைகளுடன் காட்சி தருகிறார். வடக்குப் பக்கம் உள்ள விநாயகர் இடம்புரி விநாயகராக நின்ற நிலையில் 16 கைகளுடன் காட்சியளிக்கிறார். கிழக்குப் பக்கமாக நர்த்தன விநாயகர் ஆறு கைகளுடன் இடம்புரி விநாயகராக உள்ளார்.

தெற்குப் பக்கமாக சுகாசன நிலையில் பத்து கரங்களுடன் தேவியுடன் விநாயகர் காட்சியளிக்கிறார்.

விமானத்தின் கண்ட பகுதியில் நான்கு மூலைகளிலும் விநாயகரின் வாகனமான எலி அமைக்கப்பட்டுள்ளது. இவ்விமானம் சுதையினால் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், கலசம் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது.

விநாயகர் கோயிலைச் சுற்றிலும் மதில்சுவர் எழுப்பப்பட்டு, நுழைவாயிலின் மேல் விநாயகர் தேவியுடன் காட்சி தருகிறார். இக்கோயில் கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாகக் கருதலாம்.

இக்கோயிலின் தென்பகுதியில் மூத்த தேவி என்றழைக்கப்படும் ஜேஷ்டாதேவி சிற்பம் பலகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. ஜேஷ்டாவின் இருபுறமும் மாட்டுத்தலையுடன் அவளது மகனும், மகளும் உள்ளனர். இடப்பக்கம் வாகனமான காகம் உள்ளது. இச்சிற்பத்தின் உருவ அமைதியைக் கொண்டு கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

கெங்கையம்மன் கோயில்

இக்கோயில் கிழக்குப் பார்த்தவாறு ஊரின் வடமேற்கு மூலையில் உள்ளது. சுமார் 5 அடி உயரமுள்ள சுற்றுச் சுவர் நாற்புறமும் கொண்ட அறையில் ஐந்து தலைநாகத்தின்கீழ் தலை மட்டும் கொண்ட அம்மன் ஜுவாலை கேசத்துடன் காணப்படுகிறாள். அருகில் சுடுமண் பொம்மைகள் பலவும் உள்ளன.

மாரியம்மன் கோயில்

ஊரின் தென்பகுதியில் கிழக்குப் பார்த்தவண்ணம் அங்காளம்மன், பாவாடைராயர் கோயில்களுக்கு அருகில் அமைந்துள்ளது. கருவறை, அர்த்தமண்டபம். முன்மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு. கருவறையில் அம்மன் அமர்ந்த நிலையில் காணப்படுகிறாள். தலைக்குப் பின்னால் பிரபை அமைப்பு காட்டப்பட்டுள்ளது. அம்மன் நான்கு கைகளுடன், கரண்ட மகுடமும் அதன்மேல் ஐந்து தலைநாகமும், அதன் மேல் நரசிம்மர் உருவமும் உள்ளது. நான்கு கைகளில் முன்னிரு கைகளில் வலக்கை அபய முத்திரையிலும் இடக்கை வரத முத்திரையிலும் காணப்படுகின்றன. பின்னிரு கைகளில் வலக்கரம் உடுக்கையும், இடக்கரம் சூலமும் தாங்கியுள்ளன. இந்த அம்மன் உருவத்திற்கு முன் தலை மட்டும் கொண்ட அம்மன் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உருவ அமைதியை வைத்துப் பார்க்கும்போது கி.பி. 19-20-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

முன்மண்டபத்தின் தெற்குப்புறத்தில் நாகச் சிற்பம், நாக தேவதை, சுடுமண் பொம்மைகளும் காணப்படுகின்றன. கோயிலுக்கு முன் சிம்மம், பலிபீடம், பலகைக் கல்லில் நின்றநிலையில் இரு கைகளுடன் உருவம் ஒன்றும் உள்ளது.

பாவாடைராயர் கோயில்

ஊரின் எல்லை தெய்வமாக கருதப்படும் பாவாடைராயர் கோயில் ஊரின் தென்பகுதியில் அங்காளம்மன் கோயிலுக்கு அருகில் கிழக்கு நோக்கி கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம் ஆகிய அமைப்பைக் கொண்டுள்ளது.

கருவறையில் பாவாடைராயர் நின்றநிலையில் வலக்கையில் கத்தியும், இடக்கையில் கேடயமும், கோரைப் பற்களுடன் காட்சி தருகிறார். பாவாடைராயர் செப்புத் திருமேனி ஒன்றும் உள்ளது. தாமரை பீடத்தின்மீது நின்றநிலையில் தலைக்குப் பின்னால் குடை அமைப்பும் கொண்டு இப்பாவாடைராயர் சிற்பம் காணப்படுகிறது. அர்த்தமண்டபத்தில்

பாவாடைராயர் சிற்பங்கள் மரத்தாலும், சுடுமண்ணாலும் செய்து வைக்கப்பட்டுள்ளன. கோயிலின் வெளிப்புறத்தில் பல சுடுமண் பொம்மைகளும் காணப்படுகின்றன.

அங்காளம்மன் கோயில்

இக்கோயில் பாவாடையராயர் கோயிலுக்கு அருகில் உள்ளது. வடக்கு நோக்கியவண்ணம் காட்சியளிக்கிறது. இக்கோயில் கருவறை. அர்த்தமண்டபம், முன் மண்டபம் ஆகியவற்றைப் பெற்றுத் திகழ்கிறது. கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டட அமைதியில் காணப்படுகிறது.

இக்கருவறையில் சிம்மத்தின் மீது அம்மன் அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் காட்சி தருகிறாள். சிங்கம் கிழக்கு நோக்கி வாலை உயர்த்தி நிற்கிறது. சிங்கத்தின் உருவம் மிக அழகான முறையில் வடிக்கப்பட்டுள்ளது. அம்மன் நான்கு கைகளில் முன்னிரு கைகளில் கத்தி, கபாலமும், பின்னிரு கைகளில் உடுக்கை, சூலமும் தாங்கியுள்ளாள். தலையின் மேல் ஐந்துதலை பாம்பும், நரசிங்க உருவமும் கொண்டு கோரைப் பற்களுடன் ஆக்ரோசமாக அம்மன் காட்சி தருகிறாள்.

முன்மண்டபத்தில் அம்மன் செப்புத்திருமேனி ஒன்றும் உள்ளது. தாமரை பீடத்தின்மீது இடக்காலை மடக்கி, வலக்காலைத் தொங்கவிட்டு அம்மன் நான்கு கைகளுடன் அமர்ந்த நிலையில் காட்சித் தருகிறாள். கைகளில் சூலமும், கபாலமும் தாங்கியுள்ளாள். கழுத்தில் மாங்கல்யம், அட்டிகை ஆகியவை அணிந்தும், காதுகளில் மகரகுண்டலம், செவிப்பூ ஆகியனவும் அலங்கரிக்கின்றன. தலையைக் கரண்டமகுடம், சூரியபிறை. சந்திரபிறை ஆகியவை அணி செய்கின்றன. இதன் உருவ அமைதியை வைத்து இச்சிற்பம் கி.பி.19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். அம்மன் வைக்கப்பட்டுள்ள கற்பலகையில்

எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் "வீரராகவ ஆசாரியின் மகன் அங்கப்ப ஆசாரி என்பவரால் வைகாசி மாதம் இங்குள்ள கல் கிணறு தரும கயிங்கரியமாக வெட்டப்பட்டது" பற்றி கூறுகிறது. அதன் கீழ் கி.பி. 1899 Madras என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

காளி கோயில்

இவ்வூரின் தெற்குப் பகுதியில் சுமார் இரண்டு கி.மீ. தொலைவில் காளி கோயில் ஒன்று உள்ளது. கருங்கல்லால் 5½ அடி உயரம் உடைய செவ்வக அமைப்பில் உள்ள கருவறையில் சப்தமாதர்கள் உருவங்கள் தனித்தனியே பலகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன.

பிராம்மி, மகேஸ்வரி, இந்திராணி, வைஷ்ணவி, வராகி, கௌமாரி, சாமுண்டா ஆகிய இறை உருவங்கள் வடக்குப் பார்த்த நிலையில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. அனைவரும் வலது காலைத் தொங்கவிட்டு, இடதுகாலை மடக்கிய நிலையில் அமர்ந்துள்ளனர். இவர்களுக்கு அருகில் வலதுபுறம் கிழக்குப் பக்கமாக மேற்குப் பார்த்த நிலையில் சிவனும், இடதுபுறம் மேற்குப் புறமாக கிழக்குப் பார்த்தவாறு விநாயகரும் உள்ளனர். சப்தமாதர்களின் நான்கு கரங்களில் முன்னிரு கரங்களில் வலது கரத்தை அபய முத்திரையிலும், இடது கரத்தைத் தொடைமீதும் வைத்திருக்கிறார்கள். பின்னிரு கரங்களில் அவரவர்க்குரிய ஆயுதங்களான அதாவது பிராமி-அக்கமாலை, கெண்டி, மகேஸ்வரி - மழு, மான், இந்திராணி-வஜ்ரம், சக்தி, வைஷ்ணவி-சங்கு, சக்கரம், வராகி-ஏர், உலக்கை, கௌமாரி-சக்தி, வஜ்ரம், சாமுண்டா-சூலம், அனல் ஆகிய ஆயுதங்களைத் தாங்கியுள்ளனர்.

சப்தமாதர்கள் அனைவரும் மார்புக் கச்சை அணிந்துள்ளனர். பிராம்மி மூன்று முகங்களுடனும், சாமுண்டா விரிந்த சடை, கோரைப் பற்களுடனும் காட்சித் தருகின்றனர்.

இச்சிற்பங்களின் உருவ அமைதியைக் கொண்டு கி. பி. 14-15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.

விநாயகர்

இடதுபுறம் கிழக்குப் பார்த்த நிலையில் கருங்கல்லில் அமைக்கப்பட்ட விநாயகர் அமர்ந்த நிலையில் உள்ளார். நான்கு கைகளைக் கொண்டு காணப்படுகிறார். முன்னிரு கைகளில் மோதகமும், பின்னிரு கைகளில் வலக்கையில் அங்குசமும், இடக்கையில் பாசமும் தாங்கியுள்ளார்.

இந்திராணி

அடுத்துள்ள அர்த்தமண்டபத்தில் இருபுறமும் வடக்குப் பார்த்தவாறு இந்திராணி, வைஷ்ணவி சிற்பங்கள் உள்ளன. இந்திராணி நான்கு கரங்களுடன் அமர்ந்த நிலையில் காட்சி தருகிறாள். பின்னிரு கரங்களில் வஜ்ரம், சக்திப்படை ஆயுதங்களை ஏந்தியும், முன்னிரு கரங்களில் வலதுகரம் அபய முத்திரையிலும், இடது கரம் தொடை மீது வைத்தவாறு வடிக்கப்பட்டுள்ளது. வலக்காலைத் தொங்கவிட்டு இடக்காலை மடக்கி அமர்ந்துள்ளாள். மார்புக்கச்சை அணிந்துள்ளாள். காதுகளில் மகர குண்டலங்கள் அணி செய்கின்றன.

வைஷ்ணவி

இடதுபுறம் (மேற்கு திசையில்) வடக்குப் பார்த்தவாறு வலக்காலைத் தொங்கவிட்டு, இடக்காலை மடக்கி அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் வடிக்கப்பட்டுள்ளது. பின்னிரு கரங்களில் வலக்கரம் சக்கரமும், இடக்கரம் சங்கும் முன்னிரு கரங்களில் வலக்கரம் அபய முத்திரையிலும், இடக்கரம் தொடைமீதும் வைத்தவாறு காணப்படுகின்றன. அர்த்தமண்டபம் முன் மண்டபத்தைவிட சிறிது தாழ்வாக அமைந்துள்ளது. அர்த்தமண்டபத்தை அடுத்து மூன்று படிகள் அமைக்கப்பட்டு

முன்மண்டபம் உள்ளது. முன் மண்டபத்தில் நான்கு அரைத் தூண்களும், இரண்டு முழுத்தூண்களும் காணப்படுகின்றன. இரண்டு முழுத்தூண்கள் உருண்டை அமைப்புடன் போதிகை அமைப்பு வெட்டுப்போதிகையாக சோழர் காலத் தூண்களைப் போன்று உள்ளன. இம்மண்டபம் தற்போது செங்கல் கொண்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்துள்ள வாயிலின் மேல் பகுதியில் ராசேந்திர சோழனின் கல்வெட்டு ஒன்று உள்ளது. அவை தமிழ், கிரந்த எழுத்துகள் கலந்த நிலையில் உள்ளது. இவை மண்டப வாயிலில் இருபுறமும் மறைக்கப்பட்டு காரைப் பூசப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு துண்டுக் கல்வெட்டாக இருக்க வேண்டும்.

இவை பழைய கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டன போன்று தோன்றுகிறது. கோயிலுக்கு முன்வாயிலின் மேலே இருபுறமும் சிம்மத்துடன் அம்மன் நான்கு கரங்களுடன் காட்சி தருகிறாள்.

மேலும் கோயிலுக்கு முன்பு நந்தி, பலிபீடம் ஆகியவை உள்ளன. இக்கோயிலுக்குப் பின்னால் அய்யனார் கோயில் ஒன்று உள்ளது. இங்கு பூதகணம், நவகண்ட சிற்பம், நந்தி, வணங்கிய நிலையில் முனிவர் முதலான சிற்பங்கள் காணப்படுகின்றன.

முருகர் கோயில்

இவ்வூரின் தெற்குத் திசையில் மேற்கு நோக்கிய நிலையில் முருகர் கோயில் ஒன்று உள்ளது. கட்டடம் ஏதுமின்றி அம்மிகல் மட்டும் நடப்பட்டு பொதுமக்களால் வணங்கப்படுகிறது. வேல்கள், காவடி முதலானவையும் உள்ளன.

செப்புத்திருமேனிகளும் மரச்சிற்பங்களும்

செப்புத்திருமேனிகள்

வையகம் வியக்கும்வண்ணம் தமிழகத்துச் செப்புத் திருமேனிகள் கலையழகுடனும், தெய்வீகத் தன்மையுடனும் காட்சி தருகின்றன. சித்தலிங்கமடம் வியாக்கரபாதீஸ்வரர் கோயிலில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து அண்மைக்காலம் வரையிலான பல அழகிய செப்புத்திருமேனிகள் உள்ளன. இத்திருமேனிகள் அனைத்தும் அர்த்தமண்டபத்தை அடுத்துள்ள முகமண்டபத்தின் தெற்குப் பகுதியிலுள்ள தனி அறையில் வைக்கப்பட்டுள்ளன. இங்கு 20 செப்புத்திருமேனிகள் உள்ளன.

ஆடவல்லார்

இங்குள்ள செப்புத் திருமேனிகளில் ஆடவல்லார் திருமேனி மிகப் பழமையானது. ஆடவல்லார் திருமேனி முதலாம் இராசராசனின் 27-ஆம் ஆட்சியாண்டில் எழுந்தருளச் செய்து ஆடவல்லார் திருவிழாவுக்கும் திருநந்தா விளக்குக்கும் 25 கழஞ்சு பொன் கொடுத்த செய்தியை இங்குள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது. ஆகவே இத்திருமேனி கி.பி. 1012-ஆம் ஆண்டைச் சேர்ந்தது என அறுதியிட்டு கூறலாம். ஆடவல்லான் பத்மபீடத்தின்மீது வலக்காலை முயலகன் மீது வைத்தும் இடக்காலைத் தூக்கியும், நான்கு கைகளுடன் ஆடும் நிலையில் காட்சியளிக்கிறார். முன்னிரு கைகளில் இடக்கரம் வேழ முத்திரையில் தொங்கவிட்டும், வலக்கை அபய முத்திரையிலும் உள்ளன. பின்னிரு கைகளில் வலக்கையில் உடுக்கையும் இடக்கையில் அக்கினியும் தாங்கியுள்ளார். கால் முட்டி வரை ஆடை அணிந்தும் கைகளில் கேயூரம், தோள்வளையும் அணிந்தும் விரிசடையுடன் பிரபை அமைப்பினுள் காட்சியளிக்கிறார். சிரசின் வலப்பக்கத்தில் கங்கையையும், இடப்பக்கம் சந்திரனையும் தாங்கியுள்ளார். கால்களில் வீரக்கழல், பாதசரம் அணி செய்கின்றன. பிரபை அமைப்பு நெருப்பு ஜுவாலையுடன் அலங்கரிக்கிறது. பிரபையைச் சுற்றிலும் 27 சுடர்கள் உள்ளன.

சிவகாமி

ஆடவல்லார்க்கு இடதுபுறம் சிவகாமி அம்மையார் திரிபங்கத்துடன் பத்மபீடத்தில் நின்றநிலையில் இரண்டு கைகளுடன், இடக்கையைத் தொங்கவிட்டு டோல ஹஸ்தத்திலும் வலக்கை சிம்ம ஹர்ன முத்திரையிலும் உள்ளது. பாதம் வரை ஆடை அணிந்து பிரபையினுள் அம்மை காட்சியளிக்கிறாள். உருவ அமைதியை வைத்து கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.

அஸ்த்திர தேவர்

திரிசூல அமைப்பில் நடுவில் உள்ள உருவம் நான்கு கைகளுடன் நின்றநிலையில் காட்சி தருகிறார். முன்னிரு கைகளில் இடக்கை கடி ஹஸ்தத்திலும் வலக்கையைத் தொங்கவிட்டும் உள்ளார். பின்னிரு இட, வல மேற்கரங்களில் மானும், மழுவும் தாங்கியுள்ளார். இதன் உருவ அமைதியை வைத்து இத்திருமேனி 14-15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

விநாயகர்

பத்மபீடத்தின்மீது நின்றநிலையில் நான்கு கைகளுடன் விநாயகர் சிற்பம் ½ அடி உயரமுடையதாக மிகச் சிறியதாக உள்ளது. நான்கு கரங்களில் பின்னிரு கரங்கள் இடக்கரம் பாசமும், வலக்கரம் அங்குசம் கொண்டும், முன்னிரு கரங்களில் இடக்கரம் மோதகமும், வலக்கரம் தும்பிக்கையும் கொண்டு உள்ளது. இத்திருமேனியின் காலத்தை கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டினதாகக் கருதலாம்.

நால்வர்

அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோரது திருமேனிகள் 1½ அடி உயரமுடையதாகக் காணப் படுகின்றன. இத்திருமேனிகளின் உருவ அமைதியைக் கொண்டு வைத்து கி.பி. 16-ஆம் நூற்றாண்டு காலத்தியவை என்று கூறலாம். நால்வரும் பீடத்தின்மீது நின்றநிலையில் காணப்படுகின்றனர். அப்பர் உழவாரப் படையுடன் வணங்கிய நிலையில் முட்டி வரை ஆடை தரித்து மழுங்கிய தலையுடன் காணப்படுகிறார்.

திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் திரிபங்க நிலையில் நின்றவாறு முட்டி வரை ஆடை அணிந்தும், முப்புரி நூல் இடதுபுறமிருந்து வலப்புறம் செல்கிறது.

சுந்தரர்

பாதம் வரை ஆடை தரித்து இடக்கையில் யோக தண்டம் ஊன்றியும், வலது கையில் தாமரை மொக்கும் உள்ளது. காதுகளில் மகர குண்டலமும், கழுத்தில் முப்புரிநூல் இடது புறமிருந்து வலதுபுறம் திரும்புகிறது. மகுடத்துடன் அரசனைப் போல் காணப்படுகிறார்.

மாணிக்கவாசகர்

நின்றநிலையில் இடக்கையில் சுவடியும், வலக்கை அபய முத்திரையுடனும், முட்டிவரை ஆடை தரித்து மழுங்கிய தலையுடன், முப்புரிநூல் இடதுபுறமிருந்து வலதுபுறம் திரும்புகிறது.

சண்டிகேஸ்வரர்

நின்றநிலையில் மழுவுடன் வணங்கியவாறு கால் முட்டி வரை ஆடை தரித்து, தலையில் ஜடா மகுடத்துடன் காணப்படுகிறார். உருவ அமைதியை வைத்து இதன் காலத்தை கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

சோமாஸ்கந்தர்

சிவனும் உமையும் அமர்ந்த நிலையிலும் நடுவில் கந்தன் நின்ற கோலத்தில் குழந்தை உருவில் காணப்படுகிறார். சிவன் நான்கு கைகளுடன் இடக்காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டும் தாமரை பீடத்தின்மீது அமர்ந்துள்ளார். பின்னிரு கைகளில் வலக்கையில் மழுவும், இடக்கையில் மானும் கத்திரி முத்திரையில் தாங்கியுள்ளார். முன்னிரு கைகள் வலக்கரம் அபயம், இடதுகரம் சிம்ம ஹர்ண முத்திரையிலும் உள்ளது. உமை கரண்ட மகுத்துடன் இடக்கை வரத முத்திரையிலும் வலக்கை சிம்மஹர்ண முத்திரையிலும் உள்ளது. கந்தன் நின்றநிலையில் இருகரங்களிலும் மலர்களைத் தாங்கிய வண்ணம் உள்ளான். இவர்களின் உருவ அமைதியை வைத்து இவற்றின் காலத்தை கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

சந்திரசேகர்

தாமரை பீடத்தின்மீது நான்கு கைகளுடன் நின்றநிலையில் காட்சி தருகிறார். முன்னிரு கரங்களில் இடக்கரம் வரத முத்திரையிலும், வலக்கரம் அபய முத்திரையிலும் பின்னிரு கைகளில் இடக்கரத்தில் மானும், வலக்கரத்தில் மழுவும் தாங்கியுள்ளார். கீர்த்தி முகத்துடன் இடுப்புக் கச்சை அணிந்து காணப்படுகிறார். அருகில் உமை திரிபங்க நிலையில் கரண்ட மகுடத்துடன் வலக்கையில் தாமரை மலரும் இடக்கை டோல ஹஸ்தத்திலும் காட்சியளிக்கிறார். உருவ அமைதியைக் கொண்டு கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டினதாகக் கருதலாம்.

சுப்ரமண்யர்

சுப்ரமண்யர் வள்ளி, தெய்வயானையுடன் மயில் வாகனத்தில் நின்றநிலையில் நான்கு கரங்களுடன் காணப்படுகிறார். முன்னிரு கரங்களில் இடக்கரம் வரதம்,

வலக்கரம் அபயம், பின்னிரு கரங்கள் வஜ்ரம், சக்திப்படை கொண்டும் காணப்படுகிறார். இடதுபுறம் தெய்வயானை அல்லி மலருடன் திரிபங்க நிலையில் நிற்கிறார், மார்புக்கச்சை அணியவில்லை. இடதுகரத்தைத் தொங்கவிட்டும் வலது கரத்தில் அல்லிமலர் கொண்டும் கரண்ட மகுடத்துடன் உள்ளாள்.

வள்ளி மார்புக்கச்சை அணிந்து இடது கரத்தில் தாமரை மலரும், வலக்கரத்தைத் தொங்கவிட்டும் கரண்ட மகுடத்துடன் திரிபங்க நிலையில் நிற்கிறாள். இவர்களின் உருவ அமைதியின் மூலம் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதலாம்.

நீலவிசாலாட்சி அம்மன்

பத்மபீடத்தின்மீது திரிபங்க நிலையில் அம்மன் திருமேனி உள்ளது. இடது கரம் தொங்கவிட்டும் வலது கரம் சிம்மமஹர்ன முத்திரையிலும் கரண்ட மகுடத்துடன் அம்மன் பாதம்வரை ஆடை அணிந்துள்ளாள். நான்கு கைகள் பத்மபீடத்தின்மீது நேராக நின்றவாறு காட்சி தருகிறாள். முன்னிரு கரங்கள் வலக்கரம் அபய முத்திரையிலும், இடக்கரம் வரத முத்திரையிலும் உள்ளது. பின்னிரு கரங்களில் தாமரை மலர்களை ஏந்தி உள்ளாள். மார்புக்கச்சை இல்லை. பாதம் வரை ஆடை தரித்துக் காணப்படுகிறாள். திருமேனி 1½ உயரமுடையதாக உள்ளது. இச்சிற்பம் கி.பி.17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

காளி

திருமேனி பீடத்தின்மீது அமர்ந்த வண்ணம் உள்ளது. பிற்காலத்தைச் சேர்ந்த திருமேனியாகும் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம். அம்மன் சிலை விரி சடையுடன் கோரமாக நான்கு கரங்களுடன் உடுக்கை, திரிசூலம்,

கபாலம், பாசம் ஆகிய ஆயுதங்களுடன் அம்மன் காணப்படுகிறாள். இடக்காலை மடக்கி, வலக்காலைத் தொங்கவிட்டும் அமர்ந்துள்ளாள்.

இங்கு செப்புத் திருமேனிகள் தவிர செப்பினாலான விளக்குகள், மணிகள் உள்பட பல பூசைப் பொருட்கள் காணப்படுகின்றன. இரண்டு குத்துவிளக்குகள், இரண்டு தூண்டா விளக்குகள், தூபக்கால், ஏக கார்த்தி, ரத கார்த்தி, ஐந்து தட்டுகள், குடம், ஐந்து தீபத்தட்டுகள், கும்ப கார்த்தி, புருசாம்பரர் தீபம், மயூர தீபம் இரண்டு, அன்ன குத்துவிளக்கு பித்தளை குத்து விளக்கு இரண்டு சிறியது, அபிசேக அண்டா, விசிறி, கண்ணாடி, பித்தளையில் குடை, ஒரு பிரபை, சிறியது பித்தளை மணி இரண்டு, அபிசேக கலசம் பித்தளையில் ஒன்றும், நான்கு குடை கலசம், ஆராய்ச்சி மணி பெரியது இரண்டும், கொத்து மணி ஐந்து கொண்டது ஒன்றும், பித்தளை சேகண்டி ஒன்றும், பித்தளை சரவிளக்கு ஒன்றும் உள்ளது. செப்புத் திருமேனிகள் அனைத்தும் முத்துப்பல்லக்கின் மீது வைக்கப்பட்டுள்ளது. அப்பல்லக்கு மரத்தினால் ஆனது.

மரச்சிற்பங்கள் (வாகனம்)

சித்திரைத் திருவிழாவின்போது உற்சவமூர்த்தியானவர் வீதி உலா வருவதற்கு வாகனங்கள் உள்ளன. அவை அனைத்தும் மரத்தாலானவையாகும். திருவிழா நாட்களில் ஒவ்வொரு வாகனத்தின் மீது இறைவன் வீதி உலா கொண்டு வரப்படுகிறார்.

வாகனங்கள்

ரிஷப வாகனம் 193 செ.மீ உயரமும் நீளம் 194 செ.மீ கொண்டதாகவும் உள்ளது. **யானை வாகனம்** 113 செ.மீ. உயரம் 152 செ.மீ. நீளமும் கொண்டதாக உள்ளது. **பூத வாகனம்** 142 செ.மீ உயரம் 102 செ.மீ. நீளமும் கொண்டுள்ளது. **குதிரை வாகனம்** உயரம் 200 செ.மீ. கொண்டதாகவும் குதிரை வீரர் உயரம் 70 செ.மீ. கொண்டதாகவும் பீடம் 35 செ.மீ. உயரம் கொண்டதாகவும்

குதிரை வாகனத்தின் நீளம் 230 செ.மீ. கொண்டதாகவும் உள்ளது. மேலும் சூரியன். சந்திரன், நாகம், நந்தி, அன்னம், சின்ன ரிசபம் (சண்டிகேசுவரர் உற்சவர்), மூஞ்சூறு முதலான வாகனங்கள் உள்ளன.

முத்துப்பல்லக்கு

முத்துப்பல்லக்கு மரத்தாலானது ஆகும். பல்லக்கு சுமார் 10 அடி நீளம் உடையது. இப்பல்லக்கில் நாகதேவதை, துவாரபாலகர், நடராசர், திரிபுராந்தகர், கெஜலட்சுமி, காளி போன்ற சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

தேர்

வியாக்கரபாதீஸ்சுவரர் கோயிலுக்கு தேர் ஒன்றும் உள்ளது. சித்திரைத் திருவிழாவின் ஒன்பதாம் நாளன்று தேர்த் திருவிழா நடைபெறுகிறது. இத்தேர் வியாக்கரபாதீஸ்வரர் கோயிலுக்கு எதிரில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. நான்கு சக்கரங் களுடன் மேல் பகுதியில் இரும்பினால் கூரை வேயப்பட்டும், தேர் முழுக்க ஏராளமான சிற்பங்களைக் கொண்டும் காட்சியளிக்கிறது. தேர்த்திருவிழாவின்போது தேர் கழுவப்பட்டு மாவிலை தோரணங்கள் போன்றவற்றால் அழகுசெய்து பஞ்சமூர்த்திகளும், ஈஸ்வரனும் அமர்ந்து பவனி வருவார்கள். பின்னர் இத்தேர் பொதுமக்களால் வடம்பிடித்து இழுக்கப்படுகிறது. தற்போது இத்தேர் மிகவும் சிதிலமடைந்ததால் புதிய தேர் உருவாக்கப்பட்டு வருகிறது.

தேர்ச் சிற்பங்கள்

துர்கை

துர்கை எருமைத் தலைமீது நிற்கும்வண்ணம் காட்சி யளிக்கிறாள். நான்கு கரங்களுடன் துர்க்கை முன்னிரு கரங்கள் அபயம், கடிஹஸ்தம், பின்னிரு கரங்களில் சங்கு சக்கரம் கொண்டும் உள்ளாள்.

கஜசம்ஹாரமூர்த்தி

எட்டு கைகளுடன் கஜசம்ஹாரமூர்த்தி சிற்பம் மிக எழிலுடன் வடிக்கப்பட்டுள்ளது. யானையின் தலைமீது ஒரு காலை வைத்து ஒரு காலை தூக்கி எட்டு கைகளுடன் காட்சியளிக்கிறார். மேல் இரு கைகளை முதுகுக்கு பின்னால் யானையின் தோலினை உரித்து உயர்த்தி பிடித்தவண்ணம் சித்தரிக்கப் பட்டுள்ளது முன்னிரு கைகளில் ஒரு கை வரத முத்திரையிலும், மற்றொரு கை அபய முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளது. அருகில் பெண் சிற்பம் ஒன்றும் உள்ளது.

இதர சிற்பங்கள்

காளி எட்டு கைகளுடன் காணப்படுகிறாள். அரக்கனை மிதித்து சூலத்தால் குத்துவது போன்றுள்ளது. கரங்களில் பாம்பும் காணப்படுகிறது. பெண் ஒருத்தி குழந்தைப் பெற்றெடுக்கும் பிரசவ காட்சியும் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. ஒரு பெண் பிரசவம் பார்ப்பது போலவும், மற்றொரு பெண் படுத்திருப்பது போன்றும் இருபுறமும் பெண்கள் திரை பிடித்திருப்பது போன்றும் வடிக்கப்பட்டுள்ளது. நரசிம்மர் இரணியனைக் கிழிப்பது போன்ற சிற்பம் ஒன்றும் உள்ளது.

வழிபாடுகளும் திருவிழாக்களும்

சித்தலிங்கமடம் வியாக்கரபாதீஸ்வரர் கோயில்

வியாக்கரபாதீஸ்வரர் கோயில் இந்துசமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இக்கோயில் திருக்கோவிலூர் வீரராட்டானேஸ்வரர் கோயில் நிர்வாக அதிகாரியின்கீழ் செயல்படுகிறது. இக்கோயிலில் வழிபாடுகளாகத் தினசரி பூசைகள், மாத சிறப்பு பூசைகள், ஆண்டுத் திருவிழாக்கள் போன்றவை நடைபெறுகின்றன.

தினசரி பூசைகள்

தினசரி பூசைகள் வியாக்கரபாதீஸ்வரருக்கும், நீல விசாலாட்சி அம்மனுக்கும் இருவேளைகளில் நடைபெறுகிறது. அவை 'காலை சந்தி' என்றும் 'அந்தி ரக்ஷை பூசை' என்றும் காலை, மாலை இருவேளைகளில் நடைபெறுகிறது. காமிகா ஆகம முறைப்படி இக்கோயிலில் வழிபாடு நடைபெறுகிறது.

தினமும் வியாக்கரபாதீஸ்வரர் உள்ளிட்ட அனைத்து சுவாமிகளுக்கும் தண்ணீர் ஊற்றி நல்லெண்ணை, மஞ்சள் பொடி அபிசேகம் செய்யப்படுகிறது. பிறகு தீபம் ஏற்றி நெய் கலந்த அன்னம் சுத்தார்ணம் படையல் செய்யப்படுகிறது. பிறகு மந்திர புஷ்பம் ஆசீர்வாதத்துடன் சொல்லி முடிக்கப்படுகிறது. தினந்தோறும் அந்திவேளையில் ஏக கார்த்தி தீபம் (ஒரு தீபம்), இரண்டு தீபம், பில்வகார்த்தி தீபம், ஐந்து தீபம். கற்பூர தீபம் ஏற்றப்பட்டு அர்ச்சனை நடைபெறுகிறது.

சிறப்பு நாட்களில், புளிசாதம், சர்க்கரைப் பொங்கல், உளுந்தவடை, பச்சக்கடலை, சுண்டல் நெய்வேத்தியத்துடன் சுவாமி அலங்காரம் செய்யப்பட்டு படையல் செய்யப்படுகின்றது. விநாயகர், சோமாஸ்கந்தர், நடராசர், அம்மனுக்கும் இருவேளைகளில் பூசை நடைபெறுகின்றன.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மக்கள் அதிகமாக கோயிலுக்கு வருகிறார்கள், வெள்ளிக்கிழமை இராகு காலத்தின்போது துர்கைக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகின்றது.

திருவிழாக்கள்

சித்திரை மாதம் பஞ்சமி திதியில் சித்திரை நட்சத்திரத்தில் சுவாமிக்கு பத்து நாட்கள் திருவிழா ஆண்டுதோறும் நடைபெறுகிறது. சித்திரை திருவிழா நாட்களில் இறைவன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனத்தின் மீது வீதி உலா வருகிறார்.

வைகாசி மாதம் வைகாசி விசாகத்தன்று முருகருக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. அன்று முருகருக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு படையல் செய்யப்படுகிறது.

ஆனி மாதம் உத்திர நட்சத்திரத்து அன்று ஆனித்திருமஞ்சனம் நடராசருக்கு நடைபெறுகிறது. நடராசர் வீதி உலாவாக எடுத்து வரப்படுகிறார்.

ஆடி மாதம் ஆடிப்பூரத்தன்று அம்மன் வீதி உலா காட்சி நடைபெறுகிறது. மூன்றாவது வெள்ளியன்று அம்மனுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்யப்படுகிறது. அன்று சர்க்கரைப் பொங்கல், புளிசாதம் வைத்து படையல் செய்யப்படுகிறது. மறுநாள் காலை அம்மனுக்கு படையல் செய்யப்பட்டு சந்தனக் காப்பு கலைக்கப்படுகிறது. ஆடிக் கிருத்திகை அன்று முருகர் வீதி உலாவாகக் கொண்டு வரப்படுகிறார்.

ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்தி அன்று விநாயகருக்கு சிறப்பு பூசைகள் செய்யப்படுகிறது. கொழுக்கட்டை, சுண்டல், அருகம்புல், சோளம், பொரி, கடலை வைத்து படைக்கப்படுகிறது.

புரட்டாசி மாதம் நவராத்திரியின்போது பத்து நாள் உற்சவம் நடைபெறும். 10-ஆம் நாள் பாரிவேட்டை திருவிழாவின்போது சந்திரசேகர் அம்பு உற்சவம் நடைபெறும்.

ஐப்பசி மாதம் கிருத்திகை அன்று முருகருக்கு சிறப்பு பூசைகள் செய்யப்படுகின்றன. கந்தசஷ்டி அன்று 6-ஆம் நாள் சூரசம்ஹார உற்சவம் நடைபெறுகிறது. ஏழாம் நாளன்று திருக்கல்யாணம் நடைபெறுகிறது.

கார்த்திகை மாதம் ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் நடைபெறும் சோமவார வழிபாட்டின்போது சந்திரசேகர் கோயிலைச் சுற்றி வருவார். பிறகு கார்த்திகைத் திருவிழாவின்போது தீபம் ஏற்றி அலங்கரிக்கப்படுகிறது. அப்போது சந்திரசேகர் வீதி உலா வருகிறார்.

மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று ஆருத்ரா தரிசனம் நடைபெறுகின்றது.

தை மாதம் பொங்கல் திருவிழாவின்போது முதல் நாள் சோமாஸ்கந்தருக்கு அபிசேகம் நடைபெறுகிறது. இரண்டாம் நாள் சந்திரசேகருக்கு அபிசேகம் செய்யப்படுகிறது. ஐந்தாம் நாள் ஆற்றில் சுவாமி நீராட்டல் முடித்து வீதி உலா திருவிழா நடைபெறுகிறது.

மாசி மாதம் மகம் நாளன்று தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெறுகிறது. மகாசிவராத்திரியின்போது நான்கு கால பூசைகள் நடைபெறும். இரவு 9 மணிக்கு மேல் பூசை ஆரம்பிக்கப்படும்.

பங்குனி மாதம் சோமாஸ்கந்தர் திருக்கல்யாண உற்சவம் மற்றும் வீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெறுகின்றது.

அங்காளம்மன் கோயில் திருவிழா

அங்காளம்மன் கோயில் திருவிழா ஏழுநாள் திருவிழாவாக ஆண்டுதோறும் நடைபெறுகிறது. முதல் நாள் காப்பு

கட்டி அம்மன் ஊரினைச் சுற்றி வலம் வரும். இத்திருவிழா சித்திரை (அ) வைகாசி மாதங்களில் நடைபெறுகிறது. முதல் நாள் விழா மொட்டை பணிக்கர் வீடு பார்த்தசாரதி வகையறாவால் நடத்தப்படுகிறது. இரண்டாம் நாள் அன்று அம்மன் அலங்காரம் செய்யப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு தீபாராதனை நடைபெறும். இத்திருவிழா தட்டார் வீட்டில் நடத்தப்படுகிறது.

மூன்றாம் நாள் திருவிழா ஆசாரி வீட்டினரால் நடத்தப் படுகிறது. நான்காம் நாள் திருவிழாவின்போது அம்மன் இருள முகமாக எட்டு கைகள் வைத்து படுத்தபடி செய்து (இவை அரிசிமாவினால் செய்யப்படுகிறது.) ஊர்வலமாக வீதி உலா வரும். ஐந்தாம் நாள் திருவிழா ஊர்த்தலைவர் வகையறாவினால் செய்யப்படுகிறது. மாவில் பொம்மை செய்து வாயிலிருந்து பாவு நூல் கொண்டு வந்து வயிற்றில் இருக்கும் குடல் புடுங்கி மாலை போல் முறத்தின் மீது வைத்து ஊர்வலமாகக் கொண்டு வரப்படுகிறது.

பெண் வேடம், காட்டேரி வேடம் பூண்டு ஆட்டம் நடைபெறும். ஆறாம் நாள் திருவிழா பாவாடை கவுண்டர் வகையறாவால் நடத்தப்படுகிறது. அக்னி சட்டியில் அக்னி கரம் வேப்பங்குச்சி போட்டு அனல் மூட்டி தலைமேல் பூசாரி தூக்குவார். பூவால் கரகம் அலங்கரித்து அம்மன் அமர்ந்த நிலையில் உலா வருவாள்.

ஏழாம் நாள் மயானகொள்ளை நடைபெறுகிறது. தேங்காய், சவுக்கை, பூ, கற்பூரம், சந்தனம் இவை கொண்டு சுடுகாட்டில் உருவம் செய்து படைத்து அகோரமான முறையில் அம்மன் வருவாள். வடக்குப் பக்கமாக அம்மன் (சுவாமி) திரும்பி மயானகொள்ளை விடப்படும். கொழுக்கட்டை, உருண்டைகள் முதலானவை வாரி இறைக்கப்படும். மறுநாள் காப்பு அவிழ்த்து மஞ்சள் நீராடிக்கொண்டு சுவாமி ஊரைச் சுற்றிவரும். 15

நாட்களுக்கு பிறகு வசூல் செய்து அசைவம் செய்யப்பட்டு படையல் செய்து ஊராருக்கு வழங்கப்படுகிறது. பாவாடைராயனுக்கும் அவ்வாறே செய்யப்படுகிறது. தினந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் விளக்கேற்றி கற்பூர தீபாராதனை செய்யப்படுகிறது.

அங்காளம்மன் கோயில் திருவிழா பற்றி இக்கோயில் பூசாரி திரு. மாயவன் இவ்வாறு தெரிவிக்கிறார். இவருக்கு 1¼ காணி நிலம் மானியமாக வழங்கப் பெற்றுள்ளது.

விநாயகர் கோயில் திருவிழா

வியாக்கரபாதீஸ்வரர் கோயில் திருவிழா சித்திரைத் திருவிழாவுக்கு முன்பு நடத்தப்படுகிறது. அதன் பிறகுதான் மற்ற கோயில்கள் அனைத்துக்கும் திருவிழா நடத்துகின்றனர்.

கோயில் ஊழியர்கள்

வியாக்கரபாதீஸ்வரர் கோயிலில் குருக்கள், மெய்காவல், பரிவட்டம் செய்வோர், நந்தவனம் பராமரிப்போர், விளக்கு எரிப்பவர் போன்றோர் பணிபுரிகின்றனர். ராஜா குருக்கள் என்பவர் மற்றும் இவருடைய சகோதரர்கள் மூவராலும் பிரித்து பூசை செய்யப்படுகிறது. வாரத்திற்கு ஒருவர் என்று இருவேளை பூசைகளும் செய்கின்றனர். மெய்க்காவல் செய்பவர் இரவு நேரத்தில் கோயிலைப் பராமரிக்கிறார். விளக்கெரிப்பவர் தினமும் அந்தி நேரத்தில் திரி செய்து விளக்கேற்றுவார். நந்தவனம் பராமரிப்பவர் நந்தவனத்தில் உள்ள பூக்களைப் பறித்து இறைவனுக்கு மாலை தயாரிக்கிறார். இவர்கள் அனைவருக்கும் மானியமாக நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. கோயில் ஊழியர்கள், நந்தவனம் முதலானவற்றை பற்றிய செய்திகள் இக்கோயில் கல்வெட்டுகளில் காணக்கிடைக்கின்றன. இக்கல்வெட்டு செய்திகளை கல்வெட்டுப் பகுதிகளில் விரிவாக காண்போம்.

கல்வெட்டுச் செய்திகள்

கல்லில் எழுத்துக்களைப் பொறிக்கும் வழக்கம் பழங்காலந்தொட்டே தமிழகத்தில் நிலவிவருகிறது. நடுநாட்டில் திருக்கோவிலூர் வட்டத்திலுள்ள சித்தலிங்கமடம் ஊர் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது. முற்காலச் சோழர், பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர், விசயநகரர், சம்புவராயர், காடவராயர் ஆகியோரது அரசியல் வரலாறு, சமுதாய வரலாறு, பண்பாடு, சமயம் ஆகியவற்றைப் பற்றி இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. சித்தலிங்கமடம் வியாக்கரபாதீஸ்வரர் கோயிலில் எழுபதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன.

இவை கி.பி. 1909-இல் 64 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டு அவற்றின் செய்தி குறிப்புகள் அவ்வாண்டு அறிக்கையில் (ARE 1909) 367 முதல் 431 வரை வெளிவந்துள்ளன. இவைகள் அனைத்தும் மத்திய தொல்லியல் துறை வெளியீடான தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 26-இல் வெளியாகியுள்ளன. இவற்றில் பரகேசரி என்று வரும் கல்வெட்டுகள் தொகுதி 19-லும், ராசகேசரி என்று வரும் கல்வெட்டுகள் தொகுதி 13-லும், கோப்பெருஞ்சிங்கதேவன் கல்வெட்டு தொகுதி 12-லும் வெளியாகியுள்ளன.

1935-இல் ஐந்து கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டு அவற்றின் செய்தி குறிப்புகள் அவ்வாண்டு அறிக்கையில் (ARE 1935) 261 முதல் 265 வரை வெளிவந்துள்ளன.

கல்வெட்டுள்ள இடங்கள்

வியாக்கரபாதீஸ்வரர் கோயில் கருவறை மற்றும் அர்த்தமண்டபம் சுவர்ப்பகுதிகளிலும், முதல் திருச்சுற்று மாளிகை

சுவர்களிலும், வராந்தாப் பகுதியிலும், இரண்டாம் திருச்சுற்று சுவர்களிலும், வாகன மண்டபச் சுவர்களிலும், தூண்களிலும், நீலவிசாலாட்சி அம்மன் கோயில் சுவர்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. முன்மண்டபத்தின் முன்னுள்ள திண்ணையின் அடிப்பகுதியிலும் கல்வெட்டுகள் உள்ளன.

இக்கோயிலைப் புதுப்பிக்கும்போது ஆங்காங்கு கற்கள் மாற்றப்பட்டு வைக்கப்பட்டுள்ள துண்டுக் கல்வெட்டுகளும் கிடைக்கின்றன. அம்மன் கோயில் சுவரிலுள்ள கல்வெட்டுகள் சிதைந்து படிக்க முடியாமல் காணப்படுகின்றன.

கருவறைக்கு முன்னுள்ள மண்டபத்தின் தென்புறச்சுவரில் 11 கல்வெட்டுகளும், வடபுறச்சுவரில் எட்டு கல்வெட்டுகளும், கிழக்குப்புறச் சுவரில் ஏழு கல்வெட்டுகளும், திருச்சுற்று தென்புறச் சுவரில் மூன்று கல்வெட்டுகளும், மேற்கு புறச்சுவரில் ஒரு கல்வெட்டும், வடபுறச்சுவரில் மூன்று கல்வெட்டுகளும் இவற்றில் ஒன்று சிதைந்து காணப்படுகிறது. திருச்சுற்றின் கற்கட்டடத்தின் தரைப்பகுதியில் ஒரு கல்வெட்டும், பிரகாரத்தின் தென்புறச் சுவரில் மூன்றும், வடபுறச் சுவரில் மூன்றும், மேற்குபுறச் சுவரில் மூன்றும், கிழக்குபுறச் சுவரில் பத்தொன்பதும், தூண்களில் மூன்றும், வாகன மண்டபத்தின் கிழக்குப்புறச் சுவரில் ஒன்றும், நீலவிசாலாக்ஷி அம்மன் கோயிலின் தென்புறச் சுவரில் ஒன்றும், கல் திண்ணையின்மீது ஒன்றும், கருவறை முன்னுள்ள மண்டபத்தின் தென்மேற்கு புறச்சுவரில் இரண்டும், வடக்குபுறச் சுவரில் இரண்டும், கிழக்குப்புறச் சுவரில் ஒன்றும் ஆக மொத்தம் 73 கல்வெட்டுகள் இங்குள்ளன.

மொழியும் எழுத்தும்

இரண்டு கல்வெட்டுகள் சமஸ்கிருத மொழியிலும், மீதமுள்ள அனைத்துக் கல்வெட்டுகளும் தமிழ்மொழியிலும் உள்ளன. சமஸ்கிருதக் கல்வெட்டுகள் கிரந்த எழுத்துகளிலும், தமிழ்மொழி கல்வெட்டுகள் தமிழ் எழுத்துகளிலும் எழுதப்பட்டுள்ளன.

கல்வெட்டுகளின் அமைப்பு

இக்கல்வெட்டுகள் இப்பகுதியின் அரசியல் வரலாற்று செய்திகளைத் தாங்கி நிற்கின்றன. அரச குடும்பத்தினர், அரசியல் அதிகாரிகள், பிராமணர்கள், தேவரடியார்கள், மிலாடுடையார்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோரைப் பற்றி தெரிந்துகொள்ள முடிகிறது. சில கல்வெட்டுகள் அரசனது ஆணையைத் தாங்கி நிற்கின்றன. கல்வெட்டுகளின் தொடக்கத்தில் ஸ்வஸ்திஸ்ரீ என்னும் மங்கலச் சொல்லோடு தொடங்குகின்றன. பெரும்பாலான கல்வெட்டுகளின் இறுதியில் "இது பன்மாகேசுவரர் ரகைஷ" என்று முடிகின்றன. "இந்நிலம் அழிவு செய்வார் வல்லவரையன் சத்யம்'' என்றும், ''மலையமான்கள் வம்சத்திலுள்ளார் அழிவுசெய்வார் வல்லவரையர் சித்தம்'' என்றும் இரண்டாம் இராசராசன் கல்வெட்டிலும் மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டிலும் கூறப்படுகின்றன. சுந்தரபாண்டியன் கல்வெட்டுகளில் "கல்லிலும் செம்பிலும் வெட்டுவித்துக் கொள்க" என்றும் குறிக்கப்படுகிறது.

மெய்க்கீர்த்திகள்

இவ்வூரிலுள்ள முதலாம் குலோத்துங்க சோழன் முதல் மூன்றாம் குலோத்துங்கன் முடிய சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் மெய்க்கீர்த்தியோடு தொடங்குகின்றன. முதல் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி "புகழ்மாது விளங்க" என்று ஆரம்பிக்கிறது. விக்கிரம சோழனின் கல்வெட்டுகளில் "பூமாது புணரப் புவிமாது வளர" என்றும் இரண்டாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகளில் "பூமேவு வளர் திருப்பொந் மாதுபுணர நாமேவு கலைமகள்'' என்றும் இரண்டாம் இராசராசனின்

கல்வெட்டுகளில் "பூமருவிய திருமாதும்" என்றும் மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகளில் (1183-84) "புயல் வாய்ப்ப வளம் பெருகப் பொய்யாத" என்றும் மெய்க்கீர்த்திகள் தொடங்குகின்றன.

கல்வெட்டில் காணும் அரசுகள்

சித்தலிங்கமடத்தில் சோழர், பாண்டியர், விசயநகரர், காடவராயர், சம்புவராயர் ஆகியோரது கல்வெட்டுகள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவையாகும்.

சோழப் பேரரசு

முதலாம் பராந்தகன் (கி.பி. 907-953)

முதலாம் பராந்தக சோழனின் கல்வெட்டுகளே இங்குள்ள கல்வெட்டுகளில் மிகப்பழமை வாய்ந்தவை. சித்தலிங்கமடம் வியாக்கரபாதீஸ்வரர் கோயிலில் இவனது 7, 22, 25-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. முறையே கி.பி. 914, 929, 932-ஆம் ஆண்டைச் சார்ந்தவை. இம்மன்னனின் கல்வெட்டுகள் 'மதிரை கொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்று தொடங்குகின்றன. இக்கல்வெட்டுகள் நிலதானம், விளக்குத் தானம் மற்றும் பொன் ஆகியவற்றை கொடையாக அளித்தச் செய்திகளைத் தெரிவிக்கின்றன. முதலாம் பராந்தக சோழன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து பாண்டிய நாட்டைக் கைப்பற்றியதால் 'மதிரை கொண்ட பரகேசரி' என்ற பட்டப்பெயர் சூட்டிக்கொண்டான். கி.பி. 949-ல் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் சோழ நாட்டின்மீது படையெடுத்தான். இந்நிகழ்ச்சியை ஆனைமங்கலச் செப்பேடு, திருவாலங்காட்டுச் செப்பேடுகள் வாயிலாக அறிகிறோம். வீரநாராயண சதுர்வேதிமங்கலம்,

வீராணம் ஏரி என்றழைக்கப்படும் வீரநாராயணன் ஏரி ஆகியவை முதலாம் பராந்தகனால் அமைக்கப்பட்டனவாகும். இவன் மதுராந்தகன், வீரசோழன், வீரநாராயணன் முதலான சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தான்.

இராட்டிரகூட மன்னன் கன்னர தேவன்

கன்னரதேவனாகிய மூன்றாம் கிருஷ்ணன் முதலாம் பராந்தகனின் சமகாலத்தில் ஆட்சி செய்த இராட்டிரகூட மன்னன் ஆவான். சித்தலிங்கமடத்தில் கன்னரதேவனின் 5, 18, 24-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் உள்ளன. இதில் 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் "கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவனுக்கு" என்று குறிக்கப்படுகிறான். எனவே இவனது 5-ஆவது (கி.பி. 943-44)ஆட்சியாண்டில் காஞ்சிபுரத்தையும், தஞ்சையையும் கைப்பற்றினான் என்று தெரிகிறது. மேலை கங்க அரசன் பூதுகனுடைய ஸீடிக் செப்பேடு தக்கோலப் போருக்கு முன்னதாகவே சோழ மன்னன் ராஜாதித்தியனை வெற்றிக் கொண்டதாகக் கூறுகிறது. மேலும் கிருஷ்ணனுடைய சாசனங்களிலும் ஆரம்பத்திலிருந்தே சோழர்கள் மீது வெற்றி கொண்ட செய்திகள் காணப்படுகின்றன. எனவே ஸீடிக் செப்பேடுகள் மூலம் கிருஷ்ணன் இளவரசனாக இருந்தபோது பூதுகன் காஞ்சிபுரத்தையும், பின்னர் தஞ்சையையும் கைப்பற்றி இருத்தல் கூடும். இந்த படையெடுப்பின் மூலம் கன்னரதேவன் கச்சியும் தஞ்சையும் கொண்டவன் என்ற விருதை அடைந்தான் என்று தென்னிந்திய கோயில் சாசனத்தில் தி. நா. சுப்ரமணியம் கூறுகிறார். தக்கோலப் போர் கி.பி. 949-இல் சோழ மன்னன் இராசாதித்தியனுக்கும் கன்னர தேவனுக்கும் இடையில் நடைபெற்றது. இதில் இராசாதித்தன் கொல்லப்பட்டு கன்னர தேவன் வெற்றியடைந்தான். எனவே கி.பி. 949-இல் தக்கோலப் போர் நடைபெறுவதற்கு முன்னரே மூன்றாம் கிருஷ்ணன்

(கன்னரதேவன்) இளவரசனாக இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. நீலகண்ட சாஸ்திரியாரும் தக்கோலப் போர் கி.பி.949-இல் தான் நடைபெற்றது என்ற கருத்தைத்தான் கூறுகிறார். எனவே சித்தலிங்கமடத்திலுள்ள கன்னரதேவனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு மீண்டும் வெட்டப்பட்டபோது தவறுதலாக குறிப்பிட்டிருக்க வேண்டும்.

இம்மன்னன் காலத்தில் சித்தலிங்கமடம் வியாக்கரபாதீஸ்வரர் கோயிலுக்கு நிலம், மற்றும் பொன் கொடையாக வழங்கப்பட்டது என்பது இங்குள்ள கல்வெட்டின் வாயிலாக அறியப்படுகிறது.

முதலாம் இராசராசன் (கி.பி.985-1014)

சித்தலிங்கமடத்தில் இம்மன்னனது 4, 28-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. "ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மலாடான ஜனநாத வளநாட்டுக் குறுக்கை கூற்றத்து பிரம்மதேயம் சிற்றிங்கூர்" என்று இம்மன்னனின் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தின் கீழ் மலாடு என்கிற ஜனநாத வளநாட்டுப் பிரிவில் இவ்வூர் அமைந்திருந்தது. ஜனநாதன் என்பது முதலாம் இராசராசனின் விருதுப் பெயர்களில் ஒன்றாகும். எனவே, இவனது விருதுப் பெயரால் ஜனநாத வளநாடு என்று அழைக்கப்பட்டுள்ளது.

இம்மன்னனது பெயரால் இவ்வூர் ஏரி 'ஸ்ரீராஜராஜ பேரேரி' என்றும், இயற்பெயரான அருண்மொழிவர்மன் என்கிற பெயரில் இங்குள்ள வாய்க்காலுக்கு 'ஸ்ரீஅருண்மொழித்தேவன் வாய்க்கால்' என்றும் அழைக்கப்பட்டுள்ளன.

இம்மன்னன் தஞ்சையில் மிகப்பெரிய கோயிலைக் கட்டி 'இராசராசேச்சுவரம்' என்று பெயரிட்டு தென்னிந்திய கட்டடக் கலைக்கு சிறந்த உதாரணமாக திகழ்கிறது. இவனது காலத்தில்

கட்டடக்கலை உயரிய நிலையில் இருந்தது. மேலும், இவன் நடுநாட்டுப் பகுதியில் உள்ள உலகாபுரம், எண்ணாயிரம், மதகடிப்பட்டு, அகரம், பிரம்மதேசம், ஏமப்பேரூர், திருவக்கரை ஆகிய ஊர்களில் கோயில்கள் எடுத்துள்ளான். தனது வெற்றிகளைக் குறிப்பிடும் வகையில் மெய்க்கீர்த்தி என்ற முறையினை அழகிய தமிழ் நடையில் அமைக்கும் பாணியினை அறிமுகப்படுத்தியுள்ளான். இவ்வூர்க் கோயில் கல்வெட்டுகளில் திருப்புலிபகவர்க்கு விளக்கெரிக்க பொன்னும், ஆடவல்லார் திருவிழாவுக்கு 25 கழஞ்சு பொன்னும், நிலமும் கொடுக்கப்பட்டுள்ளச் செய்திகள் காணப்படுகின்றன. ஆனால் முதலாம் இராசராசனின் ஆட்சிக்குப் பிறகு கி.பி. 1070-இல் முதல் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகள்தான் இவ்வூரில் காணப்படுகின்றன.

முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070-1120)

கோவிராசகேசரி பன்மரான முதலாம் குலோத்துங்க சோழன் கி.பி. 1070 முதல் 1120 வரை ஆட்சி செய்தான். சித்தலிங்கமடத்தில் இவனது வடமொழிக் கல்வெட்டுகள் இரண்டும், தமிழ் கல்வெட்டுகள் எட்டும் காணப்படுகின்றன. அவை முறையே 10, 16, 31, 49-ஆவது ஆட்சியாண்டுக்குரியவை. அதாவது கி.பி. 1080, 1086, 1101, 1119 ஆகிய காலகட்டத்தைச் சார்ந்தவை. வடமொழிக் (சமஸ்கிருதம்) கல்வெட்டுகளில் இக்கோயில் விமானம், பிரகாரம், மண்டபம் இவற்றையுடைய கற்றளியொன்றை இவனுடைய அமைச்சன் நரலோகவீரன் என்பவனால் எடுப்பிக்கப்பட்டதை விரிவாகக் கூறுகின்றன.

இவன் தந்தை வழியில் கீழைச்சாளுக்கிய மன்னனான இராசநரேந்திரனின் புதல்வனும் தாய்வழியில் கங்கைகொண்ட சோழனின் (முதலாம் இராசேந்திரன்) மகள் அம்மங்கைதேவியின் புதல்வனும் ஆவான். இவன் இளமையில் 'இராசேந்திரன்'

என்னும் பட்டப்பெயர் பெற்றிருந்ததை இங்குள்ள கிரந்த கல்வெட்டுகளின் வாயிலாக அறிகிறோம். இம்மன்னனின் ஆட்சிக்காலம் தொடங்கி மூன்றாம் இராசேந்திரன் காலம் வரை இப்பகுதி பிற்காலச் சோழர் ஆட்சியின்கீழ் இருந்தது.

சித்தலிங்கமடத்தைச் சுற்றியுள்ள நெய்வனை, அரகண்டநல்லூர், கனியமூர், எலவானாசூர், சிந்தாமணியகரம் ஆகிய ஊர்களில் கோயில்களை எடுத்தும் கொடையும் கொடுத்துள்ளச் செய்திகளை அவ்வவ் ஊர்களில் உள்ள இம்மன்னனின் கல்வெட்டுகளின் வாயிலாக அறியமுடிகிறது. இம்மன்னன் ஆட்சிக்காலத்தில் சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு விளக்கெரிக்கவும், அமுது செய்தருளுவதற்கும், நுந்தா விளக்குகள் எரிக்க நிலங்கள் மற்றும் பசுக்கள் கொடையாக அளிக்கப்பட்டுள்ளன. முதலாம் குலோத்துங்க சோழனுக்கு பிறகு அரியணை ஏறிய அவனது மகன் விக்கிரமசோழனின் ஆட்சியும் சிறப்பாக நடைபெற்றன என்பதற்கு எடுத்துக்காட்டாக அவனது கல்வெட்டுகள் ஏராளமாக காணக்கிடைக்கின்றன.

விக்கிரமசோழன் (கி.பி. 1118-1136)

முதலாம் குலோத்துங்கனுக்கு பிறகு விக்கிரமசோழன் 'பரகேசரி' என்ற பட்டம் புனைந்து ஆட்சிப் பொறுப்பேற்ற மன்னனாவான். சித்தலிங்க மடத்தில் இவனது 2, 3, 4, 6, 7, 13, 14, 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவனது 2, 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் "பூமாது புணரப் புவிமாது வளர நாமாது விளங்க" என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகின்றன. ''திரிபுவன முழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேஸரி பந்மரான திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரமசோழ தேவற்கு யாண்டு" என்பதிலிருந்து அவனுடைய பட்டத்தரசி திரிபுவன முழுதுடையாள் என்று அறிகிறோம்.

இங்குள்ள இவனது கல்வெட்டுகள் அனைத்தும் திருப்புலிபகவர்க்கு நிலம் மற்றும் பொன் கொடையாகக் கொடுத்ததைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. கங்கைகொண்டசோழ வளநாட்டில் திருமுனைப்பாடியும், பேரிங்கூர் நாடு, திருமுனைப்பாடி கிளியூர் தாமர் நாடு, திருமுனைப்பாடி ஏமூர் நாடு போன்ற நாடுகளிலிருந்து திருப்புலிபகவர்க்கு கொடை அளித்த செய்திகளைத் தருகின்றன.

இம்மன்னனின் அரசவைப் புலவரான கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் 'விக்கரமசோழன் உலா' என்னும் நூலொன்றை இயற்றியுள்ளார். இவனது சிறப்புப் பெயர்களான தியாகசமுத்திரம், அகளங்கன் என்பன இந்நூலின் வாயிலாகவும், கல்வெட்டுகளின் வாயிலாகவும் அறிகிறோம். இவ்வேந்தனுக்கு 'பூமாது புணரப் புவிமாது வளர' மெய்க்கீர்த்தி மற்றும் 'பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ' என்று தொடங்கும் பெரியதான மெய்க்கீர்த்தியும் இவனுடையது என்று கல்வெட்டுகளின் வாயிலாக அறிகிறோம்.

இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1135-1150)

விக்கிரமசோழனுக்கு பிறகு அரியணை ஏறிய இரண்டாம் குலோத்துங்கசோழன் 'ராசகேசரி' என்னும் பட்டம் புனைந்து அரசாண்டான். சித்தலிங்கமடத்தில் இவனது 3, 10, 13-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. "பூமேவுவளர திருப்பொந்மாது புணர நாமேவு கலைமகள் நலம் பெரிது" என்ற மெய்க்கீர்த்தியுடன் இவனது மெய்க்கீர்த்தி தொடங்குகிறது. இவனது 3-ஆவது, 13-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் கோனேரின்மை கொண்டான் என்று குறிப்பிடுகிறது. அரசனது நேரடி ஆணை என்பதை 'கோனேரின்மை கொண்டான்' என்று கல்வெட்டுகளில் குறிப்பிடுவது வழக்கம்.

ஒட்டக்கூத்தரின் மூவருலா மூலம் துரதவித்தியா விநோதன், நித்தியகீதப்பிரமோகன், ஞானகெம்பீரன் எனவும் குறிப்பிடப்படுவதிலிருந்து சாஸ்திரங்களிலும், இசை நூல்களிலும் இவன் தேர்ச்சி பெற்றவன் என்றும் தெரிகிறது. மேலும் இவனுக்கு அபயன், அனபாயன், எதிரிலாப்பெருமாள் முதலான சிறப்புப் பெயர்கள் இருந்தன என்பது கல்வெட்டுகளின் வாயிலாக அறியப்படுகிறது. திருப்புலிபகவர்க்கு 10 வேலி நிலம், மற்றும் விளக்கெரிக்கக் காசுகளும் கொடையாக அளிக்கப்பட்ட செய்திகளை இவ்வூர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இரண்டாம் இராசராசன் (கி.பி. 1146-1163)

பரகேசரி என்ற பட்டமுடைய இரண்டாம் இராசராசனின் தந்தையான இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1150-இல்) முடிசூட்டப்பெற்றான். இவனுடைய மெய்க்கீர்த்திகள் "பூமருவிய திருமாதும்" எனவும் "பூமருவிய பொழிலேழும்" எனவும் தொடங்குகின்றன. இவை மூன்றாம் ஆட்சியாண்டு முதல் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இங்குள்ள கல்வெட்டில் 'பூமருவிய திருமாதும்' என்று தொடங்குகிறது. இம்மெய்க்கீர்த்தியின் மூலமாக இவன் தனது ஆட்சியில் தந்தையிலோர்க்கு தந்தையாகியும், தாயிலோர்க்குத் தாயாகியும், மைந்தரிலோர்க்கு மைந்தராகியும், மன்னுயிர்கட்குயிராகியும் இருந்து அரசாண்டு வந்தான் என்று தெரிகிறது.

சித்தலிங்கமடத்தில் இம்மன்னனது 7, 8, 19-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவனது பட்டத்தரசி உலகுடை முக்கோக்கிழானடிகள் குறிப்பிடப்படுகிறாள். இக்கல்வெட்டுகள் சேத்திரபாலப் பிள்ளையாருக்கு,(பைரவர்) சன்னதி அமைக்கப்பட்டது பற்றியும், சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு திருவமுது, பூந்தோட்டம் அமைக்க நிலம்

மற்றும் காசுகள் கொடுக்கப்பட்டது பற்றியும் கூறுகிறது. பூந்தோட்டம் இவனது ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டது பற்றி விரிவாகக் கூறுகின்றது. இவனுக்குக்கீழ் மலையமான் அத்திமல்லன் சொக்கப்பெருமாள் என்பவன் குறுநில மன்னனாக இருந்துள்ளான் என்ற செய்தி இங்குள்ள கல்வெட்டின் வாயிலாக அறியப்படுகிறது. இரண்டாம் இராசராசன் தலைநகரை பழையாறைக்கு மாற்றி 'இராசராசபுரம்' என்று பெயரிட்டு ஆட்சிசெய்தவனாவான். தாராசுரத்திலுள்ள ஐராவதேஸ்வரர் கோயில் இம்மன்னனால் கட்டப்பட்டதாகும்.

இரண்டாம் இராசாதிராசன் (கி.பி. 1163-1178)

இரண்டாம் இராசாதிராசன் 'இராசகேசரி' என்று பட்டம் பூண்டு கி.பி. 1163-ஆம் ஆண்டு இளவரசுப் பட்டம் சூட்டப்பெற்று கி.பி. 1166-ஆம் ஆண்டு சோழ அரசின் சக்கரவர்த்தியானான். இவனது திருப்பெயர் 'எதிரிலிப் பெருமாள்' என்பதாகும். முடிசூட்டப் பெறும்போதுதான் இராசாதிராசன் என்ற அபிடேகப் பெயர் பெற்றான். சித்தலிங்கமடத்தில் இம்மன்னனது 11, 14-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு மருதூர் கால்வாயிலிருந்து தண்ணீர் வெட்டி விடப்பட்டது பற்றியும், கொடையாக வெண்கல தளிகை ஒன்று கொடுக்கப்பட்டது பற்றியும் இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218)

பரகேசரியான மூன்றாம் குலோத்துங்கன் இரண்டாம் இராசாதிராசனுக்கு பிறகு அரசாட்சி செய்தான். சித்தலிங்கமடத்தில் இவனது 6, 9, 35-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகள் மூன்று உள்ளன. அதில் திரிபுவன சக்கரவர்த்திகள் 'ஸ்ரீவீரராசேந்திரசோழ தேவர்' என்று குறிக்கப்படுகிறது. வீரராசேந்திரன் என்பது இவனுடைய சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும்."புயல் வாய்ப்ப வளம் பெருக" என்ற மெய்க்

கீர்த்தியுடன் ஆரம்பிக்கிறது. மனுநீதி தழைத்து ஓங்க ஆட்சி செய்தான். இவனது 35-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'திரிபுவன வீரதேவன்' என்று குறிக்கப்படுகிறான். இம்மன்னன் ஆட்சியின்போது சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலுக்கு நிலம் மற்றும் குத்துவிளக்கு, மணி முதலானவை கொடையாகக் கொடுக்கப்பட்டன.

மேலும், இம்மன்னனின் ஆட்சியின்போது நடுநாட்டில் திருவக்கரை, திருவெண்ணைநல்லூர், பழங்கூர் ஆகிய இடங்களில் கோயில்களை எடுப்பித்தும் மண்டபங்களைக் கட்டியும் நிவந்தங்கள் பலவும் அளித்துள்ளான்.

மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216-1256)

மூன்றாம் குலோத்துங்க சோழனுக்குப் பிறகு சோழ அரசனாக கி.பி. 1218-இல் மூன்றாம் இராசராசன் அரியணை ஏறினான். சித்தலிங்கமடத்தில் இவனது 15-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று மட்டும் உள்ளது. இவனது ஆட்சியின்போது மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி. 1219-இல் சோழ நாட்டின்மீது படையெடுத்து தஞ்சாவூர், உறையூர் முதலான தலைநகரங்கள் கொளுத்தப்பட்டன. அதன் பிறகு பிற்காலச் சோழர் வரலாறு நிறைவு பெறத் தொடங்கியது. திருவயிந்திபுரம் கல்வெட்டும், சத்யகர்ணாமிர்தம் என்ற நூலும் மூன்றாம் இராசராசனுக்கும் காடவமன்னன் கோப்பெருஞ்சிங்கனுக்கும் தெள்ளாற்றில் நடைபெற்ற போரில் கோப்பெருஞ்சிங்கன் வெற்றி பெற்று இராசராசனும் அவனது மனைவியும் சேந்தமங்கலத்தில் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் சிறை வைக்கப் பெற்றதைக் குறிக்கின்றன.

பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியன் காலத்தில் சேந்தமங்கலம் கோட்டை முற்றுகைக்குள்ளாகி பின்னர்

கோப்பெருங்சிங்கனிடமே திருப்பி அளிக்கப்பெற்றது. மூன்றாம் இராசராசனோடு இப்பகுதியில் பாண்டியர் வெற்றியால் சோழர் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இராசகேசரி, பரகேசரி

சித்தலிங்கமடத்தில் இராசகேசரி, பரகேசரி என்று மட்டும் தொடங்கும் கல்வெட்டுகள் ஏழு உள்ளன. ராசகேசரி என்று தொடங்கும் கல்வெட்டு S.I.I.Vol.XllI-இல் வெளியாகியுள்ளன. ராசகேசரி என்று தொடங்கும் இக்கல்வெட்டு கருவறைக்கு முன்னுள்ள மண்டபத்தின் வடக்குப்புறச் சுவரில் உள்ளது. மலாடுடையான் நாட்டான் சித்தவடவன் என்ற குறுநில மன்னன் திருப்புலிபகவர் கோயிலுக்கு திருநுந்தா விளக்கு ஒன்றுக்கு ஆடுகள் தானமாகக் கொடுத்துள்ளான். இக்குறுநில மன்னன் முதலாம் இராசராசன் காலத்தில் சிற்றரசனாக ஆட்சிசெய்தவன் ஆவான். எனவே இக்கல்வெட்டு முதலாம் இராசராசன் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்ததாகக் கருதலாம். மேலும் திருவிசலூர் கல்வெட்டில் வடவன் சித்தத்தியார் என்பவள் அங்குள்ள சிவயோக சுவாமி கோயிலுக்கு நிலம் பிரம்மதேயமாக கொடுத்த செய்தி தெரிய வருகிறது. அவள் மிலாடுடையார் ஒருவனின் மகள் என்று கூறப்பட்டுள்ளது. இவள் உத்தமசோழனின் மனைவி ஆவாள். இந்த மிலாடுடையான் பராந்தகன் காலத்தில் இருந்த சிற்றரசனான முதலாம் நரசிம்மவர்மனாகவே இருத்தல் வேண்டும். இந்த நரசிம்மவர்மன் முதலாம் பராந்தகன், முதலாம் இராசராசன் காலத்தில் சிற்றரசனாக இருந்தவனாவான்.

பரகேசரி என்று தொடங்கும் கல்வெட்டுகள் இங்கு ஆறு உள்ளன. பரகேசரி என்று தொடங்கும் இரண்டு கல்வெட்டுகள் முதலாம் இராசேந்திரசோழனுடையதாகக் கருதலாம். இவனது 4, 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளில் மிலாடுடையான் இராசமகேந்திரன் இராசேந்திரசோழன், மிலாடுடையான் வடவன்

ராசேந்திரன் என்ற சிற்றரசர்கள் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு நிலம், பொன், காசு ஆகியவை கொடையாகக் கொடுத்துள்ளனர். இந்த மிலாடுடையார்கள் இராசேந்திரன் பெயரை அடைமொழிகளாகக் கொண்டிருப்ப தாலும், வடவன் என்றும் வருவதாலும் இக்கல்வெட்டுகள் முதலாம் இராசேந்திரன் காலத்தியவை என்று கூறலாம். ஏனைய பரகேசரி கல்வெட்டுகள் சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு கொடையளித்தச் செய்திகளைக் கூறுகின்றன.

பிற்காலச் சோழர் ஆட்சிக்குப் பிறகு கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் காடவராயர் ஆட்சி சிறிது காலம் நடைபெற்றது. காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டு ஒன்றும் இங்குள்ளது.

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன்

கோப்பெருஞ்சிங்கன் பெருவலிமைப் படைத்தவனாகவும் சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாகவும் விளங்கினான். இவன் விழுப்புரம் மாவட்டம் சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான். இம்மன்னனின் கல்வெட்டொன்று சித்தலிங்கமடத்தில் உள்ளது. அவை 19-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டு கி.பி.1262, மே மாதம் 8ந்தேதி, திங்கள்கிழமை பெற்ற முலத்து நாளுக்கு உரியதாகும். அவனி ஆளப்பிறந்த கோப்பெருஞ்சிங்கன் திருப்புலிபகவநாயனார்க்கு திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கு 32 பசுக்களைத் தானமாக இக்கோயில் இது 30 வட்டத்து சிவபிராமிணர்களிடம் கொடுத்துள்ளச் செய்தி கிடைக்கிறது.

பாண்டியர்

பிற்கால சோழ அரசர்களின் ஆட்சிக்குப் பிறகு தமிழகத்தில் மீண்டும் கி.பி.13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியர் ஆட்சி எழுகிறது. சித்தலிங்கமடத்தில் பாண்டிய மன்னர்களின் ஆறு கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன்

சித்தலிங்கமடத்தில் இவனது 13-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் காணப்படுகிறது. அக்கல்வெட்டில் பங்குனி மாதம் 6-ஆவது நாள் சனிக்கிழமை ரோகிணி நட்சத்திரம் பெற்ற நாளில் திருப்புலிபகவர்க்கு அமுது செய்தருள காசு கொடுத்த செய்தி குறிக்கப்பெறுகிறது. கி.பி. 1263-ஆம் ஆண்டு மார்ச் மாதம் என்று குறிக்கப்படுவதிலிருந்து இம்மன்னன் கி.பி. 1250-ஆம் ஆண்டு அரியணை ஏறினான் என்பதை அறியலாம். இந்நாளில் (1250-1284) அரியணை ஏறிய இம்மன்னனுக்கு 'பூமலர்வளர் திகழ்' என்று தொடங்கும் தமிழ் மெய்க்கீர்த்தியும், 'சமஸ்தஜகத் ஆதார' என்று தொடங்கும் சமஸ்கிருத மெய்க்கீர்த்தியும் இவனுடையதாகக் கொள்ளப்படுகிறது. சித்தலிங்கமடம் கல்வெட்டில் "கோற்சடையபன்மரான திருபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவர்'' என்று ஆரம்பிக்கிறது. அக்கல்வெட்டில் முன்னாள் கோப்பெருஞ்சிங்கன் நாளில் அரிந்தவன் பல்லவரையர் பக்கல் உபையமாகப் பெற்ற காசு என்ற கல்வெட்டுச் சொற்றொடர் மூலம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் அரிந்தவன் பல்லவரையர் அதிகாரியாக இருந்துள்ளதை அறிகிறோம். இவனிடமிருந்து 2000 காசுகள் பெற்று அதிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு இவன் செய்தளித்த 'திருஞானசம்பந்தர்' என்கிற ஆளுடைய பிள்ளையாருக்கு அமுது செய்யவும், இக்கோயில் இறைவனுக்கு திருமஞ்சன நீராட்டு விழாவும் செய்யப் பயன்படுத்தினர்.

ஆறாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன்

சித்தலிங்கமடத்தில் இவனது ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு காணப்படுகிறது. இக்கல்வெட்டு திருச்சுற்றின் கிழக்குபுறச் சுவரில் உள்ளது. என். சேதுராமன் அவர்கள் வானியல் பூர்வமாக ஆராய்ந்து இவனது காலம் 1.9.1342: 6,

கன்னி, சு-1, ஹஸ்தம், ஞாயிறு என்று கூறியுள்ளார். மேலும் கல்வெட்டில் மாறவர்மன் விக்கிரமாதித்தன் என்று குறிப்பிடப்பெற்றுள்ளதை இவரது ஆராய்ச்சி மூலம் ஆறாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் என்று கூறியுள்ளார். அவர் திருவேந்திபுரம் கல்வெட்டின் மூலமாகவும் S.I.I. Vol. VII. 761, S.I.I. Vol. XVII. 170 & 171 இந்த கல்வெட்டுத் தரவுகளின் மூலம் இம்மன்னன் ஆறாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் என்றே நிறுவுகிறார். கி.பி. 1337-ஆம் ஆண்டில் சகலலோகச் சக்கரவர்த்திகள் இராசநாராயண சம்புவரையர் என்னும் இரு சகோதரர்கள் இருந்தனர் என்பதையும், இவர்களை விக்கிரம பாண்டியன் தோற்கடித்தான் என்பதையும், விக்கிரவாண்டிக் கல்வெட்டு 'ஸ்வஸ்திஸ்ரீ சகலலோக சக்கரவர்த்தி இராசநாராயண விக்கிரம பாண்டியன்' என்று வருவதை வைத்து உறுதிசெய்கிறார். இம்மன்னன் ஆட்சிக்காலத்தில் சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு திருப்பள்ளி எழுச்சியின்போது சந்தி அமுது செய்தருளுவதற்கும், வெஞ்சனங்களுக்கும் நிலக்கொடை கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மன்னனால் கட்டப்பட்ட சிற்றம்பலமுடையார்க்கு அமுது படைக்கவும், திருவிளக்கு ஏற்றவும் 1000 குழி நிலம் இன்னம்பர் உடையான் என்பவனால் கொடுக்கப்பட்டது. இம்மன்னனின் கல்வெட்டுகள் தாராசுரம், சிதம்பரம், தெள்ளார், சிறுதாவூர், தீர்த்தநகரி, திருவடந்தை, சித்தலிங்கமடம் முதலான இடங்களில் கிடைக்கின்றன.

இவனது ஆட்சியின்போது சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு ஆதிதாசசண்டேசுவரர் பெயரில் நிலம் கொடுக்கப்பட்டது. இந்நிலத்தின் எல்லைகளை கூறுமிடத்தில் கோப்பெருஞ்சிங்கன் கால்வாய் பற்றியக் குறிப்பு

காணப்படுகிறது. எனவே கோப்பெருஞ்சிங்கன் பெயரில் கால்வாய் ஒன்று இருந்துள்ளதை அறியமுடிகிறது. திருக்கோவிலூர் பகுதியிலும் விக்கிரமபாண்டியனது கல்வெட்டுகள் காணப்படுவதால் இப்பகுதியிலும் இவனது ஆட்சி இருந்திருக்க வேண்டும். இம்மன்னனின் ஆட்சிக்காலத்தில் சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலில் ஆடவல்லார்க்கு அமுது செய்தருளுவதற்கு 500 குழி நிலம் திருக்கோவிலூர் சாலிக நகரத்தாரால் கொடுக்கப்பட்டுள்ளது.

மாறவர்மன் திருபுவன வீரபாண்டியன்

சித்தலிங்கமடத்தில் மாறவர்மன் வீரபாண்டியன் கல்வெட்டுகள் இரண்டு காணப்படுகின்றன. அவை முறையே 14, 15-ஆவது (கி.பி.1347, 1348) ஆட்சியாண்டுகளைச் சேர்ந்ததாகும். 14-ஆவது ஆட்சியாண்டில் குறிக்கப்பெறும் மாறவர்மன் வீரபாண்டியன் காலம் சரிவர கூறமுடியவில்லை. சேதுராமன் அவர்கள் இவனது காலம் கி.பி. 1334 (அ) 1341 என்று கூறுகிறார். இம்மன்னனது ஆட்சிக்காலத்தில் சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயில் வடபிரகாரத்தில் அழகிய திருச்சிற்றம்பலமுடையார்க்கு கோயில் கட்டப்பட்டுள்ளது.

சம்புவராயர்

மூன்றாம் இராசநாராயண சம்புவராயர்(கி.பி.1356-1379)

இராசநாராயண சம்புவராயர் கல்வெட்டு ஒன்று இங்குள்ளது. இம்மன்னனின் 20-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்ததாகும். இராசநாராயண சம்புவராயரின் 20-ஆவது ஆட்சியாண்டு கி.பி. 3.1.1375 தை நாளிற்கு சமமானது. கல்வெட்டில் ''ஸ்வஸ்திஸ்ரீ ஸகலலோக சக்கரவர்த்தி இராசநாராயணன் சம்புவராயற்கு ஸ்ரீயாண்டு 20-ஆவது மகர நாயற்று பூர்வபக்ஷத்து திரிதியையும் புதனும் பெற்ற திருவோணத்து நாள்" என்று குறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு கி.பி. 1375-ஆம் ஆண்டுக்குரியது என்றால் கி.பி. 1356-1379 வரை ஆட்சி செய்த மூன்றாம் இராசநாராயணனின் கல்வெட்டு எனலாம். மூன்றாம் இராசநாராயண சம்புவராயர் விசயநகர மன்னர் கம்பணனோடு கூட்டாட்சி ஏற்படுத்தி கி.பி.1363-க்குப் பிறகு அரசாட்சி செய்தவன். மூன்றாம் இராசநாராயண சம்புவராயரின் கல்வெட்டில் குறிப்பிடப்படும் அதிகாரிகள் கம்பணன் கல்வெட்டிலும் குறிக்கப்படுகின்றனர். தவப்பெருமாள் விசுவநாததேவர் என்பவருக்கு திருக்கோவிலூர்ப் பற்று நாட்டார்கள் மடப்புற இறையிலி வழங்கியதை கி.பி. 1359-இல் எழுதப்பட்டுள்ள கம்பணனின் கல்வெட்டுக் கூறுகிறது. இந்த விசுவநாத தேவரே மூன்றாம் இராசநாராயண சம்புவராயரிடம் விண்ணப்பம் செய்து சித்தலிங்கமடம் கோயிலுக்கு திருமடைவிளாகம் மற்றும் நிலங்களை இறையிலியாக நிலம் செய்து ஆணையும் பெற்றுள்ளார். இதனைப் பாராட்டி இக்கோயில் தானத்தார்கள் இவருக்கு இக்கோயிலில் உள்ள அம்மன் கோயிலின் திருக்கையோட்டி நிருவாகப் பொறுப்பும், வீடும், நிலமும் கொடுத்து சிறப்பித்ததை இவ்வூரில் உள்ள இராசநாராயணின் கல்வெட்டுக் கூறுகிறது.

விசயநகர மன்னர்கள்

கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிற்காலப் பாண்டிய அரசு நலிவுற்றபோது விசயநகர மன்னர்கள் ஆளுகைக்கு தமிழகம் இலக்காகியது. இவர்களுடைய கல்வெட்டுகள் சித்தலிங்கமடத்தில் காணப்படுகின்றன.

வீரதேவராய உடையார்

இம்மன்னரது சக வருடம் 1329 சர்வஜித் மேளா (சித்திரை சுக் 3, புதன்கிழமை ரோகிணி கி.பி. 1407 ஏப்ரல் 11 என்று பொறிக்கப்பட்ட கல்வெட்டு உள்ளது. இம்மன்னர் சங்கம

பரம்பரையைச் சேர்ந்தவர். இவர் இரண்டாம் ஹரிஹரருக்குப் பிறகு அரியணை ஏறிய முதலாம் தேவராயராகத்தான் இருக்கவேண்டும். இம்மன்னனின் ஆட்சியின்போது விசயநகரத்தினை சுற்றி மதில் அமைத்து கோட்டைகளும் கட்டப்பட்டது. துங்கபத்திரை ஆற்றில் பெரிய அணைக்கட்டையும் கட்டுவித்தார். இம்மன்னர் 1422-இல் காலமானார். இம்மன்னரது ஆட்சியின்போது திருப்பணி பற்றாக கோயில் சீர்திருத்தத்திற்கு விநோதநல்லூர் சபையார் சித்தலிங்கமடம் கோயில் தானத்தார்க்கு நஞ்சை நிலம் கொடுத்தனர். இவர்கள் இக்கோயில் திருநாமத்துகாணியில் நீர்பாய்ச்சுவதற்கு (இவர்கள் ஊரான விநோதநல்லூர்க்கு) ஒன்றரை மா நிலம் எடுத்துக் கொண்டனர். இதற்கு மாற்றாக நஞ்சை நிலம் திருப்பணி பற்றாக கோயிலுக்குக் கொடுத்தனர்.

சாளுவ நரசிம்மர்

இம்மன்னரது ஆட்சியில் சக வருடம் 1393 (கி.பி. 1471) விக்ருதி ஐப்பசி 13, துவாதசி திங்கள் அன்று பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. சாளுவ வம்சத்தைச் சேர்ந்த இம்மன்னன் சங்கம வம்சத்தின் பிற்கால மன்னர்கள் திறமையில்லாமல் இருந்ததால், இவர் விசயநகரப் பேரரசைப் பாதுகாக்கும் பொருட்டு கலகஞ் செய்து தலைநகரைக் கைப்பற்றி ஆட்சியை மேற்கொண்டார். சாளுவ நரசிம்மர் எட்டு ஆண்டுகள் ஆட்சி செய்து இழந்த நாடுகளைப் பெற்றுப் பேரரசைப் பலப்படுத்திப் பாதுகாத்தார். இவர் கி.பி. 1491-இல் இறந்தார்.

கிருஷ்ணதேவராயர் (கி.பி. 1509-1529)

சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலில் இம்மன்னரது கி.பி.1513-ஆம் ஆண்டு ஸ்ரீமுக சித்திரை ஏப்ரல் 7-ஆம் நாள் கல்வெட்டு உள்ளது. கி.பி. 1509-இல் நரசநாயக்கருக்கு பிறகு

கிருஷ்ணராய மகாராயர் முடிசூட்டிக் கொண்டார். விசயநகரப் பேரரசராக பட்டத்துக்கு வந்தபோது இளையராய் இருந்தாலும் அறிவிலும், ஆற்றலிலும், வீரத்திலும் தீரத்திலும் தலைசிறந்து விளங்கினார். இவர் காலத்தில் தென்னிந்தியா முழுவதும் விசயநகரப் பேரரசிற்கு உட்பட்டிருந்தது. இவர் காலத்தில் நாகமநாயக்கர் தட்சிண மகாமண்டலேசுவரராக இருந்தார். இம்மன்னரது ஆட்சியின்போது சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு மன்னர் திருப்புலிபேரன் (இவன் தேவப்பெருமாள் மகனாவான்) என்பவர் 500 குழி நிலம் ஒரு நந்தா விளக்குக்கு நன்கொடையாகக் கொடுத்துள்ளான்.

அச்சுததேவராயர் (கி.பி. 1530-42)

கிருஷ்ணதேவராயருக்குப் பின் விசயநகர மன்னராக முடிசூடிய அச்சுததேவராயர் கல்வெட்டும் சித்தலிங்க மடத்தில் ஒன்று உள்ளது. சக வருடம் 1454 (கி.பி. 1532) மகரம் சுக்.16, திங்கள், ஹஸ்தம் நாளன்று அக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. அச்சுதராயர் தம் ஆட்சிக்காலம் முழுவதையும் உள்நாட்டுக் குழப்பங்களை ஒடுக்குவதிலும், முஸ்லீம் படையெடுப்புகளைத் தடுப்பதிலும் செலவிட வேண்டியதாகவே இருந்தது. இவரது ஆட்சியின்போது விசுவநாத நாயக்கர் மதுரையிலிருந்து பாண்டிய நாட்டைக் (அரசப்பிரதியாக இருந்து) கண்காணித்து வந்தார். இம்மன்னரது ஆட்சியின்போது சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலுக்கு ‘கோயிலான்பட்டு’ என்னும் ஊர் தேவதானமாக வழங்கப்பட்டுள்ளது.

அச்சுததேவ மகாராயரின் ஆட்சியின் பிரமதூது வருடம் பொறிக்கப்பட்டதாகும். அரச பிரதிநிதி வையப்ப நாயக்கர் ஆணையின் பேரில் கால்வாய் வெட்டி அக்கலிமங்கலம், புதுப்பாளையம், இடையாறு ஆகிய ஊர்களுக்கு தண்ணீர் விடப்பட்டு அங்குள்ள மக்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (A.R.E. 265 of 1935)

அச்சுதராயருக்குப் பிறகு முதலாம் வேங்கடன் என்பவன் பொறுப்பேற்றான். ஆனால் இவனது பகைவன் திருமலை என்பவனால் கொல்லப்பட்டான். அதன் பிறகு இராமராயர் என்பவன் ஆட்சியைக் கைப்பற்றிச் சதாசிவராயருக்குப் பட்டம் சூட்டினார். கி.பி. 1543-இல் சதாசிவராயர் அரியணையேறினார்.

சதாசிவராயர்

சதாசிவதேவ மஹாராயரின் ஆட்சியில் சக வருடம் 1485-ஆம் ஆண்டு (கி.பி. 1563) பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றும் இங்கு காணப்படுகிறது. இவர் பெயரளவில் அரசராய் இருந்தார். அரசியல் பொறுப்பு முழுவதும் அமைச்சர் இராமராயரிடமே இருந்தது. இராமராயர் உள்நாட்டுக் குழப்பங்களை விளைவித்து வந்தார். 1564-இல் தலைக்கோட்டை போர் விசயநகர பேரரசுக்கும், பிஜப்பூர் சுல்தான்களுக்கும் இடையில் நடைபெற்றது. இதில் விசயநகரப் படையைச் சேர்ந்த முஸ்லீம் படைத்தலைவர் இருவர் செய்த துரோகச் செயலால் சதாசிவராயருக்குத் தோல்வி ஏற்பட்டது. இம்மன்னர் ஆட்சிக்காலத்தில் திருப்புலிபகவநல்லூரில் தங்கும் இடம், அமைக்கப்பட்டது. மேலும் மருதூரில் கிருஷ்ணப்ப நாயக்கரால் அரசனின் அனுமதியின் பேரில் அக்கிரகாரம் அமைக்கப்பட்டது. ***விருபாக்ஷ தேவ மகாராயர் கல்வெட்டொன்று*** உள்ளது. இக்கல்வெட்டு முற்றிலும் சிதைந்துள்ளது.

அரச குடும்பத்தினரும் அரசியல் அதிகாரிகளும்

சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் அரசியல் அதிகாரிகளும், அரச குடும்பத்தினரும் பெரும்பகுதி மிலாடுடையார்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களேயாவர். இவர்களைப் பற்றி ‘மிலாடு’ எனும் தலைப்பில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

பரசமைய கோளரி

சித்தலிங்கமடம் கல்வெட்டில் முத்திரத்தான் கங்கைகொண்டான் பரசமைய கோளரி என்பவன் திருப்புலிபகவர்க்கு தேவதானமாக கொண்டாழி என்னும் நிலத்தை சித்தலிங்கமடத்தைச் சேர்ந்த பாரத்வாஜி திருநீலகண்டன், சூர்யதேவன், காளிதாஸன் இவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொடையாகக் கொடுத்துள்ளான். பரசமைய கோளரி என்பது திருஞானசம்பந்தருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும்.

காலிங்கராயர்

முதலாம் குலோத்துங்கனுடைய 28-ஆம் ஆட்சியாண்டு முதல் விக்கிரமசோழனுடைய 6-ஆம் ஆட்சியாண்டு வரையிலான பல கல்வெட்டுகள் இவனுடைய வெற்றிகளையும், தானங்களையும் குறிப்பிடுகின்றன. இவனுக்குத் தொண்டையர்கோன், அரும்பாக்கிழான், மணவில்கூத்தன், சபாநர்த்தகன், காலிங்கராயன், மானாவதாரன், பொற்கோயில் தொண்டைமான், பொன்னம்பலக்கூத்தன், அருளாகரன், மதுராந்தகன் என்ற பல சிறப்புப் பெயர்கள் காணப்படுகின்றன. இவன் பொன்னம்பலக் கூத்தரின் அம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான் என்றும் அறிகிறோம்.

தில்லையில் சபாநாயகர் கோயிலின் முதல் திருச்சுற்று மாளிகை மேற்குப்புறச் சுவரில் நரலோக வீரனுடைய வீரச் செயல்களையும், திருப்பணிகளையும் விளக்கும் கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் 31 வடமொழி சுலோகங்களும் 36 தமிழ் செய்யுள்களும் இடம்பெற்றுள்ளன.

வடமொழிப் பாடல்களில் நரலோக வீரன் பொன்னம்பலம், பேரம்பலம் ஆகியவற்றிற்குப் பொன்வேய்ந்தமை, விழா மண்டபம் எடுப்பித்து நன்னீர்க்குளம் அமைத்தமை, இரண்டு கோபுரங்கள் கொண்ட நரலோகவீரன் திருமாளிகை எழுப்பப்பட்டமை, நூற்றுக்கால் மண்டபம், அம்மன் கோயில் கோபுரம், திருமாளிகை ஆகியன எடுப்பிக்கப்பட்டமை பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த மணவில்கூத்தனாகிய நரலோக வீரன் சித்தலிங்க மடம் கல்வெட்டிலும் இடம்பெறுகிறான். இவன் இக்கோயிலுக்கு செய்த திருப்பணிகளை வடமொழிப் பாடல்கள் மூலம் அறிகிறோம். காலிங்கராயனான மணவில்கூத்தன் எல்லா ஜனங்களின் மனத்திற்கும் இனியவன் என்று முதல் பாடலில் போற்றப்படுகிறான். மேலும், ‘சபாநர்த்தக காவ்யன்’ என்ற சிறப்புப் பெயரும் காணப்படுகிறது. இரண்டாவது பாடலில் வியாக்கரபாதரால் வணங்கப்படும் பசுபதிக்கு பிரகாரம், விமானம், மண்டபம் முதலியவை அமைத்துள்ளான் என்ற செய்தியும் கூறப்பட்டுள்ளது. இச்செய்தியின் வாயிலாக சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலை மீண்டும் முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் கற்றளியாக அமைத்துள்ளான் என்பதை நன்கறிகிறோம்.

தேவரடியாரர்கள்

கோயிலில் இறைபணி செய்யும் தேவரடியார்கள் பற்றி சித்தலிங்கமடத்தில் உள்ள கல்வெட்டுகள் பகர்கின்றன. கோயிலைச் சுத்தம் செய்வது, மெழுகிடுவது, பூக்களைக் கொண்டு மாலைகள் கட்டுவது, இறைவன் முன் நடனமாடுவது முதலான பணிகளை மேற்கொள்ளும் இவர்கள் திருப்புலிபகவர் கோயிலில் தூண் மற்றும் கோயில் மணியும் செய்து கொடுத்துள்ளனர். உய்யவந்தாளின் நாதியாள் தில்லைநாலாயிர மாணிக்கம், இடப்பாகங்கொண்டாளின் மகள் வம்புயிழுத்தாள் ஆகிய இரு தேவரடியார்கள் இக்கோயில் முதல் திருச்சுற்றில் தூண்களைச் செய்தளித்துள்ளனர். மேலும் வாகீச நங்கை என்ற தேவரடியார் 50 பலம் எடை கொண்ட கோயில் மணி ஒன்றினைத் தானமாக செய்தளித்துள்ளாள்.

வில்லவரான மகுடத்தியாகி

"மாந்தையிலே வாழு மகுடத்தியாகியுனக் கேந்து தழும் போவிரண்டு வேந்தர் முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்யும் படித்தழும் புன் கையிலே பார்" என்று மாந்தையிலே வாழும் மகுடத்தியாகியைப் பற்றி சித்தலிங்கமடத்திலுள்ள சாசனமும் குறிப்பிடுகிறது. முதல் திருச்சுற்றில் வராந்தாவில் உள்ள கற்கட்டடத்தின் தரைப்பகுதியில் இக்கல்வெட்டு உள்ளது. அதில் இம்மண்டபம் முழுவதும் வில்லவரான மகுடத்தியாகி என்பாரால் எடுக்கப்பட்டது குறித்து குறிப்பிடப்படுகிறது. எனவே இவர் முதல் திருச்சுற்று மாளிகை முழுவதும் அமைத்துள்ளார் என்பதை அறிகிறோம்.

அனபாய மூவேந்தவேளான்

இரண்டாம் குலோத்துங்க சோழனின் 13-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1145-46) அனபாய மூவேந்த வேளான் திருமந்திரஓலை நாயகமாக இருந்து ஆணைகளை எழுதியுள்ளான். அனபாயன் என்பது இரண்டாம் குலோத்துங்க சோழனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும்.

ஊரும் நாட்டுப் பிரிவும்

சோழ நாடு பரந்த நிலப்பரப்பு உடையதாக இருத்தலின் ஆட்சி நன்கு நடைபெற காரணமாக பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பிரிக்கப்பட்டவை பல நிர்வாகிகளால் ஆளப்பட்டு நிர்வாகம் செம்மையாகவும், சிறப்பாகவும் இயங்கியது. கோட்டம், கூற்றம் (அ) வளநாடு என்பவை தற்போதைய மாவட்டங்களுக்கும், நாடுகள் என்பவை தாலுக்காவிற்கும் ஒப்பானவை. நாடுகள் பல ஊர்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

சித்தலிங்கமடமும் நாட்டுப்பிரிவும்

கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டுகளிலிருந்து அனைத்துக் கல்வெட்டுகளிலும் சித்தலிங்கமடம் "பிரம்மதேயம் சிற்றிங்கூர்" என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. தொடக்க காலங்களில் முதலாம் பராந்தகன், கன்னரதேவன் கல்வெட்டுகளில் "மலாட்டுக் குறுக்கை கூற்றத்து பிரம்மதேயம் சிற்றிங்கூர்'' என்று குறிக்கப்படுகிறது. எனவே சித்தலிங்கமடம் பிரம்மதேயமாக தொடக்க காலம் முதற்கொண்டு இருந்திருக்கிறது. பிரம்மதேயம் என்பது அந்தணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட ஊராகும். அதன் பிறகு முதலாம் இராசராசன் காலந்தொட்டு "மலாடாகிய ஜனநாத வளநாட்டுக் குறுக்கை கூற்றத்து பிரம்மதேயம் சிற்றிங்கூர்'' என்று குறிக்கப்படுகிறது. ஜனநாதன் என்பது முதலாம் இராஜராஜசோழனின் சிறப்புப் பெயராகும். அவன் காலத்தில் பல நாட்டுப் பிரிவுகள் தோன்றின. சில நாடுகளையும் கூற்றங்களையும் தன்பாற் கொண்ட 'வளநாடு' என்ற பிரிவை ஏற்படுத்தினான். அவ்வாறு ஏற்பட்டதே மலாடாகிய ஜனநாத வளநாடாகும். மலையமான் நாடு என்பது ஜனநாத வளநாடு என்று அழைக்கப்பட்டுள்ளது.

ஜெயங்கொண்டசோழமண்டலம்

முதலாம் இராசராசனின் 28-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மலாடான ஜனநாத வளநாட்டுக் குறுக்கை கூற்றத்து பிரம்மதேயந் சிற்றிங்கூர் என்று மண்டலத்தின் பெயரான 'ஜெயங்கொண்ட சோழமண்டலமும்' குறிக்கப்படுகிறது. தொண்டை மண்டலப் பகுதியானது ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்றழைக்கப் பட்டுள்ளது. முதலாம் இராசராசன் தொண்டை மண்டலம் முழுமையும் கைப்பற்றி அவனது ஆட்சிக்குக்கீழ் கொண்டு வந்தான். இவ்வெற்றியின் நினைவாக இம்மண்டலத்திற்கு ஜெயங்கொண்டசோழமண்டலம் என்று பெயர் எய்திற்று.

இராசாதிராச வளநாடு

முதலாம் இராசராசன் காலத்தில் 'ஜனநாத வளநாடு' என்றழைக்கப்பட்ட இப்பிரிவு பின்னர் முதலாம் இராசாதிராசன் காலத்தில் 'இராசாதிராச வளநாடு' என்று பெயர் மாற்றப் பெற்றது. சம்புவராயர் ஆட்சியின்போதும் 'இராசாதிராச வளநாடு' என்றே அழைக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ள ஊர்களும் பிரிவுகளும்

சிற்றிங்கூரைச் சுற்றியுள்ள மற்ற ஊர்களிலிருந்தும், நாடுகளிலிருந்தும் சிற்றிங்கூர் திருப்புலிபகவர்க்கு கொடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாம் பராந்தகன் கல்வெட்டில் மருதூரும், இராட்டிரகூட மன்னன் கன்னரதேவன் கல்வெட்டில் கொடியூரும் குறிக்கப்படுகின்றன. முதலாம் இராசராசன் கல்வெட்டில் மேல்பிடாகை சிறுபாகநல்லூர் குறிக்கப்படுகின்றது. முதலாம் குலோத்துங்கசோழன் கல்வெட்டிலும், விக்கிரமசோழன் கல்வெட்டிலும் கங்கைகொண்ட சோழ வளநாட்டில் உள்ள திருமுனைப்பாடி ஏமபேற்றூர் நாடு, செம்மாற்றூர், பேரிங்கூர் போன்றனவும் திருமுனைப்பாடி தாமர் நாட்டு கிளியூர், ஒய்மா நாட்டு முஞ்ஞூறான பண்டித கோங்ஷி சருப்பேதி மங்கலம் போன்றனவும் சுட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் குலோத்துங்கனின் கல்வெட்டில் மெய்யூரான நல்லாவூர், சிவபாதசேகர நல்லூர் ஆகியன குறிக்கப்படுகின்றன. சிவபாதசேகர நல்லூரின் பழைய பெயர் ஆதர்பாடி ஆகும்.

இரண்டாம் இராசராசன் கல்வெட்டில் மணலூரான கல்யாண மஹாதேவி சதுர்வேதிமங்கலம் குறிக்கப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் பாலையூரான (பாலையூர்) இராசநாராயண சருப்பேதிமங்கலம் குறிக்கப்படுகிறது.

விக்கிரமபாண்டியன் கல்வெட்டில் மேற்கு பனங்காட்டுபுறம், மருதூர், திருக்கோவிலூர் ஆகிய ஊர்கள் இடம்பெற்றுள்ளன. சுந்தரபாண்டியன் கல்வெட்டில் வில்வலம் ஊர் பற்றிக் கிடைக்கின்றது. மாறவர்மன் வீரபாண்டியன் கல்வெட்டில் திருப்புலிபகவநல்லூர் குறிக்கப்படுகிறது.

பரகேசரி கல்வெட்டு ஒன்றில் மலையனூர், கொடியூர் ஆகிய ஊர்கள் குறிப்பிடப்படுகின்றன. விசயநகர மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் சதாசிவ மகாராயர் கல்வெட்டில் கிருஷ்ணசமுத்திரம் என்கிற மருதூர் குறிக்கப்படுகிறது. கிருஷ்ண சமுத்திரத்தில் கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவரால் அக்ரகாரம் அமைக்கப்பட்டது பற்றிய செய்திக் கிடைக்கிறது. அச்சுதராய மகாராயர் கல்வெட்டில் கோயிலான்பட்டு என்னும் ஊர் குறிப்பிடப்படுகிறது. அச்சுதராய மகாராயர் கல்வெட்டில் அக்கலிமங்கலம், புதுப்பாளையம், இடையாறு ஆகிய ஊர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

தேவதான ஊர்கள்

சிவன் கோயிலுக்கு கொடையாக அளிக்கப்படும் நிலம் மற்றும் ஊர்கள் 'தேவதானம்' என்றழைக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட ஊர்களுள் சில சித்தலிங்கமடம் இறைவனுக்கு தேவதானமாக வழங்கப்பட்டவை. பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியன் ஆட்சி காலத்தில் வில்வலம் என்னும் சிற்றூர் தேவதானமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வூர் சித்தலிங்கமடத்துக்கு தென்மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இவை கைக்கோளர்களால் தேவதானமாக வழங்கப்பட்ட ஊராகும். இரண்டாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியின்போது (கி.பி. 1191) ஆதர்ப்பாடி என்கிற நல்லாவூர் தேவதானமாக விளங்கியது. இவ்வூருக்கு சிவபாதசேகர நல்லூர் என்ற மற்றொரு பெயரும்

இருந்துள்ளது. முதலாம் இராசராசன் சிவபாதசேகரன் என்ற சிறப்பு பெயர் பெற்றிருந்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அச்சுத தேவராயர் காலத்தில் 'கோயிலான்பட்டு' என்னும் ஊரும் தேவதானமாக வழங்கபட்டுள்ளது. கிருஷ்ணப்ப நாயக்கர் பெயரால் மருதூர் 'கிருஷ்ண சமுத்திரம்' என்று அழைக்கப்பட்டது.

மேலும் திருப்புலிபகவர் கோயில் திருச்சுற்று கிழக்கு புறச்சுவரில் உள்ள கல்வெட்டொன்றில் நடுவில் மண்டலத்து திருவதிகை, திருத்தவத்துறை, திருவெண்ணைநல்லூர், திருவாமாத்தூர், திருமுதுகுன்றம் ஆகிய ஊர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. இவ்வூர் பிராமணர் தெருவில் கல்திண்ணையின் மீதுள்ள கல்வெட்டொன்றில் விபவ வருடம் தை மாதம் 12 என்று குறிப்பிடப்பெற்று அதில் வழுதலம்பட்டு சாவடி, படைவீட்டு சாவடி, திருச்சிராப்பள்ளி சாவடி சிற்றிங்கமடம் ஆகியன குறிப்பிடப் பெறுகின்றன. இவ்வூர்கள் யாவும் இன்றும் இதே பெயரில் உள்ளன. சிற்றிங்கூர் என்றழைக்கப்பட்ட இவ்வூர் இக்கல்வெட்டில் 'சிற்றிங்கமடம்' என்று குறிக்கப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதைய பெயர்கள்

கல்வெட்டுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏமபேற்றூர் தற்போது ஏமப்பேரூர் என்று (ஏமப்பூர்) அழைக்கப்படுகிறது. பேரிங்கூர் என்கிற ஊர் பேரங்கியூர் என்றும், மணலூரான கல்யாண மஹாதேவி சதுர்வேதிமங்கலம் என்பது மணலூர்பேட்டை என்றும், கோயிலான்பட்டு என்பது கோகிலாம்பட்டு எனவும் அழைக்கப்படுகின்றன.

கல்வெட்டில் இறைவன் பெயர்

திருப்புலிபகவர்

சித்தலிங்கமடம் கல்வெட்டில் இறைவன் பெயர் 'திருப்புலிபகவர்' என்று அழைக்கப்படுகிறது. திருபுலிபகவர் என்பது பல்வேறு காலங்களில் சிறுசிறு வேறுபாடுகளுடன்

அழைக்கப்பட்டுள்ளது. அவை முற்கால சோழ அரசர்களான முதலாம் பராந்தகன், முதலாம் இராசராசன் மற்றும் முதலாம் குலோத்துங்கன் காலங்களில் 'திருப்புலிபகவர்' என்றும் 'திருப்புலிபகவர் ஆழ்வார்' என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

விக்கிரமசோழன் மற்றும் இரண்டாம் குலோத்துங்கன் முதலான பிற்கால சோழ மன்னர்களின் காலங்களில் 'ஆளுடையார் திருப்புலிபகவதேவர்' என்றும் 'மஹாதேவர் திருப்புலிப்பகவர்' என்றும் 'திருப்புலீஸ்வரமுடைய மகாதேவர்' என்றும் இறைவன் பெயர் குறிப்பிடப்படுகிறது.

கி.பி. 13-16-ஆம் நூற்றாண்டு வரையிலான பாண்டியர் மற்றும் விசயநகர் கல்வெட்டுகளில் இறைவன் 'திருப்புலிபகவ நாயனார்' என்றும் 'திருப்புலிபகவர்' என்றும் குறிக்கப்படுகிறார். தற்போது 'வியாக்கரபாதீஸ்வரர்' என்று அழைக்கப்படுகிறார். அம்மை 'திருப்பள்ளியறை நாச்சியார்' என்று குறிப்பிடப்படுகிறாள். ஆளவந்தாள் என்ற மலாடு குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணால் தன் தாய் நின்றதவஞ்செய்தாளுக்காக (சூர்யதேவியின் நினைவாக) அம்மனுக்கு கோயில் கட்டப்பட்டுள்ளது. விக்கிரம சோழன் காலத்தில் (கி.பி. 1132-33) அம்மன் வழிபாட்டுக்கு பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டன. மேலும் தானமாக இரண்டு வேலி நிலம் கொடையளிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள் காட்டும் இறைவுருவங்கள்

ஆடவல்லான்

திருப்புலிபகவர் கோயிலில் ஆடவல்லான் (நடராசன்) திருமேனி ஒன்று முதலாம் இராசராச சோழனின் 28-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி.1012-13) நிறுவப் பெற்றுள்ளது. ஆடவல்லாரின் திருவிழாவுக்கும், திருநந்தா விளக்கு ஒன்றுக்கும் பிராமணப் பெண் காளி சோமாசி என்பவள் 25 கழஞ்சு

பொற்காசுகளைக் கொடுத்துள்ளாள். விக்கிரம பாண்டியன் காலத்திலும் இத்தேவருக்கு நிலக்கொடை அளிக்கப்பெற்றுள்ளது.

அழகிய திருச்சிற்றம்பலடையார்

திருப்புலிபகவர் கோயிலில் சிற்றிங்கூரைச் சேர்ந்த வணிகன் இன்னம்பர் உடையார் உய்யவந்தான் தித்திக் காடுடையான் என்பவன் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் என்ற பெயரில் திருமேனி (லிங்கம்) ஒன்றை கோயில் வடபிரகாரத்தில் நிறுவியுள்ளான். மாறவர்மன் பாண்டியன் காலத்தில் அமுது படிக்கும், விளக்குக்கும் நிலக்கொடையளிக்கப்பட்டச் செய்தி கிடைக்கிறது.

க்ஷேத்திரபால பிள்ளையார் (பைரவர்)

இரண்டாம் இராசராசனின் 8-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1154) திருப்புலிபகவர் கோயிலில் ஆட்கொண்டான் சானி என்னும் பிராமணப் பெண் க்ஷேத்திரபாலப் பிள்ளையாரை எழுந்தருளுவித்து, திருபிரதிட்டையும் செய்து சந்தியமுது செய்வதற்கு பொற்காசுகளையும் வழங்கியுள்ளாள்.

ஆளுடைய பிள்ளையார் (திருஞானசம்பந்தர்)

ஆளுடைய பிள்ளையார்க்கு அமுது மற்றும் திருமந்திரபோனகம் முதலானவற்றிற்கும், திருச்சுற்றாலை சுத்தம் செய்வதற்கும் 2000 பொற்காசுகள் வழங்கப்பட்டது பற்றி சுந்தரபாண்டியனின் கி.பி. 1263-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. திருஞானசம்பந்தர் சிற்பம் முதல் திருச்சுற்றில் தெற்குபுறம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. முதலாம் குலோத்துங்கனின் 31-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1100-01) மிலாடுடையார் மனைவி சூர்யதேவி என்பாள் பரிவார தெய்வங்களுக்கு அமுது உள்ளிட்ட மற்ற தேவைகளுக்காகவும் நிலதானம் வழங்கியுள்ளாள். எனவே முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் பரிவார தெய்வங்களுக்கு தனிச் சன்னதி ஏற்படுத்தப்பட்டுள்ளதை அறிகிறோம்.

கொடைகள்

சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலுக்கு ஏராளமான கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. நந்தாவிளக்குகள், நிலங்கள், பொன், வரிகள், தேவதான ஊர்கள், செப்புத்திருமேனிகள், பூசைப் பொருட்கள் முதலானவை கொடையாக வழங்கப்பட்டுள்ளன. இக்கொடைகள் முதலாம் பராந்தகசோழன் காலம் முதல் விசயநகர மன்னர்கள் காலம் வரையிலும் தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

மன்னர்கள், அரசிகள் மட்டுமின்றி தேவரடியார்கள், அரசு அதிகாரிகள் மற்றும் தனிநபர்களும் தானம் வழங்கியுள்ளனர்.

இக்கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்டவை பெரும்பாலானவை நிலங்களாக வழங்கப்பட்டுள்ளன. அவை திருவிழாக்களுக்கும், அமுது செய்தருளுவதற்காகவும், நந்தா விளக்குகளுக்காகவும், கோயிலில் மூன்றுவேளைகளிலும் இன்னிசை இசைப்பதற்கும், நந்தவனத்திற்காகவும், நீர்ப்பாசனம் செய்யவும், தண்ணீர் பெறவும் அளித்துள்ளனர். மேலும் பொற்காசுகள் கொடுத்து நிலங்களை விலைக்கு வாங்கியும் தானம் அளித்துள்ளனர்.

பெரும்பாலான நிலங்கள் சபையினரால் விற்றுக் கொடுக்கப்பட்டுத் தானமாக வழங்கப்பட்டுள்ளது. இக்கொடைகளுக்கு சபையினர் ஒப்புதல் அளித்துள்ளனர். சிவபிராமிணர்கள் வசம் கொடைகள் கொடுக்கப்பட்டு நிறைவேற்றிட வேண்டுமென்று ஒப்புதலும் பெற்றுள்ளனர். இத்தானங்கள் சந்திராதித்தவர் (சூரியன் சந்திரன் உள்ளவரை) உள்ளவரை நிலைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

விளக்கு கொடைகள்

இன்றைய காலக்கட்டத்தில் உள்ளது போல் அக்காலத்தில் மின்சாரம் இல்லை. இறைவழிபாட்டுக்கு இரவு நேரங்களில்

கோயிலுக்கு வரும் பொதுமக்களுக்கு வெளிச்சம் தேவை என்பதால், நெய் மற்றும் எண்ணெய் கொண்டு விளக்குகள் எரிப்பது மிக அவசியமானது. ஆகையால், அக்காலத்தில் இரவு பகலும் எப்போதும் எரியக்கூடிய அணையா விளக்குகளான நந்தா விளக்குகள் வைப்பது அத்தியாவசியம் என்பதால் கோயிலுக்கு அதிகமான கொடைகள் விளக்கு கொடைகளாக இருந்தன.

முதலாம் பராந்தகன் (கி.பி.913) காலத்தில் விளக்கெரிக்க இரண்டு நுந்தாவிளக்குக்கு 10 கழஞ்சு பொன் வழங்கப்பட்டுள்ளது. முதலாம் இராசராசசோழன் காலத்தில் (கி.பி. 988-89) 12 சந்தி விளக்கெரிக்க 10 கழஞ்சு பொன் வழங்கப்பட்டுள்ளது. முதலாம் குலோத்துங்கனின் ஆட்சியின்போது (கி.பி. 1079) இரண்டு நுந்தா விளக்குக்கு 64 பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் கி.பி.1118-19-இல் ஒரு நந்தா விளக்கெரிக்க 32 பசுக்களுக்காகப் பத்து பொற்காசுகள் வழங்கப்பட்டுள்ளன.

விக்கிரமசோழன் ஆட்சியின்போது மலாடுடையான் குடும்பத்தைச் சேர்ந்தவர் கி.பி.1120-21-இல் விளக்கெரிக்க பொற்காசுகளைத் தானமாக வழங்கியுள்ளனர். மேலும் இவனது கி.பி. 1124-ஆம் ஆட்சியாண்டின்போது சந்திவிளக்கு ஒன்று வைப்பதற்கு பணமும் கி.பி.1130-ஆம் ஆண்டல் ஆட்சியின் போது ஒரு நந்தாவிளக்குக்கு 718 கழஞ்சு பொன்னும் கொடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் குலோத்துங்கனின் (கி.பி.1143) ஆட்சியின் போது விளக்கெரிப்பதற்கு 5 காசுகள் கொடுக்கப்பட்டுள்ளது. வீரராஜேந்திரனின் (மூன்றாம் குலோத்துங்கன்) ஆட்சியின்போது கி.பி. 1183-இல் கூத்தன் பனையன் என்னும் பொன்பரப்பின மலையமான் என்பவன் இரண்டு விளக்கெரிக்க 700 குழி நிலம்

வழங்கியுள்ளான். மேலும் திருபுவன வீரதேவன் (மூன்றாம் குலோத்துங்கன்) காலத்தில் (கி.பி. 1212) வெண்கலமும் தராவும் (பித்தளை) கூடின குத்துவிளக்கும், வெண்கலமணி. பித்தளை தூக்கல் போன்றனவும் வழங்கப்பட்டுள்ளன. ராஜகேசரியின் (முதலாம் ராசராசன்) கி.பி.988-இல் மிலாடுடையான் நாட்டான் சித்தவடவன் என்பவன் திருநந்தா விளக்குக்கு ஆடுகள் கொடையளித்துள்ளான்.

பரகேசரியின் 5-ஆவது ஆட்சியாண்டில் பிராமணப் பெண் காளி சோமாஸி என்பவள் திருநந்தா விளக்கு ஒன்றும், மற்றொரு விளக்குக்கு 10 கழஞ்சு பொன்னும் கொடுத்துள்ளாள்.

விஜயநகர மன்னர் கிருஷ்ணராய மகாராயர் ஆட்சியின்போது கி.பி. 1513-இல் திருப்புலிபேரான் என்பானால் திருநந்தா விளக்கு ஒன்றுக்கு 500 குழி நிலம் வழங்கியுள்ளான்.

நிலக்கொடைகள்

சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலுக்கு ஏராளமாக நிலங்கள் தானமாக விடப்பட்டுள்ளது. இறையிலியாகவும், தேவதானமாகவும், திருப்படிமாற்றாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாம் பராந்தகனின் ஆட்சியின்போது அம்பலவன் ஐய்யாறன் என்கிற இறைவான்குடி கிழவன் என்பான் தினந்தோறும் மூன்று வேளையும் இன்னிசை இயம்புவதற்கு நிலம் கொடுத்துள்ளான்.

சபையினரால் இரவுவேளையில் அமுது செய்தருளுவதற்கும் கறியமுது, அடைக்காயமுது, நெய்யமுது, பாக்கு, இலையமுது ஆகியவற்றிற்கு இராட்டிரகூட மன்னன் கன்னரதேவனின் ஆட்சியின்போது கி.பி.943,957 நிலம் கொடையாக வழங்கப்பட்டுள்ளது. திருவிழாவின்போது சுவாமி ஊர்வலத்தின் முன் நின்று நடனமாடும் நிருத்தவிடங்கி என்னும் பெண்ணுக்கும் ¼ செய் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

முதலாம் குலோத்துங்க சோழனின் (கி.பி.1086) ஆட்சியின்போது கங்கைகொண்டான் பரசமைய கோளரி என்பவரால் தேவதானம் கொண்டாழி என்னும் நிலம் தானமளிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மன்னனின் 41-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி.1110-11) 1250 குழி நிலம் மற்றும் பரிக்கலம் ஒன்றும் சந்தி அமுது செய்தருளுவதற்காக வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவனது ஆட்சிக்காலத்தில் (கி.பி.1118-19) வைகாசி திருவிழாவுக்கும், 8 சந்தி விளக்குகள் எரிக்கவும் அமுது படைக்கவும் ஆண்டார்களுக்கு அமுது செய்தருளுவதற்கும் முறையே 1650 குழி மற்றும் 2500 குழி நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

விக்கிரமசோழனின் ஆட்சியின்போது (கி.பி. 1119-20) நீலிசெங்கி என்பவளால் 500 குழி நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை சந்திக்கு அமுது படைக்கவும் திருவிளக்குக்கும் சபையினர் 700 குழி நிலம் வழங்கியுள்ளனர். மேலும் 1500 குழி நிலம் 15 அன்றாடு நற்காசுகள் பெற்றுக்கொண்டு விற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. திருப்புலிபகவர் கோயிலில் ஆதிசண்டேசுவர தேவர் பெயரில் 4½ அன்றாடு நற்காசுக்கு 455 குழி நிலம் விற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. கி.பி. 1132-ஆவது ஆட்சியாண்டில் ஆளவந்தாள் என்பவள் தான் கட்டிய பள்ளியறை நாச்சியார் கோயில் வாழிபாட்டிற்கு இரண்டு வேலி நிலம் கொடையளித்துள்ளாள்.

இரண்டாம் இராசராசனின் ஆட்சியின்போது (கி.பி.1153) நந்தவனத்திற்காக மணலூருடையான் திருவகத்தி பழிப்பிலியன் என்பவன் நிலம் வழங்கியுள்ளான். கி.பி.1164-65-ஆம் ஆண்டில் மலையமான் அத்திமல்லன் சொக்கப்பெருமாள் என்பவன் நான்கு வேலி நிலம் வழங்கியுள்ளான். மேலும் கி.பி.1186-ஆம் ஆண்டில்

மலையமான் சூரியனீறேற்றான் எதிரிகள் நாயன் ஆன ராசராச மலையகுலராசன் என்பவனால் ஐந்து வேலி நிலம் கொடுக்கப்பட்டுள்ளது.

கி.பி. 1237-ஆம் ஆண்டைச் சார்ந்த மூன்றாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்றில் நிலம் கொடுக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடப்பெற்றுள்ளது. மாறவர்மன் விக்கிரமபாண்டியன் (கி.பி.1274) ஆட்சியின்போது ஆடவல்லார்க்கு காலைவேளையில் அமுதுசெய்தருளுவதற்கும் பூசைக்கும் வேண்டி 500 குழி நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (கி.பி.1274) ஆட்சியின்போது சிற்றிங்கூர் நகரத்தாரால் திருப்பள்ளி எழுச்சிக்காக 1000 குழி நிலம் கொடுக்கப்பட்டுள்ளது.

மாறவர்மன் வீரபாண்டியன் (கி.பி.1347) ஆட்சியாண்டின்போது இன்னம்பர் தித்திக்காடுடையான் என்கிற வணிகன் அழகிய திருச்சிற்றம்பலமுடையார்க்கு அமுது செய்யவும், திருவிளக்கு ஏற்றவும் 35 அன்றாடு நற்பணம் கொடுத்து 1000 குழி அளவு கொண்ட நிலத்தினை வாங்கி தானமாக அளித்துள்ளான்.

மாறவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1348) ஆட்சியின்போது ஆத்ரயன் நாராயணபட்டன், மலையபெருமாள் அருணகிரிபட்டன். தேவபிள்ளை என்பார்களால் 62 அன்றாடு நற்பணத்துக்கு நிலம் வாங்கி தானமாக கொடுக்கப்பட்டுள்ளது. இவை திருப்புலிபகவர்க்கு பூசைக்காக விடப்பட்டுள்ளது. கோனேரின்மை கொண்டான் திருபுவன் சுந்தரபாண்டியனின் 11-ஆவது ஆட்சி ஆண்டின்போது திருமடை விளாகம் வரி நீக்கி தேவதானமாக கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இவனது 10-ஆவது ஆட்சியாண்டில் கடலடைத்தான் உள்ளிட்ட கைக்கோளர் சமுதாயத்தினர் வில்வலம் என்னும் ஊரினையே இக்கோயிலுக்கு தேவதானமாக வழங்கியுள்ளனர்.

வீரதேவராய உடையார் (சகம் 1329) காலத்தில் திருப்புலிபகவர்க்கு நிலம் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று அச்சுததேவ மகாராயர் காலத்தில் (கி.பி.1454) கோயிலான்பட்டு என்னும் ஊர் தேவதானமாக வழங்கப்பட்டுள்ளது.

பொன் மற்றும் பொற்காசுகள் தானம்

இராட்டிரகூட மன்னன் கன்னரதேவனின் ஆட்சியின் போது திருநாவுக்கரைசி என்பவர் (கி.பி.962-63) ஐந்து கழஞ்சு பொன் கொடுத்து திருப்பள்ளி எழுச்சியின்போது செகண்டிகை, காளம் இரண்டு, தனிக்காளம் ஒன்று ஆகியன ஒரு சந்தியின் போது வாசிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளார்.

முதலாம் இராசராசனின் ஆட்சியின்போது (கி.பி.1012-13) ஆடவல்லார் திருவிழாவுக்கும் திருநந்தாவிளக்குக்கும் 25 கழஞ்சு பொன்னினை காளி சோமாஸி என்னும் பிராமணப் பெண் அளித்துள்ளாள். விக்கிரமசோழன் ஆட்சியின்போது (கி.பி. 1120-21) சதிரி என்பவள் க்ஷேத்திரபால பிள்ளையார் வழிபாட்டிற்கு அமுது செய்தருளுவதற்காக 16 பொற்காசுகள் வழங்கியுள்ளாள்.

வரகூர் கோட்டமுடையான், நம்பிரான் அடிகள் ஆச்சபிடாரி ஆகியோர் 20 பொற்காசுகள் வழங்கியுள்ளனர். சடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1263) ஆட்சியின்போது கைக்கோளர் ஒருவனால் ஆளுடைய பிள்ளையார்க்கு அமுது செய்வதற்கு 2000 பொற்காசுகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், திருப்புலிபகவர் கோயிலுக்கு தண்ணீர் பெறுவதற்கு 75 கழஞ்சு பொன் கொடுத்து கால்வாய் வெட்டுவிக்கப்பட்டுள்ளது. முதலாம் பராந்தகன் (கி.பி. 928) ஆட்சியின்போது மருதூர் வாய்க்கால் வழியாக தண்ணீர் விடப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள் காட்டும் கட்டடச் செய்திகள்

கல்வெட்டுகளில் இக்கோயிலில் பல்வேறு காலத்தில் கட்டடங்கள் எடுப்பிக்கப்பட்டச் செய்திகள் கிடைக்கின்றன.

கோயில் எடுக்கப்பட்டச் செய்தி

இக்கோயிலில் இரண்டு சமஸ்கிருத பாடல் கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் ஒன்று முதல் குலோத்துங்க சோழனின் இயற்பெயரான ராசேந்திரன் பெயரில் அமைந்துள்ள கல்வெட்டு ஆகும். இக்கல்வெட்டில் இம்மன்னனின் ஆட்சிக்காலத்தில் 'நரலோக வீரன்' மணவில் கூத்தன் சபாநர்த்த காவ்யன் என்றெல்லாம் அழைக்கப்படும் நரலோக வீரனால் இக்கோயில் கற்றளியாக எடுக்கப்பட்டதை பற்றி கூறுகிறது.

இப்பாடலில் நரலோக வீரன் (மணவில்கூத்தன்) எல்லா ஜனங்களின் மனத்திற்கும் இனியவன் என்றும், 'சபாநர்த்த காவ்யன்' என்ற சிறப்புப் பெயராலும் போற்றப்படுகின்றான். இச்சமஸ்கிருத பாடலை செய்தவன் "திருக்கோவிலூர் பட்டன்" என்று இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. சம்புக்கு கோயில் கட்டியதாகக் குறிப்பிடப்படுகிறது. சம்பு என்னும் சொல் சிவனைக் குறிக்கும் சொல்லாகும். சிவனுக்காக எடுக்கப்பட்ட கோயில் என்பது இதன் பொருள். முதல் ஸ்லோகத்தில் சிவனை 'சம்பு' என்றும் இரண்டாவது ஸ்லோகத்தில் 'பசுபதி' என்றும் பகர்கிறது.

இரண்டாம் ஸ்லோகத்தில் சித்தலிங்காவில் தினந்தோறும் வியாக்கரபாதரால் தொழப்படும் இறைவனுக்கு (பசுபதி) பிரகாரம், விமானம், பாக்கு மரங்களால் சூழப்பெற்ற மண்டபம் முதலான கற்கட்டடங்களை அமைத்துள்ளான் என்று குறிக்கப்பெற்றுள்ளது. இவைகள் யாவும் நரலோக வீரனால் எடுப்பிக்கப்பட்டவையாகும். நரலோக வீரனைப் பற்றி விரிவாக ஏற்கனவே, அதிகாரிகள் என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ளது.

முதல் திருச்சுற்று

முதல் திருச்சுற்றில் உள்ள கற்கட்டடத்தின் தரைப் பகுதியில் உள்ள கல்வெட்டொன்றில் இம்மண்டபம் முழுதும் வில்லவரான மகுடத்தியாகி என்பவரால் எடுப்பிக்கப்பட்டது என்று குறிப்பிடப்படுகிறது. எனவே கோயில் முதல் திருச்சுற்று இவரால் எடுப்பிக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

தூண்கள்

தேவரடியார்களாலும், எண்ணை வணிகக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களாலும் இக்கோயில் முதல் பிரகாரத்தில் உள்ள சில தூண்கள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று தேவரடியாள் தில்லை நாயிர மாணிக்கம் என்பவளாலும், இவள் தேவரடியாள் உய்யவந்தாள் என்பவனின் நாதியாள் (நாத்தனார்) ஆவாள். மற்றொன்று தேவரடியாள் வம்புயிமுத்தாள் என்பவளாலும் செய்து கொடுக்கப்பட்டது. இவள் தேவரடியாள் இடப்பாகங்கொண்டாளின் மகள் ஆவாள். மூன்றாவது தூண் எண்ணை வணிகக் குடும்பத்தைச் சேர்ந்த அடைக்கலந்தெள்ளாள் என்பவளால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள் காட்டும் பொருளாதாரம்

திருப்புலிபகவர் கோயிலிலுக்கு கொடுக்கப்பட்டக் கொடைகள் பற்றிய செய்திகளைக் கொண்டு அக்காலப் பொருளாதார செய்திகள் கீழே தொகுத்து தரப்படுகின்றன.

சோழர் காலத்து வரிகள்

சில்லிறை, அமஞ்சி, வெட்டிமுட்டையாள், கடமை, அந்தராயம், கற்பூரவிலை, பொன்வரி, வினியோகம் உபாதி, பஞ்சுபிலி, சந்திவிக்ரகப்பேறு, இடையர்வரி, இனவரி,

ஏரிமின்பாட்டம், வாசல்வரி, தலையொப்பு, தறிஇறை, செக்கிறை, தட்டொலி, தட்டார்பாட்டம் உட்பட பல வரிகள் வசூலிக்கப்பட்டன.

மேலும் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் காவலாள், அமஞ்சி ஆகிய இறைகள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

இரண்டாம் இராசராசன் கல்வெட்டொன்றில் நான்கு வேலி நிலத்துக்கு அந்தராயம், பெரும்பாடி காவல், சிறுபாடி காவல் உள்ளிட்ட வரிகளும் ஆளும் அமஞ்சியும் உட்பட கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

வீரராசேந்திரனின் கல்வெட்டொன்றில் திருப்புலிபகவர் திருமடைவிளாகத்து நாலு விக்கரத்து உட்பட்ட கீழிறைப்பாட்டமும், தறிஇறை, தட்டார்பாட்டமும், எடுப்பன, அளப்பன, நிறுப்பன அனைத்தும் இத்தேவர்க்கு கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டில் சிற்றிங்கூர் தேவதானம் நன்செய், புன்செய் நிலங்களில் சிறுபாடிக்காவல் எனப்படும் காவல்காக்கும் வீரர்களுக்கு அளிக்கப்படும் வரி நீக்கி மற்ற அனைத்து வரிகளும் விடப்பட்டுள்ளன.

பாண்டியர் காலத்து வரிகள்

சுந்தரபாண்டியன் கல்வெட்டில் தறிஇறை, செட்டிறை ஆசுபொதுமக்கள் பேர்க்கடமை, ஏரிமின்பாட்டம், செக்கு, ஆயம். தரகு, வாசல்ப்பணம், பட்டித்தெண்டம், குற்றத்தெண்டம் மற்றும் அளப்பன, முகப்பன, நிறுப்பன, முதல் சரக்கு அங்காடி பாட்டம் உள்ளிட்ட அனைத்தும் வரிநீக்கி தேவதானமாகக் கொடுக்கப்பட்டுள்ள செய்திக் காணப்படுகிறது.

விக்கிரம பாண்டியன் கல்வெட்டொன்றில் கார்பாசன பயிர்வகைகள் உள்ளிட்ட அனைத்து ஆயங்களும் திருநாமத்துகாணி இறைநீக்கி கொடுக்கப்பட்டச் செய்தி காணப்படுகிறது.

வரிகள் – பொருள்

அங்காடிப்பாட்டம்: கடைகளுக்காக இறுக்கும் வரி

அந்தராயம் : உள்வரி; உள்வருமானம்; ஊர்ச்சபை, நாட்டவர் போன்ற அமைப்புகளுக்கு இறுக்கும் வரி.

அமஞ்சி: கூலி இல்லாமல் வேலை செய்வது

ஆசுபொதுமக்கள்: ஊர்க்காவல் புரியும் வீரர்கள்.

இடையர் வரி: மாடு மேய்ப்பவர் இறுக்கும் வரி

இறை : அரசாங்கத்துக்கு இறுக்கும் வரியைப் பொதுவாக உணர்த்தும் சொல்.

இனவரி , இனவரிக்காசு: அந்த அந்தச் சாதியினர் செலுத்தும் வரி: ஜாதி ஸித்தாணம் என்று தெலுங்குச் சாசனங்கள் குறுப்பிடுகின்றன.

உபாதி : கடமை; இறுக்க வேண்டிய வரி, ஒபாதி என்றும் காணப் பெறும்.

ஏரிமீன்பாட்டம் : நீர்நிலைகளின் மீன் விற்பனையால் கிடைக்கும் வருவாய்

கடமை : அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரிகளைப் பொதுவாகக் குறிக்கும் சொல்.

குற்றத்தண்டம் : செய்த குற்றத்துக்குரிய தண்டனை; அதற்காகச் செலுத்தும் பணம்.

சந்திவிக்கிரகப் பேறு : கிராம மத்தியஸ்தனுக்குக் கொடுக்கும் கட்டணம்; பத்திரம் எழுதுவோர்களுக்குக் கொடுக்கப் பெறுவதாகவும் கொள்வது உண்டு.

சில்லிறை, சில்வரி: சில்லறை வரிகள்.

சிறுபாடிகாவல்: ஊர்க்காவலுக்காகப் பெறப்படும் காவல் வரி.

செக்காயம் : எண்ணெய் ஆடும் செக்கு வரி; **செக்கிறை,** செக்குக் கடமை எனவும் பெறும்.

தட்டார்பாட்டம் : (பொற்கொல்லர்கள்) தட்டார்கள் இறுக்கும் வரி; தட்டாரப்பாட்டம் எனவும் ஆகும்.

தட்டொலி : கம்மாளரிலே வேறு வகையினரான கொல்லர் போன்றவர் பட்டறை வைத்து வேலை செய்வதற்கு இறுக்கும் வரி.

தரகு, தரகுபாட்டம்: தரகரிடமிருந்து கொள்ளும் வரி.

தறிக்கடமை, தறியிறை : துணி நெய்வோர் தறி ஒன்றுக்கு கொடுக்கும் வரி.

பஞ்சுபீலி: பஞ்சின் மீது இறுக்கும் வரி; பஞ்சுபீலி எனவும் பெறும்.

பட்டித்தண்டம்: கிராமத்தார் இறுக்கவேண்டிய தண்டப்பணம் போலும்.

பெரும்பாடிகாவல் : (சிறுபாடிகாவலினின்றும் வேறானது) நாடு முதலிய பெரிய பகுதியின் காவல்.

பேர்க்கடமை: தலைவரி; ஆள்வரி, பேர்வரி என்பனவும் இதுவே.

பொன்வரி : பொன்னாக இறுக்கும் வரி; பொன்னை நாணயமாக அச்சிடுவதற்கான வரியும் ஆகும்; பொன்வரி மாடை என்பதும் இதுவே.

வாசல்குழிப்பணம் : வீட்டுவாசலைக் கொண்டு கணக்கிட்டது போலும்.

வாசல்திரமம் : வீட்டுவாசல் வரி; வாசல் பணம் என்பதும் இதுவே போலும்.

வெட்டிமுட்டையாள் : கிராமத்தின் பொது வேலைக்கு அது முடிவைடையும் வரையில் இடையறாமல் (முட்டாமல்) வேலை செய்வதற்கு அனுப்பப் பெறும் ஆள்.

பொருள் மதிப்பு

முதலாம் குலோத்துங்கசோழனின் காலத்தில் திருப்புலிபகவர்க்கு அமுது செய்தருளவும் (திருப்பள்ளி எழுச்சியின்போது) விளக்கெரிக்கவும் கொடையாக விடப்பட்ட 1650 குழி அளவு நிலம் 17 பொற்காசுக்கு விற்றுக் கொடுக்கப்பட்டது.

மதுரை கொண்ட பரகேசரியான முதலாம் பராந்தக சோழன் கல்வெட்டொன்றில் இரண்டு நந்தா விளக்குக்கு 15 கழஞ்சு பொன் கொடுக்கப்பட்டுள்ளது. முதல் இராசராசனின் காலத்தில் 12 சந்தி விளக்கு எரிக்க 10 கழஞ்சு பொன் அளிக்கப்பட்டுள்ளது. மாறவர்மன் வீரபாண்டியன் காலத்தில் கொடையாக 1000 குழி நிலம் 35 நற்பணத்துக்கு விற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டில் 1546 குழி அளவு நிலம் 62 அன்றாடு நற்பணத்துக்கு விற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே கல்வெட்டில் ஒரு நற்பணத்துக்கு ஏறக்குறைய 28½ குழி நிலமும், இரண்டாவது கல்வெட்டில் ஒரு நற்பணத்துக்கு 25 குழி நிலமும் விற்பனைச் செய்யப்பட்டதை அறிகிறோம்.

விக்கிரமசோழனின் கல்வெட்டொன்றில் இரண்டு வேலி நிலம் இரண்டு காசுக்கு விற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. விக்கிரம சோழனின் காலத்தில் (கி.பி. 1123) 1500 குழி அளவு நிலம் 15 அன்றாடு பணம் குறிப்பிடப்படுகிறது. இவனின் மற்றொரு கல்வெட்டில் 455 குழி நிலம் 4 அன்றாடு நற்பணத்துக்கு விற்றுக் கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. விக்கிரமசோழனின் கி.பி. 1119-1120-ஆவது ஆண்டில் 500 குழி நிலத்துக்கு 3 காசுகள் பெற்றுக் கொண்டு மகாசபையினரால் விற்றுக்கொடுக்கப் பட்டுள்ளது. விக்கிரமசோழனின் (கி.பி. 1119-20) தொடக்க காலத்தில் ஒரு காசுக்கு ஏறத்தாழ 160 குழி அளவு நிலம் விற்பனை செய்யப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு பிறகு ஒரு பணத்திற்கு 100 குழி நிலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனை நோக்கும் போது நிலத்தின் மதிப்பு உயர்ந்துள்ளதை காண்கிறோம்.

சோழ மன்னன் வீரராசேந்திரசோழனின் காலத்தில் 700 குழி நிலம் ¼ கழஞ்சு பொன்னுக்கு சபையினரால் கொடையாக விற்றுக் கொடுக்கப்பட்டு இரண்டு விளக்குகள் எரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. விசயநகர மன்னர் கிருஷ்ண தேவராய

மகாராயர் காலத்தில் ஒரு நந்தா விளக்கு எரிக்க 500 குழி நிலம் கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளது ஒப்பு நோக்கத்தக்கது.

அளவுகள்

முகத்தல், நிறுத்தல், நீட்டல் ஆகிய அனைத்து அளவுகளும் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன. திருமால் திருபாட்டக்கோல் (நிறுத்தல் அளவுகோல்) மற்றும் எடை 80 பலம் கொண்ட திருநந்தா விளக்கு கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

நெய்யமுது இருசெவிடு, கறியமுது மூன்று, அடைக்காயமுது (பாக்கு) அஞ்சு என்று கல்வெட்டுக் குறிப்புகளால் முகத்தல் அளவுகளான செவிடு, நாழி ஆகியவற்றால் அழைக்கப்பட்டுள்ளதை அறிகிறோம்.

இவ்வூர் வாகீச நங்கை என்பவள் கொடுத்த மணியின் எடை 50 பலம் ஆகும். மேலும் விளக்கு இரண்டுக்கு 16 சாண் கோலால் 700 குழி நிலம் கொடுத்துள்ளனர். பாலையூரான இராஜநாராயண சருப்பேதிமங்கலத்தைச் சேர்ந்த தேவப்பெருமாள் மகுடத்தியாகி என்பவனால் குத்துவிளக்கு, வெண்கலமும், தராவும் (பித்தளை) கலந்த கல் எடை கொடுக்கப்பட்டுள்ளது. உலோகங்கள் 'பலம்' என்னும் அளவால் நிறுக்கப்பட்டுள்ளன. நிலத்தினை அளக்க 14½ அடி நீளம் கொண்ட அளவுகோல் பயன்படுத்தப்பட்டுள்ளதை காண்கிறோம்.

அரிசி, ஏழுக்கல நெய், ஏழுகுறுணியும், நெய் எண்ணை இருதூணியும் கொடுக்கப்பட்டுள்ளதை கல்வெட்டு தெரிவிக்கிறது. விளக்கு ஒன்றுக்கு 'திருப்புலிபகவந் நாழி'யால் ஏழுநாழி அரிசி என்ற கல்வெட்டுக் குறிப்பால் அரிசி திருப்புலிப்பகவந் நாழியால் அளக்கப்பட்டுள்ளதை அறிகிறோம். முகத்தல் அளவை குறுணி, நாழி என்கிற அளவுகளால் அளக்கப்பட்டுள்ளன.

வேளாண்மை

சித்தலிங்கமடம் திருப்புலிபகவர்க்கு கொடையாகக் கொடுக்கப்பட்டவை பெரும்பாலும் நிலங்களே என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இங்குள்ள கல்வெட்டுகளில் நிலப்பெயர்கள், பயிர் வகைகள், நீர்ப்பாசன அமைப்புகள் முதலானவை குறிப்பிடப்பட்டுள்ளன.

நிலப்பெயர்கள்

எருகம்போதிக்கு நீர்பாய்ந்த வாய்க்கால், முடக்கு கழுவப் பூத்துடைக்குண்டில் என்று நிலப்பெயர்கள் போதி, குண்டில் எனற பெயரில் குறிப்பிடப்படுகின்றன. புத்தறை, மேட்டுவேலந்தாங்கல், கணபதியார் குண்டு, பலிப்பட்டி, ஏகசூரன். விநாயக பகவன் நிலம், திருவலகுகுண்டில், ஆச்சபிடாரி கீழ்வரம்பு என்றெல்லாம் நிலப்பெயர்கள் முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன. மாந்தோட்டம், சபையார் தோட்டப்பொழி, 'நாடகப் பங்கு நிலம்' என்றும் நிலத்தின் பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன. நாடகம் நடத்துவதற்கு வழங்கப்பட்ட நிலம் நாடகப் பங்கு நிலம் என்று அழைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இதன் வாயிலாக இக்கோயிலில் நாடகங்கள் நடைபெற்றுள்ளன என்பதை அறியமுடிகிறது.

தெற்கு கணத்தான் பெருஞ்செறு, கணவதியாந்செறு, ஆடவல்லான் பெருஞ்செறு ஆகியவை முதலாம் இராசராசன் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன. இவற்றில் ஆடவல்லான் பெருஞ்செறு தென்பிடாகை கொடியூர் என்று கூறப்படும் ஊரில் இன்றும் உள்ளது. கூத்தாண்டைசெறு, அத்திச்செறு, திருவாலன் துறை குண்டில் ஆகியவையும் குறிப்பிடப்படுகின்றன.

மாறவர்மன் வீரபாண்டியன் கல்வெட்டில் தட்டார்வட்டம், வளவுவெட்டு, வீரன்குண்டில், அரசடை, வண்ணான்குண்டில்,

வெட்டுவான் குண்டில், நாவிதன் குண்டில், கல்லிபாடகம், பெரியபடைப்பை முதலான இடப்பெயர்களாகக் குறிப்பிடப் படுகின்றன. இவற்றில் நாவிதன் குண்டு, வண்ணான்குண்டு, தட்டார்வட்டம் என்ற நிலப்பெயர்களைக் கொண்டு அப்பிரிவினருக்கு வழங்கப்பட்டவை என்பதை விளங்கமுடிகிறது. இன்றும் அந்நிலம் அப்பெயரிலேயே உள்ளது.

வீரதேவராய உடையார் கல்வெட்டில் தானக்குண்டில், நாவிதன் குண்டில், கணக்கன் குண்டில், நாராயண குண்டில், பெருமாள் குண்டில் என்றெல்லாம் குறிப்பிடப்படுகிறது. திருவிளக்குபுறம், தண்டுக்கரை என்று நிலப்பெயர்களும் காணப்படுகின்றன. மேலுள்ள நிலப்பெயர்கள் மூலம் நிலத்திற்கு இறைவன் பெயர்களும், நாவிதன், கணக்கன் பெயர்களால் சுட்டப்பட்டுள்ளதை அறிகிறோம். திருவிளக்குப்புறம் என்பது விளக்கு எரிப்பதற்காக அளிக்கப்பட்ட நிலமாகும்.

குடிப்பற்று, சேரிகுன்று. திருப்புலிபகவதி, மருதங்கழனி, கருப்புக்கால், அரசங்குண்டில், விளாகத்திகால், நடக்கால், தண்ணாம்பறவை, குண்டிகை, ஐயம்பெருங்கால், தலைப்பாடகம் என்று விக்கிரமசோழன் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. மேலும், வெண்காடுதேவன் அகளங்கன் செங்கொல்லை, திருவண்ணாமலை உடையான் உய்யவந்தான் செங்கொல்லை, பரிவத்திச்ச செங்கொல்லை ஆகியனவும் இம்மன்னனின் கல்வெட்டுகளில் நிலப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

வடகழனி, நக்கபிரான் திருப்புலிபகவந் குராத்து, கோவணக்குண்டில், திருவலகுண்டில், சிற்றிங்கூருடையான் நிலம், சோமன் திருச்சிற்றம்பலமுடையான் நிலம் ஆகியன இரண்டாம் இராசராசன் கல்வெட்டில் உள்ளன.

சிற்றிங்கூர் கூத்தாண்டாள் திருத்து, வாகீசன் திருத்து, குரங்கு குத்தி இவற்றில் கூத்தாண்டாள் திருத்து நிலம் இன்றும்

அவ்வாறே கூறப்படுகின்றன. இக்கல்வெட்டுச் செய்திகளின் மூலம் நிலம் என்பது செய், செறு, குண்டில், வட்டம், பாடகம், புறம், பற்று, கழனி, கொல்லை ஆகியவற்றால் அழைக்கப்பட்டதை காண்கிறோம். இந்நிலத்தின் பெயர்களாவது இறைவன் பெயர், தனி நபர்களின் பெயர்கள் சமுதாயப் பிரிவுகளில் இருந்தவர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட சமுதாயத்தினரின் பெயர்களில் காணப்படுகின்றன.

நீர்ப்பாசனம் (ம) நீர்ப்பாசன தொழில்நுட்ப அமைப்புகள்

மதுரை கொண்ட பரகேசரிவர்மனான கல்வெட்டொன்றில் புதிதாக எடுத்த வாய்க்கால் கல்லின (தோண்டிய) ஒரு தூம்பு வழியாக ஏரியிலிருந்து சென்று மறு தூம்பு வழியாகப் பாய்ந்துள்ளது. மருதூர் ஊர்க்குழுவினர் ஐந்தில் ஒரு பங்கு நீர் வழங்கியுள்ளனர். அது பலிபட்டிக்கு (வழிபாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிலம்) பாய்ந்துள்ளது. நீருக்கு விதிக்கப்படும் 'நீர் அமஞ்சி' என்னும் வரி விதிக்காமல் வரிவிலக்கு அளித்துள்ளனர் என்பதை விரிவாகக் கூறுகிறது.

ஐந்தில் ஒரு பங்கு நீர்பாயும் உரிமை கொண்ட வழிபாட்டுக்காக அளிக்கப்பட்ட நிலம் 75 கழஞ்சு பொன் காசுக்கு கோயிலுக்காக விற்கப்பட்டுள்ளது. நீர் பாயும் உரிமையை இறையான்குடி கிழவன் வாங்கிக் கொடுத்துள்ளான். பின்னாளில் யாரும் நீர் பாயக்கூடாது என்று தடுத்தாலோ அல்லது நீர் அமஞ்சி என்ற வரி கேட்டாலோ அது குற்றம் என்று கொள்ளப்படும் என்றும் எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

இரண்டாம் இராசாதிராசன் கல்வெட்டொன்றிலும் நீர்பாசன அமைப்புகள் குறிப்பிடப்படுகிறது. பிராமணர்களும், பெரிய நாட்டார்களும் ஒப்புக்கொண்டு சிறிய கால்வாய் ஒன்று (இடக்கால்) திருப்புலிபகவர் வழிபாட்டு நிலத்திற்கு நீர்பாய வெட்டுவித்துள்ளனர். இக்கால்வாய் 'திருப்புலிபகவ நூற்றுக்கால்',

என்றும் அழைக்கப்பட்டுள்ளது. மருதூர்க் கால்வாய் வழியாக தொடர்ந்து நீர் பெறப்படுவது குறிப்பிடப்படுகிறது.

விசயநகர மன்னர் அச்சுத தேவராய மகாராயர் கல்வெட்டொன்றில் வையப்ப நாயக்கரால் ஏற்படுத்தப்பட்ட கால்வாய் வழியாக வரும் தண்ணீர் அருகில் இருக்கும் ஊர்களான அக்கலிமங்கலம், புதுப்பாளையம், இடையாறு மக்களும் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது பற்றி விவரிக்கிறது.

வாய்க்கால்கள்

திருச்சிற்றம்பல வாய்க்கால், மதுராந்தகன் வாய்க்கால், கண்ணிக்கால், திருப்புலிபகவன் வதி, ஐயம்பெருங்கால், ஆட்கொண்டான் வதி, ஸ்ரீராஜராஜப்பேரேரி, ஸ்ரீ அருமொழிதேவ வாய்க்கால், கள்வன் வாய்க்கால், கொடியூர் ஏரி, திருப்புலிபகவர் நூற்றுக்கால், மந்த குடக்கால் ஆகிய ஏரி மற்றும் வாய்க்கால்களின் பெயர்கள் கிடைக்கின்றன. இவற்றில் குறிப்பிடப்படும் ஸ்ரீராசராசப் பேரேரி இன்று சித்தேரி என்ற பெயரில் வழங்கப்படுகிறது. திருச்சிற்றம்பல வாய்க்கால், அருண்மொழித்தேவன் வாய்க்கால் ஆகியவை தற்போது இராகவன் வாய்க்கால், நானா வாய்க்கால் என்று அழைக்கப்படும் வாய்க்கால்களாக இருத்தல் வேண்டும்.

பயிர் வகைகள்

கார்பாசனம், சித்திரைக் கார் முதலான நெல் பயிரிடும் காலத்தினை தெரிவிக்கிறது. சித்திரைக்கார் பயிர் என்பது ஏத்தம் இறைத்து பயிர் செய்யப்படும் நெல் பயிர் என்று கல்வெட்டு சுட்டுகிறது.

சமுதாய அமைப்பு

வணிகர்

சமுதாய அமைப்புகள் பற்றியும் இக்கோயில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. சாலிக நகரத்தார்கள் (சாலியர்) மற்றும் சிற்றிங்கூர் வியாபாரிகள் பற்றியக் குறிப்புகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இவ்வூர் வியாபாரிகளில் ஒருவனான இன்னம்பர் உடையான் உய்யவந்தான் தித்திக்காடுடையான் என்பவன் திருப்புலிபகவ நாயனார் கோயிலின் வடபிரகாரத்தில் அழகிய திருச்சிற்றம்பலமுடையார்க்கு கோயில் கட்டியும், திருச்சிற்றம்பலமுடையார்க்கு அமுதுபடிக்கும், வெஞ்சனத்துக்கும் 1000 குழி நிலம் தானமாகக் கொடுத்துள்ளான்.

சிற்றிங்கூர் நகரத்தார்கள் குறித்தும் குறிப்புகள் உள்ளன. நகரத்தார் என்பார் வணிகம் செய்பவர்களைக் குறிக்கும் சொல்லாகும். எனவே, இவ்வூரில் வணிகர்கள் குடியிருந்தனர் என்பதை நன்கறிய முடிகிறது. இவர்கள் திருப்புலிபகவர் கோயிலில் புலவர் தலைவன் உள்ளிட்ட அடியார்களுக்கு திருப்பள்ளி எழுச்சியின் போது அமுதுபடிக்கும், படிவெஞ்சனங் களுக்கும் 1000 குழி நிலம் இன்நாயனார்க்கு தானமாகக் கொடுத்துள்ளனர்.

எண்ணை வணிகக் குடும்பத்தைச் சேர்ந்த அடைக்கலந் தெள்ளாள் என்பவள் திருப்புலிபகவர் கோயிலில் தூண் ஒன்றினைத் தானமாகச் செய்து கொடுத்துள்ளாள்.

கைக்கோளர்

கைக்கோளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கடலடைத்தான் உள்ளிட்டார் வில்வலம் என்னும் ஊரைத் தேவதானமாகக் கொடுத்துள்ளனர். இவர்கள் ஆளுடைய பிள்ளையார்க்கு அமுது செய்தருளவும் காசுகள் கொடுத்துள்ளனர்.

பிராமணர்

இக்கோயில் சிவபிராமணர்கள் குறித்தும் குறிப்புகள் உள்ளன. திருப்புலிபகவர் கோயிலில் விளக்கெரிக்கவும், அமுதுபடி செய்யவும் கொடைகளைப் பெற்றுக்கொண்டு செய்வதாக ஒப்புக்கொண்டனர். 40 வட்டத்து சிவபிராமணர்கள் குறித்தும் குறிப்பு காணப்படுகின்றது. இவர்கள் பூசை செய்யும் முறையை 40 ஆக பிரித்து பூசை செய்வதை வைத்து 40 வட்டத்து சிவப்பிராமணர் என்றழைக்கப்படுகின்றனர்.

பிராமணப் பெண் ஒருவள் திருப்புலிபகவர் கோயிலில் க்ஷேத்திரபாலப் பிள்ளையாரை எழுந்தருளச் செய்து சந்தியமுது செய்தருளுவதற்காகக் காசுகளும் கொடுத்துள்ளாள்.

தேவரடியார்கள்

தேவரடியார் என்பவர்கள் இறைவனுக்கு (தேவர்) சேவை செய்யும் அடியார்கள் ஆவர். கோயில் பணிகள், இறைவன் திருமுன் நடனமாடும் மகளிர்கள் தேவரடியார்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் அக்கால சமுதாயத்தில் மிகவும் சிறப்பான நிலையில் இருந்தனர். இத்தேவரடியார் கோயில் தொண்டுகள் மட்டுமின்றி கோயிலுக்குப் பல்வேறுக் கொடைகளையும் அளித்துள்ளனர்.

இடங்கை சமூகம்

விபவ வருடம் தை மாதம் வெட்டப்பட்ட கல்வெட்டொன்றில் இடங்கை சமூகத்தார் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இக்கல்வெட்டு இடங்கை சமூகத்துக்கு கொடுக்கப்பட்ட உரிமையைக் கூறுகிறது. வழுதலம்பட்டுசாவடி, படைவீட்டுசாவடி, திருச்சிராப்பள்ளிச்சாவடி மற்றுமுள்ள நாடுகள் அனைத்தும் கூடி ஒப்புக்கொண்டு உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர். இடங்கை சமூகத்தினரும் கையெழுத்திட்டுள்ளனர். இடங்கை மெய்காவல் சோழகனார் என்பவர் குறிப்பிடப்படுகிறார். இவர்

சித்தலிங்கமடம் அறமாக அனைத்து சாவடிகளும் கூடி செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஏற்று எழுதியுள்ளார். பிற்காலச் சோழர் காலத்தில் வலங்கை 98 சாதியினர் இடங்கை 98 சாதியினர் என்று இரு பிரிவுகளாக சாதிப் பிரிவுகள் ஏற்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

வரிகள் வசூலிக்கப்பட்டுள்ள பட்டியல்கள் மற்றும் நிலத்தின் பெயர்கள் போன்றவற்றில் கிடைக்கின்ற குறிப்புகளின் அடிப்படையில் இடையர், தட்டார், கொல்லர், ஆச்சாரி, வண்ணார், நாவிதர், கணக்கன் ஆகிய சமுதாய அமைப்பினரும் இவ்வூரில் இடம்பெற்றுள்ளனர் என்பதை உறுதிசெய்யலாம்.

சிறப்புச் செய்திகள்

நம்பிக்கைகள்

திருப்புலிபகவர் கோயில் சிவபிராமணன் பாராத்வாஜி பஞ்சனதி பெரியான் என்பவன் ஆண் குழந்தை வேண்டி திருப்புலிபகவர்க்கு இரண்டு நந்தா விளக்குகள் எரிக்க வழிவகை செய்துள்ளான்.

மலையமான் குடும்பத்தைச் சேர்ந்த தலைவனான ராஜகம்பீர சேதிராயனின் உடல் நலம் வேண்டி திருப்புலிபகவரிடம் மலையமான் கூத்தன் பனையன் என்னும் பொன்பரப்பின மலையமான் என்பவன் விளக்கெரிக்க இரண்டு திருநந்தா விளக்குக்கு 700 குழி நிலம் கொடுத்துள்ளான்.

கலை

திருப்புலிபகவர் கோயில் திருவிழாவின்போது சுவாமிமுன் நடனமாடுவதற்கு திருப்புலிபகவர் நிருத்தவிடங்கி என்பாளுக்கு நிருத்த போகமாக ¼ செய்நிலம் தென்பிடாகை கொடியூரில் வழங்கப்பட்டுள்ளது. இது இவளது வம்சத்தாரும் அனுபவித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் கூத்தாடி நிலம் என்றழைக்கப்பட்டுள்ளது.

சபை நடவடிக்கைகள்

சித்தலிங்கமடத்தில் நிர்வாக சபை ஒன்று இருந்துள்ளது. இவற்றில் பிராமணர்கள், நாட்டார் உள்ளிட்டோர் உறுப்பினர்களாக இருந்துள்ளனர். பெரும்பாலான நிலங்கள் இவர்களாலே விற்றும், கொடைகளாக பெற்றும் ஒப்பந்தமும் பாதுகாப்பும் அளித்துள்ளனர். ‘இறையிலி செய்தல்’ என்னும் வரிவசூலிக்கும் உரிமை இவர்களுக்கு இருந்துள்ளது. நிலம் விற்கும்போது வரிவிலக்கு அளிக்கும் அதிகாரமும் பெற்றிருந்தனர். திருப்பணிப் பற்றாக இந்த நாயனார் கோயில் தானத்தார்க்கு சபையினர் நிலமளித்துள்ளனர்.

கல்வெட்டுகளில் வழிபாடுகளும் விழாக்களும்

திருப்புலிபகவர் கோயிலில் வழிபாடு, திருவிழாக்கள் நடத்துவதற்காகவும் பல கொடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றினை தினசரி வழிபாடுகள், சிறப்பு வழிபாடுகள், மாத வழிபாடுகள், ஆண்டு வழிபாடுகள் மற்றும் திருவிழாக்கள் என வகைப்படுத்தலாம்.

வழிபாடுகள்

நடுவில் மண்டலத்தில் உள்ள திருவதிகை, திருத்தவத்துறை, திருவெண்ணைநல்லூர், திருவாமாத்தூர், திருமுதுகுன்றம் ஆகிய இவ்வூர்களில் பாரசிவர் செய்யும்படி கல்வெட்டிக் கொடுத்துள்ளது போல் சித்தலிங்கமடத்திலும் பாரசிவர் செய்வதாக ஒப்புக்கொண்டுக் கல்வெட்டிக் கொடுத்துள்ளனர். பாரசிவர் என்பவர்கள் சிவன் கோயிலில் பூசை செய்பவர்களில் ஒரு பிரிவினர். மேற்கூறப்பட்ட ஊர்களில் மேற்கொள்ளப்படும் பூசை வழிபாடுகளையே இவ்வூரிலும் பின்பற்றுவோம் என்று உறுதி செய்து கொடுத்துள்ளனர். எனவே,

திருவதிகை, திருத்தவத்துறை, திருவெண்ணைநல்லூர், திருவாமாத்தூர், திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) மற்றும் சித்தலிங்கமடம் ஆகிய ஊர் சிவன் கோயில்களில் ஒரே மாதிரியான பூசை வழிபாடுகள் நடைபெற்றுள்ளது என்பதை காண்கிறோம். திருப்புலிபகவர் வழிபாட்டுக்கு திருப்பலிப்புறம் பலிப்பட்டிக்கு மருதூர் கால்வாயிலிருந்து நீர் பெறப்பட்டுள்ளது. கி.பி. 1274-இல் ஆடவல்லார்க்கு சிறுகாலைச் சந்தி வழிபாடு செய்வதற்கும் அமுதுபடிக்கும், வெஞ்சனத்துக்கும் நிலம் வழங்கப்பட்டுள்ளது. திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டுக்காக திருமஞ்சனத்துக்கும், திருமாலை சாத்துவதற்கும், அமுதுபடிகள் செய்வதற்கும் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

திருப்பள்ளியெழுச்சி தினசரி சந்தி ஆகியவற்றின்போது வாத்தியங்கள் இசைப்பதற்கும் பொன் கொடுக்கப்பட்டுள்ளது. திருப்பள்ளி எழுச்சிக்கும், இறைவன் நீராட்டலுக்கு திருமஞ்சன குடம் அஞ்சுக்கும், அமுதுபடிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

முதலாம் இராசராசன் ஆட்சிக்காலத்தில் ஆடவல்லார்க்கு (நடராசர்) சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றுள்ளது. மாறவர்மன் திருபுவன வீரபாண்டியன் ஆட்சியின்போது அழகிய திருச்சிற்றம்பலமுடையார் திருமேனி அர்த்தசாம வழிபாட்டுக்கும் (இரவு), திருப்பள்ளி எழுச்சி, திருவமுதுபடி செய்து சிறப்பு பூசைகள் செய்யப்பட்டுள்ளன.

இரண்டாம் இராசராசன் ஆட்சியின்போது க்ஷேத்திரபாலப் பிள்ளையாரை (பைரவர்) பிரதிட்டை செய்து வழிபாட்டுக்கும் சந்தி அமுதுக்கும் கொடையளிக்கப்பட்டுள்ளது.

திருப்புலிபகவர் இறைவன் அமாவாசை தினத்தன்று எழுந்தருளும்போது திருமந்திரபோனகம், திருவமுதுரிசி ஆகியவை செய்து வழிபட்டுள்ளனர்.

மாறவர்மன் விக்கிரமபாண்டியன் காலத்தில் திருப்பள்ளி எழுச்சி வழிபாடும் இரண்டாம் இராசராசன் ஆட்சிக்காலத்தில் திருப்புலிபகவர் வழிபாட்டுக்கு அமுதுபடி செய்யவும் நிலம் வழங்கப்பட்டுள்ளது. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சியின் போது ஆளுடையபிள்ளையார் என்னும் திருஞானசம்பந்தருர் திருமேனிக்கு வழிபாடு மற்றும் அமுது செய்யவும் 2000 காசுகள் வழங்கப்பட்டுள்ளன.

திருவிழாக்கள்

திருப்புலிபகவர்க்கு வைகாசி மாதம் திருவிழா நடத்துவதற்காக முதல் குலோத்துங்கசோழன் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1118-19) கங்கைகொண்ட சோழ வளநாட்டுத் திருமுனைப்பாடி ஏமப்பேற்றூர் நாட்டுச் செம்மாற்றூரைச் சேர்ந்தவர்கள் நிலம் விற்றுக் கொடுத்துள்ளனர்.

விக்கிரம சோழனின் ஆட்சியின்போது (கி.பி. 1121-22) நாயற்றுகிழமைதோறும் இறைவன் எழுந்தருளும்போது சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் சிறுகாலை சந்தியும், அமுதுபடியும் செய்யப்பட்டுள்ளது.

ஆடவல்லார்க்கு மார்கழி மாதம் திருவாதிரை திருவிழா

முதலாம் இராசராசனின் ஆட்சியின்போது (1012-13)-இல் ஆடவல்லார் செப்புத் திருமேனி செய்து கொடுக்கப்பட்டு மார்கழி மாதம் திருவாதிரை நாள் திருவிழா நடத்தவும், திருநந்தா விளக்கெரிக்கவும் 25 கழஞ்சு பொன் மற்றும் நிலம் பெற்றுக் கொண்டு கோயிலுடையார்கள் ஒப்புதலும் அளித்துள்ளனர்.

புரட்டாசித் திருநாள்

இராசகேசரிவர்மன் வீரராசேந்திர சோழன் (மூன்றாம் குலோத்துங்கன்) ஆட்சிக்காலத்தில் மலையமான் ராஜகம்பீர சேதிராயன் என்பவன் திருப்புலிபகவ நாயனார்க்கு புரட்டாதி

திருநாள் நடத்துவதற்கு இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்களிலிருந்து வரும் சிறுபாடி காவல் என்னும் காவல் வரியை மட்டும் தவிர்த்து ஏனைய வரிகளையும் வழங்கியுள்ளான்.

திருப்புலிபகவ நாயனார்க்கு அங்கவைத்தியர் சமுதாயத்தில் இருந்த கூத்த பெருமாள் என்பவன் உருவாக்கின சந்திக்கும் திருநாளுக்கும் வரிகள் கொடுக்கப்பட்டுள்ளது. கோயிலைச் சுற்றியுள்ள திருமடைவிளாகத்தில் வசித்து வந்த குடிமக்களிடம் இருந்து வசூலிக்கப்பட்ட அனைத்து வரிகளும் இன்னாயனார் கோயில் தானத்தார்க்குக் கொடையாகக் கொடுக்கப் பட்டுள்ளன.

அமுதுபடிகள்

நெய், அடைக்காய் (பாக்கு), வெற்றிலை, உப்பு, தயிர், காய்கறிகள் மிளகு ஆகியவை வழிபாட்டிற்காக அளிக்கப் பட்டுள்ளன. இப்பொருட்களின் அளவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இசைக்கருவிகள்

கோயிலில் நடைபெறும் வழிபாட்டின்போது சேகண்டி அடித்தல், காளம் ஊதுதல் ஆகிய இசைக்கருவிகள் இசைக்கப்பட்டுள்ளன. சேகண்டி ஒன்றும், காளம் இரண்டும், தனிக்காளம் ஒன்று பயன்படுத்திட பொன் கொடையாகக் கொடுக்கப்பட்டது. நீலவிசாலாட்சி அம்மன் கோயில் மகாமண்டபத்தில் சேகண்டி இன்றும் வைக்கப்பட்டுள்ளது.

நந்தவனம்

பரகேசரிவர்மன் இரண்டாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1153) ராசராச வளநாட்டுப் பெண்ணை வடகரை வாணகோப்பாடி செங்குன்ற நாட்டு பிரம்மதேயமான மணலூரான (கல்யாண மஹாதேவி சதுர்வேதிமங்கலத்தை) சேர்ந்த மத்யஸ்தன் திருவகத்தி பழிப்பிலி என்பவன் திருப்புலிபகவ தேவர்க்கு திருப்பள்ளித்தாமம் (பூ மாலைகள்) சாத்துவதற்கு

திருநந்தவனம் ஒன்றினை உருவாக்கி பூந்தோட்டம், மரங்கள், செடிகள் ஆகியன அமைக்கவும் ஏற்பாடு செய்துள்ளான்.

சடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1263) திருமஞ்சனமும் பண்ணி திருச்சுற்றாலை புல்லும் தெத்தி சுத்தம் செய்து (நந்தவனம்) கொடுப்பதற்காகக் கைக்கோளர்கள் காசுகள் கொடுத்துள்ளனர்.

செப்பேடுகள்

எழுத்துகளை கல்லில் மட்டும் பொறிக்காமல் செப்பேடுகளிலும் பொறித்துள்ளனர் என்பது இங்குள்ள கல்வெட்டுகளின் வாயிலாக அறியப்படுகிறது. கோனேரின்மை கொண்டான் சுந்தரபாண்டியனின் இரண்டு கல்வெட்டுகளிலும் இவ்வோலை பிடிபாடாக கல்லிலும், செம்பிலும் வெட்டிக்கொண்டு என்ற கல்வெட்டுக் குறிப்புகள் காணப்படுகின்றன. எனவே இந்த இரண்டு கல்வெட்டுகளும் கல்லில் வெட்டுவதோடு மட்டுமல்லாமல் செப்பேடுகளிலும் எழுதி வைக்கப்பட்டுள்ளன. சுந்தரபாண்டியன், காலிங்கராயன், நெட்டுருடையான், துஞ்சலூருடையான், பல்லவரையர் ஆகிய அதிகாரிகள் இந்த ஆவணத்தில் ஒப்பமிட்டுள்ளனர்.

பெண்களின் கொடைகள்

சித்தலிங்கமடம் திருப்புலிபகவர் கோயிலுக்கு பெண்களும் கொடையளித்துள்ளனர். மிலாடுடையார் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் கொடுத்தக் கொடைகளை (மிலாடு எனும் தலைப்பில்) தனியாக பட்டியலிட்டு கொடுக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் இதர பெண்கள் கொடுத்தக் கொடைகளை இங்கு காண்போம்.

பிராமணி காளி சோமாஸி

ஆதரயன் கேசுவன் மாறன் என்பவனின் மனைவியானபிராமணி காளி சோமாஸி என்பவள் திருப்புலிபகவர்க்கு முதலாம் இராசராசசோழனின் 28-ஆவது

ஆட்சியாண்டில் (கி.பி.1012-13) ஆடவல்லார் திருவிழாவுக்கும், திருநந்தா விளக்குக்கும், அமுதுபடிக்கும் 25 கழஞ்சு பொன் கொடுத்துள்ளாள்.

மேலும், இவள் இராசேந்திரனின் 5-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1017) திருப்புலிபகவர்க்கு விளக்கெரிக்க நந்தாவிளக்கு ஒன்றுக்கு 10 கழஞ்சு பொன் கொடுத்துள்ளாள். ஆட்கொண்டான் சானி என்னும் பிராமணப் பெண் க்ஷேத்திரபாலப்பிள்ளையார் உருவினை (பைரவர்) எழுந்தருளச் செய்து பிரதிட்டையும் செய்து அமுதுபடிக்கும், வெஞ்சனங் களுக்கும் 16 பொற்காசுகள் கொடுத்துள்ளாள். இரண்டாம் இராசராசனின் ஆட்சியின்போது (கி.பி.1154) இக்கொடை கொடுக்கப்பட்டது. இவள் பிராமணன் காஸ்யபன் பெரியாண்டான் என்பவனின் மனைவியாவாள்.

தேவரடியாள் வாகீசநங்கை என்பவள் 50 பலம் எடை கொண்ட மணி ஒன்றினை இக்கோயிலுக்குத் தானமாகக் கொடுத்துள்ளாள். இடப்பாகங்கொண்டாள் மகளான தேவரடியாள் வம்பு இழுத்தாள் என்பாள் திருப்புலிபகவர் கோயிலில் தூண் ஒன்றினைச் செய்து கொடுத்துள்ளாள்.

மேலும், தில்லைநாலாயிர மாணிக்கம் என்பவளும் திருப்புலிபகவர் கோயிலுக்கு தூண் ஒன்று செய்து கொடுத்துள்ளாள். அதேபோன்று எண்ணை வணிகக் குடும்பத்தைச் சார்ந்த அடைக்கலந் தெள்ளாள் என்னும் பெண் ஒருத்தியும் தூண் ஒன்றினை அளித்துள்ளாள்.

அக்காலச் சமுதாயத்தில் பிராமணர், வணிகர், தேவரடியார் பிரிவுப் பெண்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றிருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

கலைச்சொற்கள்

1.	அன்னுவயம்	=	வம்சத்தினர்
2.	திருப்பலிப்புறம்	=	வழிபாடு
3.	சேகண்டி	=	அடித்தல் (வாத்தியக் கருவி)
4.	காளம்	=	ஊதுதல் (வாத்தியக் கருவி)
5.	கல்லில் செம்பில் வெட்டி	=	கல்லிலும், செம்பிலும் எழுதுதல்
6.	திருமுகம்	=	மன்னனின் நேரடி ஆணை
7.	திருமந்திர ஓலை	=	அரசனது ஆணையை எழுதுபவர்
8.	தேவகன்மிகள்	=	கோயில் செயல் அதிகாரிகள்
9.	கண்காணி செய்வார்	=	மேற்பார்வை செய்பவர்கள்
10.	மத்யஸ்தன்	=	நடுவர்
11.	நான்கு சக்கரத்து	=	நான்கு பக்கம்
12.	நாதியார்	=	நாத்தனார்
14.	வாணியள்	=	எண்ணை வாணிகக் குடும்பத்தைச் சேர்ந்தவள்

வ. எண்	காலம்	மன்னர்	கல்வெட்டு குறிப்பு	கொடுத்தவர்	கொடை	கல்வெட்டு குறிப்பு, கொடையின் தன்மை
1.	கி.பி. 913-14	முதலாம் பராந்தகன்	S.I.I.Vol. XXVI No.411	மிலாடுடையான் நாட்டான் சித்தவடவன்	இரண்டு நுந்தா விளக்குக்கு 10 கழஞ்சு பொன்	திருப்புலிபகவர் கோயிலில் விளக்கெரிக்க இரண்டு நுந்தா விளக்குக்கு 10 கழஞ்சு பொன் மிலாடுடையான் நாட்டான் சித்தவடவன் என்பவனால் கொடுக்கப்பட்டுள்ளது.
2.	கி.பி. 928-29	முதலாம் பராந்தகன்	S.I.I.Vol. XXVI No.397	மருதூரார்	நீர்ப்பாசனம்	திருப்புலிபகவர் கோயிலுக்கு திருப்பலிபுறமான பலிப்பட்டிக்கு மருதூர் வாய்க்கால் வழியே ஐந்தில் ஒரு பங்கு நீர் வர ஏற்பாடு செய்துள்ளனர். இறைவான் குடி கிழவனிடத்தில் 75 கழஞ்சு பொன் பெற்றுக் கொண்டு தண்ணீர் விட்டனர்.
3.	கி.பி.931	முதலாம் பராந்தகன்	S.I.I.Vol. XXVI No.408	அம்பலவன் ஐய்யாறனான இறைவான்குடி கிழவன்	நிலம்	தினந்தோறும் மூன்று வேளையும் இன்னிசை இயம்புவதற்கு நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலத்திற்கான நான்கு எல்லைகள் சொல்லப்பட்டுள்ளது.
4.	கி.பி. 943-44	கன்னர தேவன்	S.I.I.Vol. XXVI No.396	சபையினர்	நிலம்	திருப்புலிபகவர் கோயிலில் இரவு வேளையும் அமுது செய்தருளுவதற்கு கறியமுது, அடைக்காயமுது , நெய்யமுது, பாக்கு, வெற்றிலை ஆகியவற்றிற்கு நிலம்

						கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. சில்லிறை, எச்சோறு முதலான வரிகள் நீக்கி கொடுக்கப்பட்டுள்ளது.
5.	கி.பி.957	கன்னர தேவன்	S.I.I.Vol. XXV No.391	சபையினர்	நிலம் ¼ செய் (கால் செய்)	திருப்புலிபகவர் கோயில் திருவிழாவில் வீதிஉலா ஊர்வலத்தின்போது சுவாமி முன் நின்று நடனமாடுவதற்கு திருப்புலிபகவர் நிருத்த விடங்கி என்ற ஆடல் மகளிருக்கு 'நிருத்த போகமாக' தென்பிடாகை கொடியூரில் நிலம் வழங்கப்பட்டுள்ளச் செய்தி.
6.	கி.பி. 962-63	கன்னர தேவன்	S.I.I.Vol. XXV No.406	திருநாவுக் கரைசியென்	5 கழஞ்சு பொன்	திருப்பள்ளி எழுச்சியின்போது செகண்டிகை, காளம் இரண்டு தனிக்காளம் ஒன்று ஆகியன ஒரு சந்தியின்போது மேளம் கொட்டவும் இன்னிசை இயம்பவும் 5 கழஞ்சு பொன் கொடுக்கப்பட்டுள்ளது.
7.	கி.பி. 988-89	முதலாம் இராசராசன்	S.I.I.Vol. XXV No.412	மிலாடுடையான்	இரவு நேரத்தில் 12 சந்தி விளக் கெரிக்க 10 கழஞ்சு பொன்	திருப்புலிபகவர் கோயிலில் இரவு சந்திக்கு 12 விளக்கெரிக்க 10 கழஞ்சு பொன் வழங்கப்பட்டச் செய்தி.

8.	கி.பி. 1012-13	முதலாம் இராசராசன்	S.I.I.Vol. XXVI No.413	பிராமணி காளிசோமாசி	ஆடவல்லார் திருமேனி 25 கழஞ்சு பொன், நிலம்	ஆடவல்லார் (நடராசர்) செப்புத்திருமேனி செய்து கொடுக்கப்பட்டு வழிபாட்டிற்கும் திருவிழாவுக்கும் திருநந்தா விளக்குக்கும் அமுது செய்தருளுவதற்கும் 25 கழஞ்சு பொன் மற்றும் நிலம் கொடுக்கப் பட்டுள்ளது. காளி சோமாஸி என்னும் பிராமணப் பெண் ஆத்ரயன் கேசுவன் மாறன் என்பவனின் மனைவி இக்கொடையை அளித்துள்ளாள்.
9.	கி.பி.1086	முதலாம் குலோத் துங்கன்	S.I.I.Vol. XXVI No.389	முத்திரத்தாந் கங்கை கொண்டான் பரசமையகோளரி	தேவதானம் கொண்டாழி என்னும் செய் பழம் படி நிலம் ஐந்து	ஹாரத்வாஜ திருநீலகண்டனும், சூர்யதேவனும் காளிதாசனும் விற்ற நிலம் ஆகும். சில்லறை அமஞ்சு ஆற்றங்கால் வெட்டிமுடையாள் ஆகிய வரிகளை சபையே செலுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளது.
10.	கி.பி. 1079-80	முதலாம் குலோத் துங்கன்	S.I.I.Vol. XXVI No.440	மலையமான் சதிரன் மலைய னான ராஜேந்திர சோழ மலையமான்	இரண்டு நுந்தா விளக்குக்கு 64 பசுக்கள்	மலையமான் சதிரன் மலையன் என்கிற ராசேந்திர சோழ மலையமான் என்பவன் திருப்புலிபகவர் கோயிலில் இரண்டு நுந்தா விளக்கெரிக்க 64 பசுக்களைத் தானமாகக் கொடுத்துள்ளான்.
11.	கி.பி. 1100-01	முதலாம் குலோத் துங்கன்	S.I.I.Vol. XXVI No.407	மலையமான் ராஜேந்திர சோழ வாண குலராஜன்	1250 குழி நிலம் பரிக்கலம்	1250 குழி நிலம் திருப்புலிபகவர் இறைவன் திருப்பள்ளி எழுச்சிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. சந்தி அமுது செய்தருளுவதற்கு உணவு படைக்கும்

						பரிக்கலம் ஒன்றும் தானமாக மலையமான் ராஜேந்திர சோழ வாணகுல ராஜனால் கொடுக்கப்பட்டச் செய்தி.
12.	கி.பி. 1118-19	முதலாம் குலோத் துங்கன்	S.I.I.Vol. XXV No.392	சிவ பிராம ணன் பாரத் வாஜி பஞ்சனதி பெரியான்	ஒரு நந்தா விளக்கெரிக்க 32 பசுக்களுக் காக நற்காசு 10	பிரார்த்தனை செய்து ஆண்பிள்ளை பெறுவதற்காக திருப்புலிபகவர்க்கு நந்தா விளக்கு எரிக்க பொற்காசுகளைக் கொடுத்துள்ள செய்தி. அதை இக்கோயில் சிவபிராமணர்கள் பெற்றுக்கொண்டு விளக்கெரிக்கச் சம்மதித்துள்ளனர்.
13.	கி.பி. 1118-19	முதலாம் குலோத் துங்கன்	S.I.I.Vol. XXV No.402	கங்கைகொண்ட சோழ வளநாட்டு திருமுனைப்பாடி ஏமப்பேற்றூர் செம்மாற்றூர் ஊரார்	நிலம்	திருப்புலிபகவர்கோயில் வைகாசி திருவிழாவின்போது பயன்படுத்த நிலம் விற்றுக் கொடுக்கப்பட்ட செய்தி.
14.	கி.பி. 1118-19	முதலாம் குலோத் துங்கன்	S.I.I.Vol. XXV No.403	பூவன் மருத னான ஆழ்வா னாங்கார மலையமான்	1650 குழி நிலம்	திருப்பள்ளி எழுச்சியின்போது 1650 குழி நிலங்களை 8 சந்தி விளக்குகள் எரிக்கவும், அமுது படைக்கவும் பூவன் மருதனான ஆழ்வானாங்கார மலைய மான் 1650 குழி நிலங்களை கொடுத் துள்ளான். இதற்காக 17 பொற்காசுகளை சபையாரிடம் கொடுத்தச் செய்தி.

15.	கி.பி. 1100-01	முதலாம் குலோத் துங்கன்	S.I.I.Vol. XXVI No.409	சூர்யதேவி நின்றதவஞ் செய்தாள்	2500 குழி நிலம்	சூர்யதேவி ராசேந்திர சேதிராயனின் மனைவியாவாள். ஆண்டார்களுக்கு அமுது செய்தருளுவதற்காக மடப்புறமாக இறையிலி நிலம் கொடுக்கப்பட்டது. இவை ஏற்கனவே தோட்டப் பயிர் செய்வதற்கு பிராமணர் பாரத்வாஜ் குமாரசுவாமியிடம் பெற்ற நிலத்திற்கு நத்தத்துக்கு கீழ்பாற்கெல்லையில் உள்ளது.
16.	கி.பி. 1119-20	விக்கிரம சோழன்	S.I.I.Vol. XXVI No.429	நீலிசெங்கி	500 குழி நிலம்	திருப்புலிபகவர்க்கு 500 குழி நிலங்களை விலைக்கு வாங்கி நீலிசெங்கி மலையமான் என்கிற திருக்கலை மருந்தன் ஆழ்வானங்ககார மலையமான் என்ற அதிகாரியின் மனைவி தானமாகக் கொடுத்துள்ளாள்.
17.	கி.பி. 1119-20	விக்கிரம சோழன்	S.I.I.Vol. XXVI No.399	சதிரி	பொற் காசுகள்	திருப்புலிபகவர்க்கு விளக்கெரிக்க சதிரி என்பவள் பொற்காசுகளைத் தானமாகக் கொடுத்துள்ளாள். இவள் தில்லை நாயகன் தேவர் கண்டன் அகமுடையான் மலையனான இராசேந்திர சோழ சேதிராயன் என்பவனின் மகளாவாள்.
18.	கி.பி. 1121	விக்கிரம சோழன்	S.I.I.Vol. XXVI No.404	சபையினர்	700 குழி நிலம்	ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை சந்திக்கு எழுந்தருளும்போது அமுது

						செய்தருளவும் திருவிளக்கெண்ணை வைக்கவும் 700 குழி நிலம் சபையினரால் கொடுக்கப்பட்டது. இதற்கு ஆடவல்லான் வாசுதேவன் முடிகொண்ட சோழன் மூவேந்த வேளான் என்னும் அதிகாரி மத்தியஸ்தனாக இருந்துள்ளான்.
19.	கி.பி.1123	விக்கிரம சோழன்	S.I.I.Vol. XXVI No.424	பரத்வாஜி குமாரசாமி திருப்புலிபகவன் ஆத்ரயன் திருவண்ணா மலை உடையான்	1500 குழி நிலம் 15 அன்றாடு நற்காசு	திருப்புலிபகவர் கோயிலில் ஆதிதாச சண்டேஸ்வர தேவர்க்கு 1500 குழி நிலத்தினை 15 அன்றாடு நற்காசு பெற்றுக்கொண்டு விற்றுக் கொடுக்கப்பட்டச் செய்தி.
20.	கி.பி.1123	விக்கிரம சோழன்	S.I.I.Vol. XXVI No.426	பரத்வாஜி நக்கபிரான் திருப்புலிபகவன் காஸ்யபன் திருவண்ணாமலை குமார சுவாமி	455 குழி நிலம் விற்றுக் கொடுக்கப் பட்டது	திருப்புலிபகவர் கோயிலில் ஆதி சண்டேசுவர தேவர்க்கு 455 குழி நிலம் 4½ அன்றாடு நற்காசுக்கு இவர்களால் விற்றுக் கொடுக்கப்பட்டது பற்றிக் கூறுகிறது.
21.	கி.பி.1124	விக்கிரம சோழன்	S.I.I.Vol. XXVI No.444	செம்மாறுடை யான் சோழன் விச்சாதிரந்	சந்திவிளக்கு ஒன்று	கங்கைகொண்ட சோழ வளநாட்டு திருமுனைப்பாடி ஏமப்பேரூர் நாட்டைச் சேர்ந்த விச்சாதிரன். இவனிடமிருந்து விளக்குக்கு பணம் வாங்கிக் கொண்டு சிவபிராமணர்கள் ஒப்பந்தம் செய்து

						கொண்டனர். புலியந் சிவபக்தனான நானூற்றுவ பட்டனும், பாரத்வாஜி பொற்கோயில் நம்பியும் இக்கோயில் சிவப்பிராமணர்கள் ஆவர்.
22.	கி.பி.1130	விக்கிரம சோழன்	S.I.I.Vol. XXVI No.393	கயிறூர் பிச்சன் அரைசன்	ஒரு நந்தா விளக்குக்கு 7/8 கழஞ்சு பொன் 80 பலம் எடை கொண்ட மெட்டல்	கயிறூர் பிச்சன் அரைசன் திருமுனைப் பாடி ஏமூர் நாட்டு ஆனத்தூர் சிறுவெண்ணை நல்லூரான். ஒரு நந்தா விளக்குக்கு 718 கழஞ்சு பொன் கொடுத்துள்ளான். மேலும் 80 பலம் எடை கொண்ட உலோகம் கொடுத்துள்ளான்.
23.	கி.பி. 1132-33	விக்கிரம சோழன்	S.I.I.Vol. XXVI No.422	ஆளவந்தாள்	2 வேலி நிலம்	ஆளவந்தாள் தன் தாய் சூர்யதேவியின் நன்மை கருதி பள்ளியறை நாச்சியார் கோயில் கட்டவும் மற்ற தேவைகளுக் காகவும் இரண்டு வேலி நிலம் கொடுத் தாள். இவள் மலையமான் இராமன் சூரியனான இராசேந்திர சோழ மலைய குலராஜனின் மனைவியாவாள்.
24.	கி.பி.1135	இரண்டாம் குலோத்து கன்	S.I.I.Vol. XXVI No.425	அரசன் ஆணையினால் கொடுக்கப்பட்டது	10 வேலி நிலம்	கூடலில் ஆதர்பாடி என்கிற கம்மா வானவன் மாதிரிப்புறம் ஊரில் திருப்புலிபகவர் திருப்படிமாற்று மற்றும் தேவகன்மிகளிடம் கொடுக்கப்பட்டது.

25.	கி.பி.1143	இரண்டாம் குலோத்து கன்	S.I.I.Vol. XXVI No.427	ஈஸ்வரதேவன் கௌசிகன் ஆராவமுது பத்மநாபந்	10 வேலி நிலம்	ஈஸ்வரதேவன், பத்மநாபன் ஆகிய இருவரும் தலா இரண்டரை, இரண்டரை காசு என திருப்புலிபகவர் கோயிலில் விளக்கெரிப்பதற்கு கொடுத்துள்ளனர்.
26.	கி.பி.1145	இரண்டாம் குலோத்து கன்	S.I.I.Vol. XXVI No.423	அரசன் ஆணையினால் கூடலில் ஆதன் பாடியை சேர்ந்தவர்	மெய்யூரான நல்லாவூர் மற்றொரு பெயர் சிவபாதசேகர நல்லூர்	சிவபாதசேகர நல்லூர் கொடையாகக் கொடுக்கப்பட்டது. இங்கிருந்து வரும் 155½ மாடை கொண்டு கோயிலில் உள்ள தேவகன்மிகள், கண்காணி செய்வார்களுக்கும் கோயிலுக்கு நிமந்தங்களுக்கும் கொடுக்கப்பட்டது. திருமந்திரவோலை அனபாய மூவேந்த வேளான் என்பானால் எழுதப்பட்டது. மலையப்பராயன் கையெழுத் திட்டுள்ளான்.
27.	கி.பி.1153	இரண்டாம் இராசராசன்	S.I.I.Vol. XXVI No.430	மணலூரு டையான் திருவகத்தி பழிப்பிலியன்	நிலம்	கல்யாணமாதேவி சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த (மணலூரில்) மத்யஸ்தனாக இருந்த இவன் சிற்றிங்கூர் ஆண்டபிள்ளை. திருப்புலிபகவர் உள்ளிட்டவர்களிடம் நிலம் விலைக்கு வாங்கி திருநந்தவனம் அமைக்க ஏற்பாடு செய்துள்ளான்.

28.	கி.பி.1154	இரண்டாம் இராச ராசன்	S.I.I.Vol. XXVI No.428	பிராமணி ஆட்கொண்டான் சானி	க்ஷேத்திர பாலபிள்ளை யாரை எழுந்தருளு வித்து திரு பிரதிஷ்டை யும் பண்ணி 16 காசுகள்	ஆட்கொண்டான் சானி என்னும் பிராமணப் பெண்மணி க்ஷேத்திரபால பிள்ளையார்க்கு அமுது செய்திடவேண்டி 18 காசுகள் அளித்து அதன் வட்டியிலிருந்து செய்திட வழிவகை செய்துள்ளாள்.
29.	கி.பி. 1164-65	இரண்டாம் இராச ராசன்	S.I.I.Vol. XXVI No.432	மலையமான் அத்திமல்லன் சொக்கப் பெருமாள்	4 வேலி நிலம்	திருப்புலிபகவர்க்கு அமுது செய்தருள மலையமான் அத்திமல்லன் சொக்கப்பெருமாள் என்பவன் 4 வேலி நிலம் கொடுத்துள்ளான்.
30.	கி.பி. 1173-74	முதல் இராசாதி ராசன் தேவன்	S.I.I.Vol. XXVI No.445	ஆண்டார் அரசுக்கடியார்	தண்ணீர்	மருதூர் கால்வாயிலிருந்து நீர் வேண்டி சிறிய கால்வாய் குடக்கால் வெட்டு வித்தார். இக்கால்வாய் 'திருப்புலிபகவ நூற்றுக்கால்' என்று அழைக்கப் பட்டுள்ளது.
31.	கி.பி.1177	இராசாதி ராச தேவன்	S.I.I.Vol. XXVI No.448	கண்ணன் சூரனான ஆகார சூர மலையமான்	உலோகப் பானை	திருப்புலிபகவர் கோயிலில் அமுது செய் தருளுவதற்காக உலோகப் பானை வழங்கப்பட்டது.

32.	கி.பி. 1183-84	வீர ராசேந் திரன் (குலோ.III)	S.I.I.Vol. XXVI No.434	ஏழிசை மோகநான ஜநநாத கச்சிராயன்	வரிகள்	விக்கிரமசோழ நல்லூர், திருமடை விளாகமும், திருமடை விளாகத்து நான்கு பக்கமும், கீழிறை பாட்டமும், தறி இறை தட்டார்பாட்டமும் கொடுக்கப்பட்டுள்ளது.
33.	கி.பி. 1183-84	வீர ராசேந் திரன் (குலோ.III)	S.I.I.Vol. XXVI No.435	மலையமான் சொக்கப் பெருமாள் பொன் பரப்பினான்	வரிகள்	புரட்டாதி திருநாள் திருப்புலிபகவர் எழுந்தருளுகைக்கு நன்செய், புன்செய் நிலங்(தேவதானம்)களிலிருந்து வரும் வருவாய்கள் அனைத்தும் குறிப்பாக சிறுபாடிக்காவல் வரிகள் தவிர்த்து ஏனைய வரிகள் கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.
34.	கி.பி.1183	வீர ராசேந் திரன் (குலோ.III)	S.I.I.Vol. XXVI No.436	கூத்தன் பனையனான பொன் பரப்பின மலையமான்	(இரண்டு) விளக்கெரிக்க நிலம் வழங்கி யுள்ளான். (700 குழி நிலம்)	திருப்புலிபகவர் கோயிலில் விளக்கெரிக்க கூத்தன் பனையனான பொன் பரப்பின மலையமான் தலைவன் ராச கம்பீர சேதிராயன் நன்மை கருதி இரண்டு விளக்குக்கு 700 குழி நிலம் ¼ (கால் கழஞ்சு) பொன் பெற்று சபை விற்றுக் கொடுத்தது. சபை 700 குழி நிலம் பெற்று இரண்டு விளக்குகள் எரிக்க ஒப்புக் கொண்டது.

35.	கி.பி.1186	வீர ராசேந் திரன் (குலோ.III)	S.I.I.Vol. XXVI No.421	மலையமான் சூரியனீ ரேற்றான் எதிரிகளாயினான ராசராசகொடை மலையகுல ராஜன்	5 வேலி நிலம்	திருப்புலிபகவர் கோயிலில் இறைவன் அர்த்தசாமத்தில் எழுந்தருளும்போதும், திருப்பள்ளி எழுச்சியின்போதும் அமுதுபடி வழங்குவதற்கு இந்த நிலம் கொடுக்கப்பட்டது. இவை ஏற்கனவே தேவதானமாக வழங்கப்பட்ட நிலத்தில் உள்ளது. பழந்தேவதானம் நீக்கி வழங்கப்பட்டது. நிலத்தைச் சுற்றியுள்ள நான்கு எல்லைகளும் குறிப்பிடப் பட்டுள்ளது.
36.	கி.பி. 1212-13	திருபுவன வீரதேவற்; (குலோ.III)	S.I.I.Vol. XXVI No.437	சிவதவனப் பெருமான் வாமனபட்டன் பிரம்மராயந்	வெண் கலமும் தராவும் கூடின குத்து விளக்கு, வெண்கல மணி, பித்தளை தூங்கல், திப்பாத்திரம் (பித்தளை)	இந்த கொடைகள் இவ்வூர் தேவரடியார் களான தேவரடியாள் பெற்றாள் மகள் சோழிய நாச்சியான பொன்னார் திருவடி மாணிக்கத்துக்கும் இவள் மகள் ஆளவந்த பிள்ளையான பிராணத் தியாகி நங்கைக்கும் ஆளுடையார் திருப்புலிபகவதேவற்காக கொடுக்கப் பட்டது. பாலையூரான இராசநாராயண சருப்பேதிமங்கலத்து காசிவன் ஆதிபுராணன் ஆட்கொண்டான் பட்டன் மகன் சிவதனப்பெருமாள் வாமனபட்டன் பிரம்மராயன் தானமளித்துள்ளான்.

37.	கி.பி. 988	ராஜகேசரி (முதலாம் ராசராசன்)	S.I.I.Vol. XII No.41	மலாடுடையான் நாட்டான் சித்தவடவன்	திருநந்தா விளக்கு ஒன்று	மலாடுடையான் நாட்டான் சித்தவடவன் என்பவன் திருநந்தா விளக்கு ஒன்று திருப்புலிபகவர் கோயிலில் திருநந்தா விளக்கு எரிப்பதற்கு தானமாக ஆடுகள் கொடுத்துள்ளான்.
38.	கி.பி.1016	பரகேசரி முதலாம் ராசேந்திரன்	S.I.I.Vol. XIX No.94	மலாடுடையான் ராமஹேந்திரன் ராசேந்திர சோழநென்	நிலம்	திருப்புலிபகவர் தேவர்க்கு திருமந்திர போனகம் செய்வதற்கு நிலம் தானமாகக் கொடுத்துள்ளான்.
39.	கி.பி. 5-ஆவது	பரகேசரி	S.I.I.Vol. XIX No.126	பிராமணி காளி சோமாஸி	திருநந்தா விளக்கு ஒன்று 10 கழஞ்சு பொன்	காளி சோமாஸி என்னும் பிராமணப் பெண் திருநுந்தா விளக்கு ஒன்றும், இரண்டு விளக்குகள் எரிப்பதற்கு 10 கழஞ்சு பொன்னும் கோயிலுடையார்கள் வசம் கொடுத்துள்ளாள்.
40.	கி.பி. 7-ஆவது	பரகேசரி	S.I.I.Vol. XIX No.182	வரகூர்க் கோட்டமுடையார் நம்பிரான் அடிகள் ஆச்சபிடாரி	10 காசு இரண்டு பங்கு	திருப்புலிபகவர் கோயிலுடையார்கள் வசம் நம்பிரான் அடிகள் பத்து காசின் மூலம் பெருக்கின தொகை இரண்டு மடங்காக ஆன இருபது காசுகளைக் கொடுத்துள்ளான்.
41.	கி.பி. 9-ஆவது	பரகேசரி	S.I.I.Vol. XIX No.227	திருவிக்கிரமந் நாராயணன்	எண்ணை 30 நாழி	வைமிகானாச பிரதிநிதி திருவிக்கிரமந் நாராயணன் என்பவன் திருப்புலிபகவர் கோயில் திருவிழா நடைபெறும் 7 நாட்களுக்கு விளக்கெரிக்க ஒவ்வொரு

						வருடமும் 30 நாழி எண்ணை வழங்கிட ஏற்பாடு செய்துள்ளான்.
42.	கி.பி. 10-ஆவது	பரகேசரி (முதலாம் ராசேந்திரன்)	S.I.I.Vol. XIX No.250	வடவன் ராசேந்திரன்	பணமும் நிலமும் 12 செப்பு கலசம், கெண்டிகை ஒன்று 3 கழஞ்சு பொன்	உத்திர, தட்சிண அயனங்களின் போது நீராட்டு விழா செய்யவும், அமுதுபடி செய்வதற்கும் 16 கழஞ்சு பொன் மூலதனம் செய்யப்பட்டதிலிருந்து வரும் வட்டியும், நிலமும் கொடுத்துள்ளான். மேலும் ஆசாரியன் ஒருவனுக்கு 12 செப்பு கலசமும், கெண்டிகையும் கொடுத்துள்ளான். இது ஊனமும் தேய்வும் (ஆண்டுகளில்) ஏற்பட்டால் அதற்கும் 3 கழஞ்சு பொன்னும் கொடுத்தச் செய்தியும் தெரிகிறது.
43.	கி.பி. 3-ஆவது	பரகேசரி	S.I.I.Vol. XIX No.47	-	நிலம்	திருப்புலிபகவர்க்கு திருவமுது செய்வதற்கு வலிவலம் ஊரிலிருந்த நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. திருநந்தா விளக்கு ஒன்று திருவமுதுபடிக்கும் ஆக இந்நிலம் கொடுக்கப்பட்டுள்ளது.
44.	கி.பி.1237	மூன்றாம் இராஜ ராஜன்	S.I.I.Vol.XXVI No.453	பள்ளிபட்டன் சோழனான பெரிங்கூர்ப் பேரயனென்	நிலம் விற்றுக் கொடுத்தான்	பெரியாந்பரயன் என்பவனுக்கு பள்ளிபட்டன் சோழன் நிலம் விற்றுக் கொடுத்துள்ள செய்தி.

45.	கி.பி.1263	சடாவர்மன் சுந்தர பாண்டியன்	S.I.I.Vol.XXVI No.439	கைக்கோளரில் ஒருவன்	2000 காசுகள்	திருப்புலிபகவர் கோயிலில் ஆளுடைய பிள்ளையார்க்கு அமுது செய்வதற்காக கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் அரிந்தவன் பல்லவரையன் என்பவனிடமிருந்து 2000 காசுகள் வழியாக வரும் வட்டி மூலம் அரிசி மற்றும் கறி முதலான திருமந்திரபோனகத்துக்கும், நீராட்டு விழா நடத்தவும், சுற்றிவரும் பகுதியில் திருச்சுற்றாலை சுத்தம் செய்வதற்கும் கொடுக்கப்பட்டுள்ளது.
46.	கி.பி.1274	மாறவர்மன் விக்கிரம பாண்டியன்	S.I.I.Vol.XXVI No.431	மதுரைக்கு வாய்ந்த பெருமாள் புரத்தை சேர்ந்த (மருதூர்) திருக் கோவிலூர் சாலிக நகரத்தார்	500 குழி நிலம்	திருப்புலிபகவர் கோயிலில் ஆடவல்லார்க்கு காலை வேளையில் அமுது செய்யவும், பூசைக்கும் பெருமாள் காணியாக திருக்கோவிலூர் சாலிக நகரத்தாரால் கொடுக்கப்பட்டுள்ளது.
47.	கி.பி.1274	மாறவர்மன் விக்கிரம பாண்டியன்	S.I.I.Vol.XXVI No.410	சிற்றிங்கூர் நகரத்தார்	1000 குழி நிலம்	திருப்புலிபகவர் கோயிலுக்கு திருப்பள்ளி எழுச்சி சந்தி வழிபாட்டிற்கான உணவு ஆகியவற்றிற்காக திருநாமத்துக் காணியாக நிலம் வழங்கப்பட்டுள்ளது.

48.	கி.பி.1374	மாறவர்மன் வீர பாண்டியன்	S.I.I.Vol.XXVI No.416	வணிகர் இன்னம்பர் தித்திக் காடுடையான்	35அன்றாடு நற்பணம் கொண்டு 1000 குழி நிலம்	திருப்புலிபகவர் கோயிலில் அழகிய திருச்சிற்றம்பலமுடையார்க்கு அமுது செய்யவும், திருவிளக்கு ஏற்றவும் இன்னம்பர் தித்திக்காடுடையான் என்னும் வணிகன் நிலம் தானமாகக் கொடுத்துள்ளான்.
49.	கி.பி.1348	மாறவர்மன் வீர பாண்டியன்	S.I.I.Vol.XXVI No.414	ஆதரயன் நாராயண பட்டன் மலைய பெருமாள் அருணகிரி பட்டன் தேவபிள்ளை	62அன்றாடு நற்பணத் துக்கு நிலம் விடப்பட்டது.	இந்த நிலம் திருப்புலிபகவர் கோயிலில் ஆதிதாச சண்டேசுரதேவர்க்கு பூசைக்காக விடப்பட்டது. நிலத்தின் எல்லைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கோப்பெருஞ்சிங்கன் கால்வாய் குறித்து இக்கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றுள்ளது.
50.	10-ஆவது	கோனேரின் மைகொண் டான் சுந்தர பாண்டியன்	S.I.I.Vol.XXVI No.415	கடலடைத் தான் உள்ளிட்ட கைக்கோளர்	வில்வலம் ஊர்	திருப்புலிபகவர் கோயில் தானத்தார்க்கு வில்வலம் என்னும் ஊர் தேவதான ஊராக கைக்கோளர்களால் கொடுக்கப் பட்டுள்ளது.
51.	11-ஆவது	கோனேரின் மைகொண் டான் திருபுவன சுந்தர பாண்டியன்	S.I.I.Vol.XXVI No.452	கோயில் தானத்தார்கள்	வரிகள்	திருப்புலிபகவ நாயனார் கோயிலில் அங்க வைத்தியரில் கூத்தபெருமாள் என்பவன் திருநாளுக்காக (விழாவுக்கு) திருமடைவிளாகத்தில் இருக்கும் குடிமக்களிடம் வசூலிக்கப்பட்ட தறிஇறை, செட்டியிறை முதலான வரிகள் யாவும்

						புரட்டாதி மாத முதல் வரியில் கழித்து திருமடைவிளாகம் தேவதான இறையிலியாகக் கொடுக்கப்பட்டது.
52.	சக 1329 (கி.பி.1407)	வீர தேவராய உடையார் பாண்டியன்	S.I.I.Vol.XXVI No.418	விநோத நல்லூர் சபையார்	நிலம்	திருப்புலிபகவநாயனார்க்கு திருநாமத்து காணியிலிருந்து விநோத நல்லூர்க்கு தண்ணீர் வர கால்வாய் வெட்டும்போது 1½ மா நிலம் சேதமானது. இதற்கு பதிலாக விநோத நல்லூரில் நிலம் திருப்பணி பற்றாக சபையினரால் கொடுக்கப்பட்டுள்ளது.
53.	சக 1393 கி.பி.1471	நரசிங்க தேவ மகா ராஜா	S.I.I.Vol.XXVI No.262/35	ஒடியன் கலபை அன்னமராசா	தங்கும் விடுதி	ஒடியன்கலபை என்பவன் திருபுலிபகவ நாயனர் கோயிலில் ஓய்வுபெறும் இடம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளான்.
54.	கி.பி.1513	கிருஷ்ண ராய மகாராயர்	S.I.I.Vol.XXVI No.447	மன்னாரி திருப்புலி பேரான்	திருநந்தா விளக்கு ஒன்றுக்கு 500 குழி நிலம்	திருப்புலிபேரான் என்பவன் ஒரு நந்தாவிளக்குக்கு 500 குழி நிலம் திருப்புலிபகவநல்லூரில் இறையிலியாகக் கொடுத்துள்ளான்.

55.	சக 1454 கி.பி.1532	அச்சுத தேவ மகாராயர்	S.I.I.Vol.XXVI No.264/35	ஊரார்	கோயிலான்பட்டு ஊர் தேவ தானம்	கோயிலான்பட்டு என்னும் ஊர் தேவ தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. திருப்புலிபகவநல்லூரில் அந்த நிலம் தாசன்கொல்லை என்று அழைக்கப் படுகிறது. கோயிலில் பழுது ஏற்பட்டால் அன்னம்ம ரெட்டியார், பொன்னம்பலவ நாதர் இவர்கள் அய்யன் சாவப்பையர், இளைய சகோதரன் ராமபத்தரையன் இவர்களின் ஆணையின்பேரில் செய்யவேண்டும்.
56.	சக 1485 கி.பி.1563	சதாசிவ மகாராயர்	S.I.I.Vol.XXVI No.261/35	-	தங்கும் இடம்	திருப்புலிபகவநல்லூருக்கு இடையில் தங்கும் இடம் ஒன்று கட்டப்பட்டது. கிருஷ்ண சமுத்திரம் என்று அழைக்கப்படும் மருதூரில் அக்கிரகாரம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அரசன், திருமலை ராஜாவின் அனுமதியின் பேரில் இது செய்யப்பட்டுள்ளது.
57.	Current பிரமதூத (1935)	அச்சுததேவ மகாராயர்	S.I.I.Vol.XXVI No.265/35	வையப்ப நாயக்கர்	தண்ணீர்	புதுப்பாளையம், இடையாறு, அக்கலி மங்கலம் கிராமங்களுக்கு தண்ணீர் வர கால்வாய் வெட்டி விடப்பட்டது, இந்த கிராம மக்கள் தண்ணீரைப் பயன்படுத்தவும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

நன்றியுரை

விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் திருக்கோவிலூர் வட்டத்தில் உள்ள சித்தலிங்கமடம் வரலாற்றினை ஆய்வு நூலாக எழுத அனுமதி தந்த தொல்லியல் துறை இயக்குநர் திருமிகு நடன. காசிநாதன் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சித்தலிங்கமடம் கிராமத்தில் வியாக்கரபாதீஸ்வரர் திருக்கோவிலில் அமையப்பெற்றுள்ள சுமார் 70-க்கும் மேற்பட்ட கல்வெட்டுகளையும், கோயில் சிற்பங்களையும். அதன் வரலாறுகளையும் கிராமத்தின் வரலாறுகளையும் ஆராய்ந்து அறிய தக்க உதவிகளையும் ஆதரவுகளையும் நல்கி எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய மதிப்பிற்குரிய திருக்கோயில் நிர்வாக அலுவலர் அவர்களுக்கும், ஊர் பெரியவர் முன்னாள் கிராம மணியம் மதிப்பிற்குரிய திரு. பச்சப்பிள்ளை அவர்களுக்கும், கோயில் குருக்கள் திரு. ராஜா குருக்கள் அவர்களுக்கும் மற்றும் கோயில் பணியாளர் திரு. குப்புசாமி அவர்களுக்கும் அங்காளம்மன் கோயில் பூசாரி திரு. மாணுவன் அவர்களுக்கும் மற்றும் ஊர் நண்பர்கள் பொது மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புகைப்படங்கள் எடுத்துத் தந்த என்னுடன் பயிற்சிபெறும் சகோதரர்கள் திரு. T. ஜீவா நடேசன் மற்றும் திரு. M.J. இளங்கோவன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பயிற்சியின்போது எனக்கு கல்வி அறிவு தந்து உதவிய துணை இயக்குநர், தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர்,

கல்வெட்டாய்வாளர்கள், அகழாய்வாளர், தொல்லியல் அலுவலர் குறிப்பாக வகுப்பு ஆசிரியர் உயர்திரு ராஜகோபால் அவர்களுக்கும் மற்ற அலுவலர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் தங்கிப்படித்த மகளிர் தொழிற்பயிற்சி விடுதிக் காப்பாளர் செல்வி திரு. ராஜலட்சுமி அவர்களுக்கும் மற்றும் விடுதி நண்பர்கள் செல்வி லட்சுமி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் என்னுடைய மனமுவந்த பாராட்டும், நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்பயிற்சிக்காகச் சென்னையில் தங்கிப் பயில ஏற்பட்ட செலவுகளை ஏற்றுக்கொண்டதுடன் ஊக்கம் தந்து இவ்வாய்வு நூலை எழுதி முடிக்கத் துணை நின்ற என் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. பிரசன்னா
கல்வெட்டுப் பயிற்சி மாணவி

துணை நின்ற நூல்கள்

1, சோமலே, 'தென் ஆர்க்காடு மாவட்டம்', 21-2 1963
2. தாமோதரன், கு. 'விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்ட வரலாறு', தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
3. புலவர். குப்புசாமி, சு. 'மலையமான்கள்'
4. புறம் - 99, 126, 174
5. குறுந்தொகை 312.
6. நற்றிணை - 320.
7. இராமசந்திர செட்டியார், கோ.ம. 'கொங்கு நாட்டு சோழர் வரலாறு', பக். 80
8. நாகசாமி, இரா.' செங்கம் நடுகற்கள்' தொ. எ. 1971, 124&100
9. இராசமாணிக்கனார், மா.' பெரியபுராண ஆராய்ச்சி' பக்கம் 74;
10. துரை மலையமான், 'திருக்கோவிலூர் வரலாறு', 1994, பக்கம் 18,
11. Epigraphic India Vol. VII. No. 19k.P.146.
12. Subburayalu, Y. 'Political Geography of the Chola country', Tamilnadu State Department of Archaeology, by. 1973. p.76.
13. Govindhaswami, M. S. 'The Role of Feudatory' page No. 37
14. S.I.I. Vol. XIII 63, 104
15. S.I.I. Vol. XXVI No. 172, 389, 399, 403, 407, 409, 411, 412, 413, 421, 422, 429, 432, 436, 440, 448, 453, 493, 939.
16. A.R.E. 1913/No.403, 461
17. A.R.E. 1934-35, No. 135 & part 11, para 15.
18. A.R.E. 1919-35, No. 240 & 298.
19. A.R.E.420 of 1909, 1902 of 251
20. A.R.E. 1934-35, No.225 & 216
21. Krishnaswami, A. 'Tamil Country under Vijayanagar' p. 43



1.கருவறை
2.முகமண்டபம்
3.அர்த்தமண்டபம்
4.மகாமண்டபம்
5.சண்டிகேசுவரர்
6.முதலாம் திருச்சுற்று
7.வி நாயகர்
8.சுப்ரமண்யர்
9.சோமாஸ்கந்தர்
10.நடராசர்
11.திருச்சுற்று
12.முன் மண்டபம்
13.பரிவாரக் கோயில்
14.முக மண்டபம்
15.மகாமண்டபம்
16.நந்திமண்டபம்
17.கொடிமரம்
18.பலிபீடம்
19.வி நாயகர்
20.வாயிற் கோபுரம்
21.இரண்டாம் திருச்சுற்று
22.கருவறை(அம்மன்)
23.அர்த்தமண்டபம்
24.முகமண்டபம்
25.அந்தராளம்
26.அர்த்தமண்டபம்
27.மகாமண்டபம்
28.நந்திமண்டபம்
29.சண்டிகேஸ்வரி
30.நவக்கிரகம்
31.யாகசாலை
32.திருக்குளம்

வியாக்கரபாதீஸ்வரர் கோயில் தரைபடம் – சித்தலிங்கமடம்

நிழற்படங்கள்

வியாக்கரபாதீஸ்வரர் கோயில் – யாகசாலை மண்டபம்

வியாக்கரபாதீஸ்வரர் கோயில்
இரண்டாம் திருச்சுற்றுப் பக்கத் தோற்றம்

வியாக்கரபாதீஸ்வரர் கோயில் – கிழக்குமுகத் தோற்றம்

வியாக்கரபாதீஸ்வரர் கோயில்
முதற்திருச்சுற்று வாயிற் முன்மண்டபம்

வியாக்கரபாதீஸ்வரர் கோயில்
கருவறை மற்றும் துவாரபாலகர்கள்

வியாக்கரபாதீஸ்வரர் கோயில்
மூலவர் நந்தி (ம) பலிபீடம் (அர்த்தமண்டபம்)

வியாக்கரபாதீஸ்வரர் கோயில்
தேவக்கோட்டத் தெய்வங்கள்

விநாயகர்



தட்சிணாமூர்த்தி



லிங்கோத்பவர்

பிரம்மா

விஷ்ணுதுர்கை

தட்சிணாமூர்த்தி

சப்தமாதர்கள்

நால்வர்

ஸ்ரீவத்ஸம்

தண்டாயுதபாணி

லிங்கம் மற்றும் உமாதேவி

விஷ்ணு

சுப்ரமணியர்

கெஜலட்சுமி

சூரியன்

விநாயகர்

லகுலீஸ்வரர்

நீலவிசாலாட்சி அம்மன் கோயில் பக்கத்தோற்றம்



காளி கோயில்

அங்காளம்மன் கோயில்

பாவாடைராயர் கோயில்

செப்புத் திருமேனிகள்

சோமாஸ்கந்தர்

விநாயகர்

முருகன், வள்ளி,தெய்வானை

சந்திரசேகரர்



மாரியம்மன்



காளி, சண்டிகேஸ்வரர்

மாணிக்கவாசகர்,
திருஞானசம்பந்தர்,
திருநாவுக்கரசர்,
சுந்தரர்